ஓம் பரப்ரஹ்மணே நம:

# அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

" எண்ணிய எண்ணியாங் கெய்துப; எண்ணியார்
COPY RIGHT] திண்ணிய ராகப் பெறின். " (திருக்குறள்.) [REGISTERED.

| | | |
|---|---|---|
| கமலம்-5. | சென்னை: பிரமோதூத ௵ கார்த்திகை ௴ 1௳ | இதழ்-56. |
| Vol. 5. | 1930-ம் ௵ நவம்பர் ௴ 16௳ | No. 56. |

## ஆநந்த  தர்சனம்

"ரோஜா புஷ்பத்திற்கு என்ன பேரிட்டாலும் அதன் வாசனை மாறாது." அது எப்பொழுதும் பரிமளத்தையே வீசிக்கொண்டிருக்கும். அதுபோல, இந்துக்கள் பரப்பிரம்மத்தை சிவன், விஷ்ணு, பிரமன், சுப்பிரமணியன், கணபதியென்று பலவிதமாய்க் கூறுகின்றனர். இதனால் இந்துக்கள் ஒரு தேவனை வணங்காமல் பல தேவர்களை வணங்குகிறார்களென்பது பொருந்துமா? பரமாத்மாவினிடம் பக்தி செய்வதற்கு நம்முடைய மனம் ஒரேவழியில் நிற்க வேண்டும். அதற்காக இந்துக்கள் எங்கே பார்த்தாலும் தேவாலயங்களைக் கட்டி, அங்கே விக்கிரகங்களை ஸ்தாபித்து, அவைகட்கு வேதமந்திரங்களால் பிராணப் பிரதிஷ்டை பண்ணி எல்லோரும் போய்த் தரிசிக்கும்படியான ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட விக்கிரகமும் கோயிலும் ஞானிக்கு அவசியமில்லை. ஏனெனில், ஞானி பகவத்ஸ்வரூபத்தை அறிந்திருக்கிறான். அப்படிப்பட்ட ஞானிகள் இக்காலத்தில் இருப்பது அபூர்வம். ஆதலின், கோயில்களுக்குப் போகவேண்டியது சகலருக்கும் அவசியம்தான்; விக்கிரகங்களை வணங்கவேண்டியதும் அவசியமே. விக்கிரகத்தில்தானா ஸ்வாமியிருக்கிறார், நம்முடைய மனதில் இல்லையா?—எனின், கோயிலில்தானா தேவன் இருக்கிறார்?—அவர் எங்கும் நிறைந்தவன்றோ?—அப்படியானால்

---

அதிக நோயால் வருந்துபவர்களிடமிருந்து கடிதம் வாராததற்கும், திட சரீரிகளிடமிருந்து கடிதம் வாராததற்கும் வித்தியாசம் உண்டா?—இல்லையா?

அவரை வீட்டிலிருந்தே தியானம் செய்யாமல், கடவுளை வணங்குவதற்கென்று அவரவர் மதப்படி அமைத்துக்கொண்ட பரிசுத்த கட்டிடங்களுக்குப் போய்த் தொழுவானேன் என்றும் கேள்வி யுண்டாகும். எனவே, அவரவரது முன்னோர் வழியிற் சென்று இறைவனை வணங்கி ஞானபுஷ்பம் பெறுவாராக.

ஃ

"சாற்றுவதொன்றைப் போற்றிக் கேண்மின்." கிறிஸ்தவர்கள் பிரமாண்டமான கோயில்களைக் கட்டி அங்குச் சிலுவையைச் சுத்தமாக எண்ணி வைக்கிறார்கள். நாம் விக்கிரகங்களை ஆலயத்தில் வைக்கிறோம். நாம் பிள்ளையார் சுழிபோட, கிறிஸ்தவர்கள் கடிதங்களில் சிலுவைக் குறியைப் போடுகிறார்கள். கிறிஸ்தவர்கள் சிலுவையைத் தரித்துக்கொள்கிறார்கள். நம்மவர்கள் லிங்கத்தைக் கட்டிக்கொள்கிறார்கள். நாம் ருத்திராக்ஷமாலையும் துளசிமாலையும் கொண்டு ஜெபம் செய்வதுபோல் கிறிஸ்தவர்களும் பலவித மணிகளைக் கோர்த்த மாலைகளுடன் ஜெபிக்கின்றனர். கிறிஸ்தவர்கள் மாதா கோயிலுக்குப் போனால், நாம் ஜெகதீசுவரியான அம்பிகையின் ஆலயத்திற்குப் போகிறோம். ஒருவேளை புரோடெஸ்டாண்டு பாதிரிகள் விக்கிரகங்களை வைத்துக் கொள்ளாமல் மனதினாலே தியானம் செய்கிறார்களென்றால், அவர்களும் தங்களுடைய மனதில் தேவனை ஒரு ரூபமாகப் பாவித்துத்தானே தியானிக்க வேண்டும்? நாம் தேவனை யோர் ரூபமாய்ப் பாவித்தது போதாதென்று எதிரில் விக்கிரகமாய் வைத்து ஷோடசோபசாரங்கள் செய்கிறோம். நமக்கு மூச்சுவிடாமல் உயிரோடிருக்கக்கூடிய பக்குவ முண்டானால் அப்போது விக்கிரகத்தை வணங்காமல் கடவுளை ஸ்தோத்திரம் செய்யலாம். இது முடியக்கூடியதா? ஈசுவரன் ஸர்வ வியாபகரென்று கதறும் பிற மதஸ்தர்கள் விக்கிரகத்தில் மட்டும் அவர் வியாபிக்கவில்லையென்று எவ்வாறு சொல்லக்கூடும்? சினேகர்களாயுள்ள இருவரில் ஒருவர் படத்தை இன்னொருவர் பெற்றுக்கொள்வது சகஜம். அதற்குக் காரணம் அப்படத்தைக் காணும்போதெல்லாம் நேசனைப் பார்த்ததுபோலிருக்குமென்றதனாலல்லவா? அதுபோல், நமது ஆசைக்குரிய பகவானைக் காண்பதற்காக நாம் விக்கிராகாராதனை செய்தே தீரவேண்டும். இப்படிச் செய்தாலன்றி தன்னைத்தானறியும் ஞானம் உண்டாகாது.

ஃ

"மாயையைத் தவிர்ப்பவனே முக்தன்." கடவுளையே நமக்குப் பிரியமான பொருளாக நாம் நினைத்துப் பக்தி செய்தால் அவருடைய பரம கருணையால் நம்மைச் சூழ்ந்துள்ள மாயை விலகிப் போம். மனுஷ்யன் இவ்வுலகில் தாமரை இலையைப்போ லிருக்கவேண்டும். தாமரை தண்ணீரிலேயே உண்டானாலும் அதனால் நனைகிறதில்லை. அதுபோல் மனுஷ்யன் உலகத்திலுண்டானது உண்மையானாலும், அவன் உலக வியாபாரங்களில் தன்னுடைய புத்தியைச் செலுத்தாமல் எல்லாக் கர்மங்களையும் ஈசுவரார்ப்பணம் செய்து தன்னுடைய ஹிருதயத்தையும் சரீரத்தையும் கடவுளின் காரியத்திற்கென்று கட்

---

சாமான்களை ஏற்றும்போது பெரிய வண்டியாகப் பார்த்துப் பேசு. சிறிய வண்டி இரண்டைவிட அதிக வாடகையில் பெரிய வண்டி ஒன்று மேல். அதன் வாடகை சிறு வண்டி யிரண்டினுடைய வாடகைக்கும் குறைந்தே யிருக்கும். ஒரே வண்டியில் யாவற்றையும் ஏற்றிவிடலாம்.

டிப் போட்டுவிட்டால் நிச்சயமாக மோக்ஷத்தை யடைவான். நமக்குப்பொருள் கிடைக்கவேண்டு மென்றும், நாம் சுவர்க்கத்தை யடையவேண்டு மென்றும் ஈசுவரனைப் பிரார்த்திப்பதைவிட, கடவுளே நமக்குப் பிரியகரமான வஸ்து வென்றும், அவரை யடைவதே நமக்கு உகந்த காரியமென்றும் மதித்து நாம் அவரை ஆராதிப்பது சிறந்த விஷயம். முக்தியை யடைவதற்காக முதலில் மாயையைத் தொலைக்கவேண்டும். மாயை யொழிவதற்குக் கடவுளின் கிருபை வேண்டும். அந்தக் கிருபையைச் சம்பாதிப்பதற்காக அவரைப் பிரார்த்திக்க வேண்டும். இவ்வாறு ஈசுவரனைப் பிரார்த்திக்கும்போது நம்முடைய மனம் சுத்தமாயிருப்பது அவசியம். அசுத்தமான ஹிருதயத்தை யுடையவர்களுக்கு ஈசுவர கிருபை யொருநாளு முண்டாகாது. ஆதலின், மனுஷ்யன் சுத்த மான ஹிருதயத்துடன் ஈசுவரனிடம் பக்தி செய்தால், அவருடைய கிருபை யின் ஆதாரவைக்கொண்டு மாயையை ஒழித்து முக்தனாகி பிரம்மாநந்தத்தை யனுபவிப்பான். ஃ

"உண்டேன்பார்க்குண் டில்லேன்பார்க்கில்." பக்குவமுள்ளவர்க்கன்றி வேதாந்தோபதேசம் ஏன் கூடாதென்னில்:—அதற்கு விடை இதுவே. எவன் வேதாந்த ஞானம் தன் சுகத்திற்கு அவசியமானதென் றறிகிறானோ அவன் தான் அதன் உபதேசத்தை அன்போடு கிரகிப்பான். எந்த விஷயம் மனதில் அவனால் கிரகிக்கப்படுகிறதில்லையோ அந்த விஷயம் மனதில் படுகிறதில்லை. மனதில் பதியாத வேதாந்தோபதேசத்தால் பய னென்ன? தவிர, பக்குவமி யல்லாதவருக்கு வேதாந்த உண்மையில் விசுவாச மிராது. விசுவாசமாவது நம்பிக்கை. எவனுக்கு ஒரு விஷயத்தில் நம்பிக்கை யில்லையோ, அதாவது விசுவாச மில்லையோ அவனுக்கு அந்த விஷயம் விகல்பமாகத்தான் புலப்படும். விகல்பமான விஷயமும் விசுவாசிக்கு விகல்பமற்றதாகத் தோற்றுவது சகஜம். ஆகையால், பக்குவமில்லாதவனின் விசுவாசமற்ற தன்மையானது அவன் அறி வைப் பேதப்படவைத்து, உண்மையை அவனுக்குத் தென்படாமற் செய்து மறைத்துவிடும். அதனால்தான் உண்டென்பார்க்குத் தெய்வம், வேதம் யாவும் உண்டு; இல்லையென்பார்க்கு எதுவும் இல்லாததாகவே தோன்றும் என்ற கருத்தடக்கிப் பெரியோர் கூறினர். விசுவாசமும் நம்பிக்கையுமற்ற ஒருவர் மற்ற மதங்களின் தத்துவங்களை யறியப்புகுவது முடிவில் விபரீத புத்தியை யுண்டாக்குமேயன்றி நன்மையைச் செய்யாது. இந்த லக்ஷணத்தில் மற்ற மதங்களின் தத்துவங்களை முற்றும் அறிந்துவிட்டதாகக் கொண்டு அம்மதத் தில் இன்னின்ன குற்றங்கள் இருக்கின்றனவெனத் தூற்றுவதிலும் இழிவு வேறில்லை. ஃ

"அத்வைதமும் துவைதமும்." அத்வைதம் என்றால் துவைத மல்லா தது, இரண்டற்றது, அதாவது பின்ன மில்லாதது என்று கருத்து. ஆனால், ஒன்றெனப் பொருள்படுத்தலாமோ வென்னில், கூடாது. ஏனெனில், ஒன்

---

வெகு அன்பும் உறவுமாய்த் தாளம் போடுகிறவர்களிடம் அவர்களுக்குத் தரவேண்டிய பாக்கிப் பணத்தை மட்டும் கொடாமல் பல கெடுவுகள் சொல் லிக்கொண்டு போ. அப்பொழுது அந்த அன்பும் உறவும் ஆகாசத்தில் பறந்து சலிப்பும், திட்டும், முகச்சுளிப்பும் குறைப்பேச்சுகளும் தாளம் கொட்ட முந் திக் கொண்டுவிடும்.

றென்னும் விவகாரத்தில் இரண்டு உண்டாகிறது. இரண்டின் விவகார மில்லாமல் ஒன்றின் விவகார மில்லை. ஒன்று இரண்டு என்று பலவற்றை எண்ணுகிற விவகாரங்கள் அற்றதே அத்வைதம். நான் வேறு, பிரம்மம் வேறு என்பது துவைதம். நானே பிரம்மம் என்பது துவைதாத்வைதம். எனெனில், அதில் நான் ஒன்றாயும், பிரம்மம் ஒன்றாயும், நானும் பிரம்மமும் ஒன்றாயும் காண்கிறதாகையினால் என்க. நான் பிரம்மமாயிருந்து என்னை யிழந்திருப்பது அத்வைதம். இக்கருத்தை ஒழுவிலொடுக்கத்தில் காண்க.

ஃ

"குழந்தையும் தெய்வமும் கொண்டாடு மிடத்தில்." அப்படியேதான் வேதாந்த ரகசியமும்; யார் சிரத்தையோடு அதை அபேக்ஷிப்பார்களோ அவர்களுக்குத்தான் அது தன் மர்மத்தை வெளியிடும். அதை அபேக்ஷியாவிட்டால் அது விலகிப் போய்விடும். இதனால்தான் என்னை ஆவலோடு ஆசிரயிக்காதவனிடத்தில் என்னைக் காட்டிக் கொடாதே என்று வேதரகசியம் முறையிடுவதாய்ச் சொல்லப்பட்டது. எப்படிக் கவுரவமுள்ள ஒரு மானஸ்தனை விவரமறியாத மிலேச்சர் கூட்டத்தின் நடுவில் பிரசங்கம் செய்யவிட்டு வேடிக்கை பார்ப்பது தகாத காரியமோ, அப்படியே உதாசினர்களிடத்தில் வேதாந்தம் உரைப்பதுமாகும். இதனால், "பாத்திரமறிந்து பிச்சையிடு, கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு" என்பதுபோல் கேட்பவர்களின் பக்குவத்தை யநுஸரித்தே உபதேசிக்க வேண்டுமென்பது கருத்து. எப்படி தனது அந்தரங்க பாரியாளிடத்தில் ஒளிக்கவேண்டிய ரகசியம் பர்த்தாவுக்கில்லையோ அவ்வாறே வேதத்துக்கும் தன்னை உண்மையாய் ஆசிரயித்தவனிடத்தில் மறைக்க வேண்டிய இரகசியமு மில்லை. "பிரம்ம—க்ஷத்திரிய—வைசிய—சூத்திர" என்னும் வருணாசிரம பேதங்களை வேதம் பாராட்டுகிறதில்லை.

ஃ

"யதார்த்தத்திற்கு மதிப்பில்லை." உண்மை யன்பினர்களை லக்ஷ்யம் செய்வதில்லை; பாசாங்குக்கார அன்பினர்களைத்தான் அதிகமாகப் பாராட்டுவார்கள். வாஸ்தவமாய் உழைக்கும் வேலையாளைத்தான் எஜமானன் சிடுசிடுப்பது வழக்கம். உண்மையான கடல் எதிரில் இருந்தும், நாடகத்தில் காட்டப்படும் கடற்காட்சியைக் காணவே பணத்தையும் செலவழித்துக்கொண்டு செல்வர். ஓர் ஊரில் நாயைப்போல் குலைக்கும் ஒரு மனித னிருந்தான். அவன் எங்கேயாவது போய்க் குலைத்தால் மற்ற நாய்களெல்லாம் அங்கு ஓடிவரும். அவைகளும் இவனுடன்கூடச் சேர்ந்து குலைக்கும். இப்படி நாயைப்போல் குலைப்பதில் இவன் வெகு பிரக்யாதியடைந்து அதையே தனக்கொரு ஜீவனோபாயமாக வைத்துக்கொண்டான். ஒவ்வொரு ஊருக்கும் சென்று பெரிய பந்தல் போட்டு இரண்டணா டிக்கட்டு வைத்து நாயைப்போல் குலைத்துக் காசு சம்பாதித்து வந்தான். இதனால் இவனுக்கு வரும்படி அதிகமாயிற்று. ஆயிரக்கணக்கான ஜனங்கள் டிக்கட் பெற்றுக்கொண்டு பந்தலுக்குள் வந்தார்கள்.

---

பூநாகி வைத்தியர் தம் வீட்டுக்குள்ளே போய் உட்கார்ந்து கொள்வதில் வெளியில் நின்று அவர் பெயரைச் சொல்லி நெடுநேரம் கூவவேண்டி யிருக்கிறதாம். பிறகு எவரேனும் வெளியில் வந்து அவர் வீட்டிலில்லையென்று சொல்லிவிடினோ பிணியாளியின் மனம் உடைந்து போகிறதாம்.—A. K.

இதைக் கண்ட ஓர் ஞானி தன் சிஷ்யர்களை நோக்கி, "அடா! உங்களுக்கு இன்றையதினம் ஒரு நற்பாடம் கற்பிக்கிறேன்" என்று தாம் அதே ஊரில் பந்தல் போட்டு, பணம் கொடுக்காமலே இனமாய் டிக்கட்டு பெற்றுக்கொண்டு இங்கு வந்து வேடிக்கை பார்க்கலாம்; அந்தப் பந்தலில் குலைப்பதைவிட இங்கே அதிகமாயும் சிலாக்கியமாயும் இருக்குமென்று விளம்பரம் போட்டு ஊர்முற்றிலும் பறை சாற்றுவித்தார். வெகு ஜனங்கள்வந்து சேர்ந்தனர். ஞானி ஓர் நாயைப் பந்தலுக்குள் இழுத்துவந்து அதைப் பிரம்பால் சுளீர் சுளீர் என்று பூசைபோட அது வாள் வாளென்று கதறி வெகுநேரம் குலைத்தது. உடனே அவர் ஜனங்களை நோக்கி—"பாருங்கள், அங்கே நாய்போல் மனிதன் குலைக்கிறான்; இங்கே பிரத்தியக்ஷமாக நாயே குலைக்கிறது; இது சிலாக்கியமான காட்சியன்றோ?" என்றார். ஜனங்கள் "இதென்ன அரிய காட்சி?" என்று பழித்துவிட்டுப் போய்விட்டார்கள். அப்போது ஞானி சிஷர்களை நோக்கி, "இப்போது கவனியுங்கள்; உலகம் எப்படி என்பதை. உண்மையைக் கண்டால் ஓடிப்போகிறார்கள்; பொய்யைக் கண்டால் கிட்ட நெருங்குகிறார்கள்; எதார்த்தத்தில் ஜனங்களுக்குப் பிரிய மில்லை; போலியில்தான் பிரியம் அதிகம்; அதனாலன்றோ போலி வைரக்கற்களாகிய கிளாஸுக் கற்களை ஜனங்கள் விரும்புகிறார்கள்; ஆத்மா உண்மை; அதுதான் யதார்த்த மனிதன்; அதைக் கவனியாமல் போலி மனிதனாகிய சரீரத்தைப் பெரிதாக நினைக்கிறார்கள்" என்றார். ஆகவே, நாம் உண்மைப் பொருளினிடத்து மதிப்புவைத்து அவ்வுண்மையிற் கலக்கும்படியான பக்குவத்தைப் பெறக்கடவோம்.

## என்ன மடமை யிது?

தன் மனைவியை ஆடவன் சந்தேகித்து, "அவனுடன் உனக்கு என்ன அதிக வார்த்தை?" என்னும்போது, "நான் எதும்பேசவில்லையே, இனி அப்படிச் செய்வதில்லை" யென்று தாழ்ந்து வணங்கி விடையளித்துவிட்டால் கலகமே இல்லை. அவ்விதமின்றி அந்த சமயம் அவள் தன் கணவனுடன் எதிர்த்துக்கொள்கிறாள். தன் கணவனால் சந்தேகிக்கப்பட்டவனின் பக்கமே சேர்ந்துகொண்டு "அந்த மனிதன் ஒரு பாவமும் அறியாரே" என்கிறாள். அவன்மீதுள்ள அபிமானமும், அவனுக்காகப் பரிந்துபேசும் தன்மையும், சந்தேக நோயால் வாதனைப்பட்டு வாடும் தன் கணவன்மீது வைப்பதேயில்லை. தன்னைச் சந்தேகித்து எப்படிச் சொல்லலாம் என்றுமட்டும் கோபம் ஒரு முழ நீளம் முன்னே பொங்குகிறது. கடைசியில் நேர்வது கொலையோ, படுகாயங்களோ, யாதோ? என்ன மடமை யிது?

# அமிர்தகுணபோதினி

பிரமோதூதஸு கார்த்திகை 1௳


## வாழ்வில்—தெய்வீக விடுதலை.

ஆம், . அது 'தெய்வீக விடுதலை' தான்; மனித சக்திக்கும் மீறிய ஒரு தனித்த சக்திதான். அந்த சக்தி அந்த சமயம் அங்கு சட்டெனத் தோன்றி, அப்பொழுது நேரவிருக்கும் ஒரு பெருங் குற்றத்தையோ, பழிபடு பாவத்தையோ, சிறை புக வைக்குஞ் செயலையோ சம்பவிக்க வொட்டாதபடி தவறச் செய்து காத்திடும் அற்புதம் பெரிது பெரிதே. இது இறைவனது தனிப்பெருங் கருணையால் நேரும் ஒரு ஆச்சரிய விடுதலையே. ஆனால், 'விடுதலை' யென்று மனிதன் அதை நினைத்துப் பார்ப்பதில்லை. அதற்குரிய பெரிய அறிவும், ஆற்றலும் அவனிடத்து இல்லை. ஆனால், தான் செய்தது பெரும் பிழையென்றும், தற்செயலாகவே தீங்கு விளையாது தப்புவித்ததென்றும் தன்னில் தானே ஒவ்வோர் தருணங்களில் உணருகின்றான். அந்த உணர்ச்சியும் அடுத்த நிமிஷத்தில் அழிந்து விடுவதால், தன்னைச் சூழ்ந்திருந்த திங்கினின்றும் தப்புவித்துக் காத்த கடவுளுக்குத் துதி செலுத்தவேண்டுமே யென்பதையும் நினையாது போகின்றான். இத் 'தெய்வீக விடுதலை' அவனவனது—அவளவளது—அதிர்ஷ்டத்தையோ, நற்காலத்தையோ பொறுத்ததாய் நிகழ்கின்றது போலும். ஆயினும் ஒன்று: இந்தத் 'தெய்வீக விடுதலை' மட்டும் மனுஷ்யர்களிடையே அடிக்கடி உண்டாகாவிடில், உலகில் முக்கால்வாசிப்பேர்கள் குற்றவாளிகளாகி அவர்களை யடைப்பதற்குச் சிறைச்சாலைகளே கிடைக்காமற் போய்விடவும் கூடும்; அல்லது உலக முழுதுக்குமே சிறைக்கூடங்களாகிவிடவும் கூடும். கடவுளின் தனித்த ஒரு சக்தியே மனிதனை இவ்வாறு பிழைபடாதபடி காத்துக் குற்ற வழியினின்றும் விலக வைத்து ரக்ஷிக்கின்றது. இந்த ரக்ஷிப்பால் அவனும் அப் பெரும் பிழையினின்றும் தப்புவித்துக் கொண்டு விடுகின்றான். இந்த ஸம்பவங்களெல்லாம் தற்செயலாகவே

---

இரவில் நாற்காலியின்மீது வெள்ளைத் துணியைப் போட்டுவிட்டுச் சென்று நடு நிசியில் எழுந்தவர், அது ஒரு ஆள் நாற்காலியின்மீது உட்கார்ந்திருப்பது போன்றதான தோற்றம் காட்டவே அங்கு வந்தவர் நடுங்கினராம்.

நேர்கின்றன. "தற்செயல்—" என்பனவெல்லாம் ஆழச் சிந்திப்பின்—அவை தெய்வத்தின் செயலே. ஃ

ஒருவன் ஒரு பாவ காரியத்தின் வழியே இன்பம் பெற நாடுகையில் ஏதோ ஒரு அச்சம் நெஞ்சில் தோன்றிப் பின்னடையச் செய்ய, அவனும் அந்தப் பாவப் படுகுழியில் விழாது தப்புவிக்கின்றான். ஒரு தீய காரியத்திற்கு ஒருவரை அழைக்கையில் அவரும் வாராமற் போக, அழைத்த விஷயமும் மற்றவர்க்குத் தெரியாமலே போக, இவனும் அதில் சிக்கிக்கொள்ளாது மீட்கப்படுகின்றான். கதவைத் தாளிட்டுவிட்டு ஒரு நங்கையைக் கெடுக்கத் துணிகையில், தாளிட்ட கதவை வீட்டுக் குடையவர் பலமாய்த் தட்ட, அதுவும் தற்செயலாய்த் திறந்துகொள்ள, அவர் உள்வர, இவனும் ஜாடையாய் ஒதுங்க, நடக்கவிருந்த விஷயம் எவரும் அறியாராகி, இவனும் குற்றத்தில் அகப்பட்டுக்கொள்ளாது தப்புவிக்க முடிகிறது. விதவையாகி வீட்டிலிருந்த பெண்ணை முறை கேடாக அவ்வீட்டிற்குடையோன் கற்பழிக்க முயல, அவளும் இவன் கைக்கு அகப்படாமல் வீடு முற்றம் ஓடி ஒளிய, இவனுக்குத் தன் வேலைக்குப் போகும் நேரம் வந்துவிட, "இரு உன்னை மாலையில் வந்து கெடுக்கிறே"னென்று சபதம் கூறி வீட்டை மூடிப் பூட்டிக்கொண்டு செல்ல, அதற்கு இடையில் இப்பெண்ணும் தற்செயலாய்க் கொல்லையின் கதவு திறந்திருக்கவே, அவ்வழியாக ஓடிவிட, மாலையில் அந்தக் காமி திரும்பிவந்து வீட்டில் அவளைக் காணுதவனுகி ஆத்திரப்பட, பன்னிரண்டு வருஷங்கட்குப் பிறகு, அதுவரையும் அவள் ஜீவித்திருந்து கற்பரசியாய் இரண்டொரு வாரங்கட்குமுன் இறந்தாளென்ற செய்தி இந்த மந்தமதிக்கு எட்டுகின்றது. அவளைக் கெடுக்கவிருந்த பெரும் பாவத்தினின்றும் இந்த மூர்க்கன் விலகுதற்குத் தற்செயலாகக் கொல்லைக் கதவு திறக்கப்பட்டிருந்ததே காரணமாகிறது. அதனுல் அந்தப் பாவத்தைச்செய்யாமல் இவன் மீளுகின்றான்.

ஃ

ஸகோதர—ஸகோதரி உறவுகொண்டு ஓரிடத்தில் துயின்றவர்கள், இரவின் விசித்திரமான செயல்களால் ஸகோதரியின் சித்தம் மாறுபட, ஸகோதரனே அதற்கு இடம் தாராது தூரவிலகி வேறிடத்தில் சயனிக்க, அப்போது நேரவிருந்த அநியாய விபசாரச்செய்கையும் தவறி இவ்விருவரும் அந்தப் பாவப் படுகுழியினின்றும் காக்கப்படுகின்றனர்.

ஃ

தமது கவிகளுக்கு ஸதா குறை பேசும் ஒட்டக்கூத்தரைக் கொல்லச் சென்ற கம்பர், அச்சமயம் போஜனத்திற்கு அழைக்கும்

---

காலையில் நான்கு மணிக்கு ஜில்லென்று வீசும் குளிர்ந்த காற்றின் மனேகாத்தை செயற்கையான மின்சார விசிறி தருமா? இயற்கையே உன்னதம்.

மனைவியை நோக்கிக் கம்பன் கவியிலுள்ள சுவை உன் சமையலுக்கு வருமோமென்று ஒட்டக்கூத்தர் கூற, அதைச் செவியுற்ற கம்பர் வெளிக்கு இகழினும், அந்தரங்கத்தில் தம் கவிகளைப் பாராட்டு வதை யுணர்ந்து நேராக ஒட்டக்கூத்தரிடம் சென்று தான் கொல்ல வந்ததைத் தெரிவித்துத் தழுவிக்கொள்கின்றார். கம்பர் அக்கொலைப் பாவத்தினின்றும் தற்செயலாகத் தப்பித் தெய்வீக விடுதலை பெறு கின்றார். அவர் கொலையாளி யாகாமல் தவறச் செய்தது தெய்வ அருளன்றோ? ஃ

மனதில் நிமிஷத்திற்கு நிமிஷம் தோன்றும் பாவ எண்ணங் கள் எத்தனை எத்தனையோ? அத்தனையும் அவ்வப்பொழுதே நிறை வேறி விடுவதாகில் ஐயையோ! மனிதர் எத்துணைக் கொடிய பாபிக ளாகிவிடுவர்? ஐம்புலன்களைப்போல அருகில் ஐவர் பர்த்தாக்களாக இருந்தும், ஆறுவதாக இன்னொருவர்மீதும் என் மனது செல்கின் றது என்றாள் பாஞ்சாலி. அவ்விதம் பாய்ந்திடும் மனத்தை யடக்கி நல்வழிபடச் செய்து குற்ற மிழைக்காது தப்பவைத்திடுவதும் தெய்வ அருளேயன்றோ? அது தெய்வத்தின் விடுதலையல்லால் வேறென்ன ? ஃ

கணவனுக்கும் மனைவிக்கும் நேருகிற சண்டையில், கணவன் ஒரு கனத்த பாத்திரத்தைத் தூக்கி அவள்மீது எறிய, அது சற்றுப் பிசகி, அவள்மேற் படாமல் மற்றோர் புறத்திற் சென்று விழுகி றது. அது அவள் நெற்றியிற் பட்டிருப்பின் அப்பொழுதே மரண காயம் உண்டாகவைத்துக் கணவனையும் போலீஸார் வசமாகச் செய்திருக்கும். அதில் அவள் உயிர் துறந்தாலோ இவனுக்குத் தூக்கு சிக்ஷை தவறாது. இப் பெருங் கொலையினின்றும் கணவன் தப்புவித்துக்கொள்ளல் ஆச்சரியகாமான தெய்வீக விடுதலை யன்றோ? ஃ

ஒரு சிறுவனை ஒருவன் ஓங்கி ஓங்கிக் கன்னத்தில் அறைய, அதில் அவன் சுருண்டுகொண்டு கீழ் வீழ்ந்து உயிர் துறப்பதா யின், அடித்த கோபிக்கு நீதிஸ்தலத்தில் மரண தண்டனை நிச்சய மே. அத் தருணம் அச்சிறுவனின் உயிர் போகாததில் அடித்த முரடனுக்கும் தப்புவித்துக்கொள்ள வழி வாய்த்துத் 'தேய்வீக விடு தலை' பெறுகிறான். ஃ

தன்னையும் மீறி எழும் கோப ஆக்கிரகத்தில், தன் கைக்கு அகப்பட்டவனின் கழுத்தைத் திருகிக் கொன்றுவிடப் பார்க்கும் வேளையில், அகப்பட்டுக்கொண்டவன் எவ்விதமோ தப்புவித்துக்

---

புருஷனுக்குத் தெரியாமல் ஜவுளிக்கடை போவது, துணிமணிகள் வாங்குவது, பெட்டியில் ரகசியமாய்ப் பணம் சேர்த்து வைப்பது இவையெல் லாம் உத்தமப் பெண்டிர்க்கு யோக்கியதையல்ல. கெட்டுப்போகவே வழி.

கொண்டு சென்றுவிட, கோபியும் அக்கொலைக் குற்றத்திற் காளா காது மீட்கப்படுகின்றான். இத் 'தேய்வீக விடுதலை' அவனது பெரும் பாக்கியமே.

ஃ

தான் நம்பிய நாயகி பிறரோடு கலவி நுகர்ந்து காம ஆயாஸத்துடன் உறங்குவதைக் காணும் கணவனின் உள்ளம் அவ்விருவரையும் கைக்கு அகப்பட்டதைக்கொண்டு கொன்றுவிட நாட, இவன் ஓசை கேட்டு அக் காமிகளும் விழித்து ஓடிப் பதுங்க, இவன் அவர்களைத் துரத்த, இடையிற் பலர் நெருங்கி இவனைப் பிடித்து நிறுத்த, அவ்வழியில் இவனும் தான் செய்வதற்கிருந்த கொலை பழியினின்றும் தப்பித் 'தேய்வீக விடுதலை' பெறுகின்றான். இவ்வாறு இவன் தடுக்கப்படாவிடில் அவ்விருவரும் கொல்லப்படுதல் கூடும்; அவ் வழியில் இவனுக்கு மரண சிக்ஷையும் வாய்க்குமன்றோ? இதனின்றும் இவனைத் தப்பவைத்திட்டது யார்? அது ஈசனே; அவரது இன்னருளே.

ஃ

பின்னும், சந்தேகத்தால் நேரும் கொலை பழி பாவங்களினின்றும் மனிதனைத் தற்செயலாகத் தப்புவிப்பதும் தெய்வ அருள் தாம். கோபத்தால் நேரும் கொலை பழிகளிலும் மனிதனைக் குற்றவாளியாகாதபடி தவற வைப்பதும் கடவுளின் கருணையே. அல்ப விஷயங்களே காரணமாகவும், சிறு சச்சரவுகளே ஏதுவாகவும், பணம் கடன் இவற்றின் மூலமாகவும் நேர்ந்துவிடும் பெருஞ் சண்டைகளில் கொலை பழிபாவக் குற்றங்கட்கு ஆளாகாது எவ்விதமோ அகஸ்மீகமாய்த் தவறச் செய்துவிடுவதும் தெய்வத் திருவருளே. ஒரு பெருஞ் சண்டை நடந்து முடியும் வரையில் அதில் உடனே ஓங்கிக் குத்திவிடக் கூடியவன் அந்த சமயம் அடுத்த ஊரில் இருந்துவிடுகிறான். மறுதினம் அவன் ஊர் வந்ததும் சண்டையிட்டவன் ஓடி மறைந்துவிடுவதால் இவன் எவ்வித குற்றச்செய்கைக்கும் உட்படநேராமல் தப்பித் 'தேய்வீக விடுதலை' பெறுகிறான்.

ஃ

நிலபலம், சொத்து, பாக உரிமை, கொடுக்கல் வாங்கலில் மோசம், ஏமாற்றம், என் சுவர்—உன் சுவர் என்பது போன்ற வியவகாரங்கள்—முதலியவற்றாலும் எத்தனையோ குற்றங்கள், கோபங்கள், கோரணிகள், விபத்துகள் சம்பவிக்கலாம். அதில் தான் சம்பந்தப்படாது தப்புவித்துக்கொள்ளத் தனக்கு இடம் கிடைப்பதாகில்—அது தெய்வீக விடுதலையே. இறைவனின் ஒரு தனிப்பெருங் கருணையே.

ஃ

இனி, வறுமை, சகித்தற்கரிய நஷ்டம், சொத்து நாசம், சிக்கலான வேளை, அபாயகாலம்—இவற்றினின்றுங்கூட மனிதன்

---

தப்புவித்துத் 'தெய்விக விடுதலை' காண்கின்றான். ஒரு பெருங் குடும்பி தன் வேலையைத் திடீரென்று இழந்து தவிக்க, உடனே அவனுக்கு வேறோரிடம் காட்டிக் கண்ணைத் துடைப்பது எவர்?— கடவுளன்றோ? இவ்விதமே ஒவ்வொரு பாடுகளிலிருந்தும் தப்ப வைத்துத் 'தெய்விக விடுதலை' பெறச் செய்வதும் தெய்வத் திருவருளே. ஒருவன் அன்பற்ற தாய் தந்தையர் ஸகோதரர்கள்—இவர்களிடமிருந்து பிரிந்து தன் பாகத்தைப் பெற்றுக்கொண்டு விலகிவிடுதலுங் கூட ஒரு 'தெய்விக விடுதலை'யேதான். ஃ

இனி, பெண்கள் வகையில் அவர்களுக்குள் நிகழும் பல சச்சரவுகளிலும் மருகியைச் சூடிடுதல் முதலான பலவற்றிலும் அச்செயல்களை அவர்கள் செய்யாதிருக்க வைத்துக் குற்றவாளிகளாகாவண்ணம் தப்புவிக்க எத்துணையோ தற்செயலான தடைகள் குறுக்கிடுகின்றன. அத்தடைகளால் அவர்கள் 'தெய்விக விடுதலை' பெறவும் வாய்க்கின்றது. ஃ

மாங்கல்ய பாக்கியம் பெண்களுக்கு நிலைத்திருக்கத் தெய்வத் திருவருள் எவ்வளவோ துணை புரிகின்றது. ஜீவனார்த்த நிமித்தம் வெளியிற் செல்லும் ஆடவர் மீண்டும் வீட்டை யடைவதற்குள் நேரவிருக்கும் பிராணாபத்துகள் அனந்தம். ரயில் முதலியவற்றில் உள்ளோருக்கு நிமிஷத்திற்கு நிமிஷம் ஆபத்துகளுண்டு. வீடு கட்டிக்கொண்டிருக்கையில் சுவர் இடிந்து, மேலுங் கீழும் இருந்து வேலை செய்தோர் மாள்வதும் உண்டு. எமனுடைய அவதாரமாய் விளங்கும் மோட்டார் விபத்துகளும் எண்ணில. தாகம் அருந்தவும் நீராடவும் நதி குளங்களில் இறங்கியவர்கள் தவறி விழுந்து மரிப்பது முண்டு. இன்னும் இவைபோன்ற ஆயிரம் விபத்துகளினின்றும் ஆடவனைக் காத்து மறுபடியும் அவன் மனைவியிடம் சேர்ந்திட வைப்பதும் தெய்வத் திருவருளே. இவ்விதமே, வீட்டினுள்ள பெண்மணிக்கும் சற்றுத் தவறின் சமையற்கட்டில் சேலையில் தீப்பிடித்துவிடுகின்றது; கிணற்றில் ஜலம் எடுக்கையில் கால் சற்றுத் தவறின் கிணற்றில் விழுந்துவிட நேர்கிறது; மாடியில் சாதாரணமாகச் சாய்ந்துகொண்டிருக்கையில் அச் சுவர் இடிந்து தானும் வீழ்ந்து படுகாயப்படலாம்; ஒரு வியாதியோ, ஒரு பிரஸவமோ ஒரு உயிரைக் கொள்ளைகொண்டு போகலாம். வண்டியேறிச் செல்லுகையிலும் அது ஒடிந்து விழுந்து அதனல் மரண காயங்களும் ஏற்படலாம். தினமும் பத்திரிகைகளில் எவ்வளவோ விபத்துகளை வாசிக்கிறோம். ரயில் வண்டிகள் மோதிக்கொண்டும், ஆற்றில் விழுந்

குழந்தையில்லையென்று மறுதாரம் கொண்டால், அவளுக்குக் குழந்தை பிறந்து குழந்தையோடு அவளும் கடவுளிடம் போய்விட, அந்தப் புதுவாழ்வு நீங்கி, பிறகு முன் அலக்ஷியம் செய்த மூத்தவளிடமே உண்ணும்படியாகிறது.

தும் பல உயிர்ச் சேதங்கள் நேர்ந்தனவென்றும், கப்பல்கள் நடுக் கடலில் மூழ்கி ஜனங்கள் ஸமுத்திரவசமாயின ரென்றும், ஆகாய விமானங்கள் வெடித்துப் பற்றி யெரிந்து அதிலிருந்தவர்கள் அப்படியே மாண்டனரென்றும் பத்திரிகைகளில் பார்க்கிறோம். இங்ஙனம் சூழ விருக்கும் எத்தனையோ ஆபத்துகளினின்றும் பிரதி தினத்திலும் ஒவ்வொரு பெண்மணியும் ஆடவனும் ஸதா விடுதலை பெற்றவாறாகவே உள்ளார். தற்செயலாக அவ்வப்பொழுது நேரும் சம்பவங்கள் அவர்களைத் தப்புவித்துக்கொள்ளப் பண்ணுகின்றன.

ஃ

இந்த மகத்துவமிக்க 'தெய்வீகவிடுதலை' யொன்றில்லையாயின், ஹா! மானிடர்களின் வாழ்நாள் எத்துணைப் பயங்கரமானது! பிணி தீர்க்க மருந்தே இல்லாதது போலாகிப் பரதவிக்க வைக்குமே! இத் 'தெய்வீக விடுதலை'யின் பாக்கியம் எக்காரணத்தாலோ சிலருக்கு வாய்க்கப் பெறாமல், அந்தோ! அவர்கள் கருகிய தீவினையைப் புரியவே நேர்ந்து, அதன் மூலம் குற்றவாளிகளாகிக் கடுஞ் சிறையுற்றும், மரண சிக்ஷை பெற்றும், ஜென்ம தீபாந்தரவாஸ தண்டனையடைந்தும், அத்தருணம் தங்களை எவரும் தடுக்காது போயினரே யென்று வாடிக் கதறியும் தவித்து அலங்கோலப்பட்டுப் போகின்றனர். அவர்களை நம்பிக்கிடந்த குடும்பங்களும் நடுத்தெருவிற்கு வந்து திகைத்துப் படாத பாடு படுகின்றன. இவர்களுக்குத் 'தெய்வீக விடுதலை' கிடைக்காமற் போனதேன்? ஈசனது அருள் இன்னோர் மீது வீசப் பெறாததேன்? அது அவரவரது பாக்கியம்—துர்ப்பாக்கியத்தின் வழியாய் அமைகின்றதோ யாதோ? (1) ஒருவன் ஆத்திரத்துடன் மற்றவனைக் கத்தியால் குத்திக் கொல்ல வருகிறான். தெய்வ அருள் அங்கு பூரணமாக இருப்பின், மற்றவன் ஓடிவிட, கோபியும் குற்றம் செய்ய இடமின்றித் தப்பிவிட, இங்ஙனமாக இவ்விருவரும் ஆபத்தினின்றும் காக்கப்படுகின்றனர். (2) தெய்வ அருளின் வேகம் அங்கு குறைவபடினே, கோபக்காரன் மற்றவனைக் கத்தியாற் குத்திவிட, காயம்மட்டும் ஏற்பட்டு, அதற்காகச் சிறைவாசமோ, அபராதமோ மட்டும் கோபக்காரனுக்குக் கிடைக்கின்றது. (3) இனி, அங்கு தெய்வ அருளே இல்லாது போயிருப்பினோ, கோபி தன் கத்தியால் மற்றவனைக் குத்தியபோது அப்பொழுதே அவனது உயிர் போய்விட, ஹா அகப்பட்டுக்கொண்டோமே, ஆத்திரப்பட்டுச் செய்துவிட்டோமே யென்று கோபியும் கலங்கி நடுங்குகிறான். பின் அரசாங்கம் அக்கோபியைக் கொலைக் குற்றத்திற்காகத் தூக்கி லிட்டுவிடுகிறது. இது தெய்வ அருளின் பரம விசித்திரம்! ஆயி

---

உனக்கு அதிகமாக உழைத்துவிட்டதாக மனப்பால் குடிக்கிறவனிடமிருந்து, பிறகு நீ எவ்வித வேலையையும் செய்ய வைத்துக்கொள்ளாதே. அது முதல் அவனும் தன் கர்வம் சுருங்கி அடங்கிவிடுவான்.

னும், இவ்வாறு துர்முகமாய் நேருவது அபூர்வமாகச் சிற்சில சமயங்களில்தான். "சிற்சில சமயங்களில்" என்று சொல்லப்பட்டாலும், தற்காலம் சிறைக்கூடங்கள் எல்லாவற்றிலும் மிருக சமானர்களாய்க் கிடந்து வாதனையுறுவோர் அனைவரும் இந்தச் "சிற்சில சமயங்களில்" தெய்வ அருளின்றிக் கேட்டினையடைந்தோர் தாம். எனினும், பெரும்பான்மையும் இறைவனது அருள் எங்கணும் வீசி, 'தேய்வீகவிடுதலை'யே பலருக்கும் கிடைத்து, அன்னோர் காத்து ரக்ஷிக்கப் படுகின்றன ரென்பது உண்மை. ஆண்டவன் நினைத்தால் ஆயுசுக்குக் குறைவா? துஷ்டர்களிட மிருந்தும், நன்றியற்றோரிட மிருந்தும், சுயநல வஞ்சக நண்பர்களிட மிருந்தும் பிரிந்து விலகிவிடுதலுங் கூட ஒரு 'தேய்வீக விடுதலை'யே. ஃ

தெய்வ அருளினை நல்வழியில் நடந்தே பெற்றிடவேண்டும். அக்கிரமவழிக்குக் கடவுளைத் துணைகூப்பிடுவோர் அழிந்தே படுவர். அநியாயம் செய்துவிட்டுக் கடவுள் காப்பாற்றுவார் என்று கருதுதல் மடமை. உலகை ஏமாற்றிவிட்டு ஏகபரம்பொருளின் துணை நமக்கு என்றென்றும் உண்டு என்று எண்ணுகை அவிவேகம். அடாதது புரிந்துவிட்டுப் பொங்கல்—பலி—காணிக்கை பிரார்த்தனைகளால் கடவுளை மயக்கிவிடலாமென்று நினைத்தல் மௌட்டியம். உத்தமமான சத்தியத்தின் பாதையிலே,—நம்மை அவரது சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்த பரிசுத்தமான வழியிலே,—நடந்தால்தான் 'தேய்வீக விடுதலை' கிடைக்க வசதி வாய்க்கும். அங்ஙனம் நடப்பவருக்கே தான் தெய்வத் திருவருளும் சித்திக்கும். என்றைக்கும் இறைவனின் அருட்பிரகாசம் நம்மைத் தொடர்ந்து நிலவுக. நம் வாழ்நாள் பரிசுத்தமான நினைவுகளுடன் பரிமளம் பெறுக. 'தேய்வீக விடுதலை' நமக்குப் பெருகி வளர்க. எஞ்ஞான்றும் அந்த மகத்துவ மிக்க 'தேய்வீக விடுதலை'க்கு நாம் உரியோரா யிருக்குமாறு இறைவனை வேண்டக்கடவோம். 'தேய்வீக விடுதலை' ஒரு தனி அருள். 'தேய்வீக விடுதலை' ஒரு பெரும் சக்தி. 'தேய்வீக விடுதலை' எவருக்கும் கிடைப்பதாக 'தேய்வீக விடுதலை' வாழ்க. அனைத்தும் அவன் அருள்.

---

சந்தோஷமாய் முன்வந்து செய்யாமல் வெடுவெடுப்புடனும் பாதிமனமாய்ச் செய்ய வருகிற ஒரு காரியத்தை நீ வேண்டாமென்று மறுத்துவிடு.

---

இவ்வுலகில் ஒன்றைப்போல இன்னொன்று அமையாது. அமைந்துவிட்டதாகப் பூரிக்கும் அல்ப மகிழ்வும் நீடித்திராது. சீக்கிரம் புதியதின் லக்ஷணம் தெரிந்துவிடும். தந்தையைப்போல இன்னொருவர் தந்தையாவரா?

---

சந்திக்காதே! சந்திக்காதே!! உன் முகத்தைக் காட்டாதே!!! ஏனெனில், சந்தித்த அந்த முதல் தடவையில் ஒருவர் முகம் ஒருவருக்குப் பிடிக்காவிடில் காகிதத்தில் காட்டிக்கொண்ட அன்பெல்லாம் மண்ணாகி மறந்து பிரிந்துப் போய் விடும்படியும் ஆகலாம். அதற்குப்பின் சந்திக்காமலும் போய்விடலாம்.

# பெண்களின் பேதமையான நினைவு

சில பெண்கள் கொக்கரக்கோ என்று கொக்கரித்துக் கொண்டு கூரை வீட்டின் மேல் ஏறித் தலைகால் தெரியாமல் தாண்டவ மாடுகிறார்கள். பிரபுக்கள் வீட்டில் பிறந்த பெண்களுக்குக்கூட இவ்வளவு திமிர்—தடபுடல் இராது. தான் தன்னை வளர்த்த அத்தை வீட்டுக்கோ, பெற்ற தாய் வீட்டுக்கோ போய்விடுவதாக ஆரவாரிப்பார்கள். அத்தையும் அப்பனும் தூக்கித் தரப் போவது ஒன்றுமில்லை யென்று பல தடவைகளிலும் பட்டறிந்த சங்கதியே. ஆயினும், தன் அத்தையும் அப்பனும் தன்னைத் தாங்கிக்கொள்ளுவார்களென்று இந்தத் திமிர்பிடித்த திலகங்களின் எண்ணம். புருஷன் தன் மனைவியினுடையவும், அவள் பெற்ற மக்களுடையவும் முழுப்பாரத்தையும் தாங்கிச் சுமக்கிற வரையில் தான், அத்தையோ அப்பனோ கிட்ட நெருங்கி, இனிக்கப் பேசி ஒரு மரியாதையும், பவிசும் வைத்துக் கொஞ்சுவார்கள். புருஷன் கண்மூடிக் கொண்டு எல்லாப் பளுவையும், அத்தையோ அப்பனோ சுமக்கும்படி வந்து விட்டால், அப்போது தெரியும் அத்தையும் அப்பனும் காட்டுகிற சிடுசிடுப்பும், வெடுவெடுப்பும், கேவலங்களும்! தங்கள் வீட்டுக்குவந்த நாலாம் நாளே தங்கள் வீட்டைவிட்டுப் போகும்படி கண்டிப்பாய்ச் சொல்லி விடுவார்கள். ஆப்பச் சட்டியுடன் அடுத்த தெருவில்போய்க் குடியிருந்து கொள்ளும்படி அனுப்பி விடுவார்கள்; அல்லது ஒரு இட்டிலிக் கொப்பரையை வாங்கிக் கொடுத் தொழித்து, இட்டிலி சுட்டு விற்றுப் பிழைக்கும்படி சொல்லித் துரத்தி 'சனி தொலைந்தது' என்று நினைப்பார்கள். இதுதான் உருக்கமுள்ள அத்தையும் அப்பனும் நாளைக்குச் செய்யப் போகிற மரியாதை. பிரதிதினமும் உலகத்தில் நடக்கும் அனுபவமும் இதுதான். அத்தையும் அப்பனும் வாரிக் கொடுத்துவிடப் போகிற சங்கதி புருஷன் இருக்கிற இப்போதே பல தடவைகளிலும் கண்டிருக்கிற நாடகங்கள்தான். எத்தனையோ கலகங்கள் வந்து பிரிந்தாச்சு! சேர்ந்தாச்சு! இந்த லக்ஷணத்தை யறிந்து கொள்ளப் புத்தியில்லாமல் புருஷனை விட அப்பனும் அத்தையும் உயர் வென்று கொக்கரித்து, "ஓ! நான் அங்கே போய்விடுகிறேன்" என்று ஆகாசத்திலே குதிக்கிறார்கள். அப்படி அத்தை வீட்டுக்கும் அப்பன் வீட்டுக்கும் எத்தனையோமுறை போய் நாறிக் கெட்டுத் திரும்பிய கதைகளை நினைக்கப் பொழுதில்லை போலும். இவ்வளவு குதிப்பும் பேச்சும் திமிரும் தாலிகட்டிய புருஷன் வியாதிப் படுக்கையில் கிடக்கும்போது அவனைப் பிடுங்கித் தின்னுகிற சங்கதிகள். இத்தகைய பெண்கட்டைகள் அவிப் பிறப்புக் கட்டைகளாகப் பிறந்து எவ்விதவிவாகமும் ஆகாமலே கிடந்து தொலைவார்களானால் உலகமும் இவர்களை விவாகம் செய்துகொண்டு தன்

---

**கணவன் தன் செய்கையைக் கண்டித்துப் பேசியதை—நாய் குலைக்கிறது, கழுதை கத்துகிறது, என்று மனைவி எண்ணுவாளானால் அந்தக் குடும்பம் சீர்படுவது எங்கே? அந்த மனைவிப்பேய் திருந்துவதும் ஏதே ?**

பப்படாமல் தப்பித்துக்கொள்ள முடியும். புருஷனைப் பிடுங்கித் தின்பதனுல் இந்தக் காதகிகள் அடையும் பலன் என்னவோ! பெண்ணைப் படைத்து நமனை என்செயப் படைத்தாய் என்று ஒரு புலவர் வினவியதும் அவர்கண்ட சொந்தமான அனுபவமே போலும்! கணவனுல்தான் தங்களுக்குத் தாலி பாக்கியம் என்பதைக் கொஞ்சம் பெண்கள் நினைத்துப் பார்க்கட்டும். அவனுள்ள வரையில்தான் சம்பாத்திய வரவும் வந்துகொண்டிருந்து குடும்பச் செலவுகளும் தீபாவளிகளும் தாராளமாக நடந்து கொண்டிருக்கும். அவன் கண்மூடிவிடினே, சம்பாத்திய வரவும் போய், வீட்டின் நிலைமையே முன் நினைக்காத புதுவிதமாய் மாறிவிடும். இதை நினைத்துப் பார்க்கப் புத்திவருவது எப்போதோ?

---

## உடன்பிறப்பின் உணர்ச்சி.

உடன்பிறப்பின் உணர்ச்சி அதி விசித்திரமான ஓர் சக்தி. ஒரே தாயின் வயிற்றில் பிறந்தவர்களா யிருந்தும், பரஸ்பரம் ஒருவரையொருவர் அறியாதவர்களாய்ப்பிரிந்து ஒருகாலத்தில் ஓரிடத்தில் ஒன்று சேரும்போது, முன்பின் காரணமில்லாமலே அவர்களுக்குள் ஒருவித பாசமும் பற்றுதலும் அன்பும் தோன்றிக்கொள்கின்றன. உயிரைக் கொடுக்கவும் தயாராகிறுர்கள். இது வெகு ஆச்சரியம்! தூரநாட்டில் தன் உடன்பிறப்புக்கு ஒரு கெடுதி எனில், உடனே தனது மனம் பயங்கரமாய் விகாரப்படுவதும் பல இடங்களில் நேர்ந்த சம்பவம். உடன்பிறப்பின் உணர்ச்சியால் தன் சகோதரனைக் காணவந்த சகோதரியோ சகோதரனே மறுதினமே புறப்பட்டுச் சென்றுவிட மனது சம்மதியார். பலநாள் இருக்கவே ஆசை தோன்றும். எத்தனை நாள் இருந்து புறப்படினும் பிரிவுக்கு வருந்தாதிருக்க முடியாது. ஆனுல், தன் உடன்பிறப்பாகயின்றி, தன் தந்தைக்கு மாற்றுந்தாயிடம் பிறந்த மக்களாயிருப்பின், அவர்கள் வெளி உபசாரமாகப் பார்க்க வருவதும், மறுதினமே புறப்பட்டுவிடுவதுமான சாதாரணத் தன்மையினராகவே காணப்படுவர். அவர்களுக்கு உடன்பிறப்பின் உணர்ச்சியோ, அதிலுள்ள ஒரு தனி ருசியோ தோன்றுவது சாத்தியமில்லை. ஆதலின், அவர்கள் பிரிந்து புறப்பட்டுச் செல்வதற்கு சிறிதும் வருந்தித்தவிப்பதில்லை. ஒரே தந்தைக்குப் பிறந்தாலுங்கூட இந்த பேதம் ஏற்பட்டுவிடுகிறது.

# விநோத கவிகள்.

கோவிற்பூனை தேவர்க்கு அஞ்சுமோ? சதா கோயில்களிலேயே பழகி, அங்கேயே தங்கள் வயிற்றுக்கான ஜீவனார்த்தத்தைத் தேடிக்கொண்டு, பிறருக்குப் புண்ணியம் கூடை கூடையாய் விற்கும் வழியில் ஜீவியம் செய்வோருக்குப் பெரும்பாலும் பக்தியென்பது அபூர்வமாகவே இருக்கும். அவர்கள் சுபாவம் அநேகமாய்ப் பின் சொல்லப்பட்ட மாதிரிதான்.

நீரில் முழுகும்போது பொருள்மே லாசை
    நிலையான கரையில்வந்தால் நிலமே லாசை
கூர்ந்துநெற்றி தனில்வெண்ணீ ரணியும் போது
    குறிப்பான மக்கள்பெண்டீர் சுற்றத் தாசை
ஊர்தனிலும் மந்திரங்க ளோதும்போது
    உற்ற பசியாகு மனதின்மே லாசை
பார்தனிலே தேவாரம் ஓதும் போது
    பலவிதமாய் மனமோடிப் பார்த்த தாண்டே.

## II

சித்தமுடன் ஜபதபங்கள் செய்தோ மென்பார்
    செப்புகிறேன் அவர்களின் செய்தி யெல்லாம்
கர்த்தனிட பாதமலர் நினைக்க மாட்டார்
    காடுசுற்றி யோடியபின் கலங்குவார்கள்
நித்தமுடன் நிஷ்டையிது நிற்க மாட்டார்
    நிலத்திலுள்ள ஆசையெல்லா நினைத்துக் கொள்வார்
சத்தமுடன் தேவாரங் கூகை போலும்
    சதாநித்த மோதிகுடி கெடுப்பா ராண்டே.

S. R. ஐயர், B. A., B. L.

---

அன்பை ஒரு பக்கம் அதிகம் உணர்த்திவிட்டு மற்றொரு பக்கம் தங்களின் பொருளை விலைக்கே தர முற்படும் பண ஆசை மிக்கோரும் உண்டு.

---

பணம் கேட்கும் நோக்கமாக வருபவன் உடனே அந்தப் பேச்சைப் பேசிவிட்டுப் போய்விடுவான். அன்பு நோக்கமாக வருகிறவன் அதிக நேரம் தங்குவான், விருந்து நோக்கமாக வந்தவன் நன்றாக உட்கார்ந்துகொள்வான்.

# பதங்களின் சேர்க்கை

(முன்பக்கம் 317-லிருந்து.)

96. சுசாதி, (சு—சொந்த)+(சாதி—வகுப்பு) சொந்த வகுப்பு.

97. சுடலை, (சுடு — கொளுத்து) மயானம்.

98. சுதத்தன், (சு—நல்ல)+(தத்தம்—கொடை) நற்கொடையுடையோன்.

99. சுதரிசனன், (சு—நல்ல)+(தரிசனம்—பார்வை) நல்ல பார்வையுடையோன்.

100. சுபாவம், "ஸ்வ" என்பதிலிருந் துண்டான—சு—என்பதற்கு "தன்" என்று அருத்தம். (பாவம்—குணம்) தன்னிச்சை.

101. சுபுத்தி, (சு—நல்ல)+(புத்தி--அறிவு) நல்லறிவுடையோன்.

102. சுமுகன், (சு—நல்ல)+முகம். முகவசீகரன்.

103. சுயம்வரம், (சுயம்—தானே)+(வரம்—நியமித்தல்.) தானாக அறிந்து மணமாலை இடுதல்.

104. சுள்ளாணி, (சுள்—அற்ப)+ஆணி. கடையாணி.

105. சோங்கை, (சேர்—குவிந்த)+(கை — கரம்) கைகொண்ட அளவு.

106. சேவகன், (சேவி—ஊழியஞ்செய்)+பணிவிடைக்காரன்.

107. சோமசன்மா, (சோமன்—சந்திரன்)+(சன்மன் — பிறந்தவன்) பிரகாசம் பொருந்திய சன்மத்தை யுடையவன். ('சன்மன்'—என்பது பிராமணனுக்கு ஓர் பட்டப்பெயராகவும் வழங்கும்.)

108. தந்துவாயன், (தந்து + நூல்) நெய்வோன்.

109. தபோநிதி, (தபம் — யோகம்)+(நிதி — நிறைவு) தபங்களுக்கு வைப்பு.

110. தமனகன், (தமம்—இருள்)+(அகம் — மனது) இருளுள்ள மனம். ஓர் நரியின் பெயர்.

111. திராணி, (திரணம் — இரட்சிப்பு) பலம்.

112. திவ்ய ஸ்திரீ, (திவ்யம்—தெய்வீகம்)+ஸ்திரீ. அழகுள்ள ஸ்திரீ.

113. தினமானம், (தினம்—நாள்)+(மானம்–அளவு) நாள்தோறும்.

114. தீங்குரல், (தீம்—இனிய)+(குரல்—ஓசை) இனியவோசை.

115. தீனி, (தின்—உண்) உணவு.

116. துஷ்டர், (துஷ்—கெட்ட)+(ஸ்தர் or தர்–இருப்பவர்) தீயர்.

117. துராத்மா, (துர்—கெட்ட)+(ஆத்மா — சுபாவம்) கெட்ட சுபாவமுடையோன்.

118. துர்மார்க்கம், (துர்—கெட்ட)+(மார்க்கம்—நெறி) தீயநெறி.

119. தூக்கணங் குருவி, (தூக்கு—தொங்கு) ஓர் குருவி.


120. தூசரன், (தூசரம் — நரை) நரைத்தவன்.

121. தேசாந்திரம், (தேசம்+நாடு)+(அந்தரம்—முடிவு) அந்நிய தேசம்.

122. தேவசன்மா, (தேவம்—சுவாமி)+(சன்மம்—பிறப்பு) தெய்வப் பிறப்புடையோன்.

(தொடரும்).

# பிரபலஸ்தர்களைப் பற்றி



அதோ தனியே போகிறார் பார். அவர் யார்? அவரை இன்னார் என்று எவருக்காவது தெரியுமா? அவரது சாமான்ய உடையும், தமது கை மூட்டையைத் தாமே எடுத்துக்கொண்டு ஏதோ ஒரு சாதாரணஸ்தர்போலச் செல்லும் பான்மையையும் உற்றுப் பார். அந்த உடையிலும் நடையிலுமே தம்மை யறிந்த உண்மையாளர்களை அவர் சந்திக்கிறார். அவர்கள் அவரது பொன்னடி பணிந்து வணங்கிப் பயபக்தியுடன் அவரது கட்டளைகளைக் கேட்டுக்கொள்கின்றார்கள். பிறகு விடைபெற்றுப் பிரிகிறார். அவரது சாமான்யத்தோற்றத்திலுங்கூட எவ்வளவோ கௌரவம் கொடுக்கப் படுகின்றது. இந்த மனஸ்பூர்வமான கௌரவம் புதிதாய்ப் பெரிய மனிதராகி ஆடம்பர உடைகளுடன் உள்ளோருக்குக் கிடைப்பதில்லை. அவரது பெயர் எங்கும் பிரபலமாகத் தெரியும். அப்பெயருக்குரிய திருமேனி இதுதான் என்பதை மட்டும் நேரிற் கண்ட சிலரே அறிவராதலின், எவரோ ஒரு வழிப்போக்கர் என்று மற்றவர்கள் நினைத்து விட நேர்கிறது. தாம் எவரை ஆவலுடன் காணவேண்டுமென்று நெடுநாளாகக் கருதியிருக்கின்றனரோ அவரே தமது வீதி வழியாகப் போய்க்கொண்டிருந்துங்கூட, அவரை அறிதற்கில்லாது ஏமாறுகின்றனர். இவ்விதம் ஜனங்கள் தம்மை யறியாதிருப்பதானது அந்தப் பிரபலஸ்தர்களுக்கு மற்றவர்களால் உண்டாகக் கூடிய உபசாரத் தொல்லையை நீக்கி, ஸ்வயேச்சையாய்ச் சாமான்யவகையில் விசாரமற்று ஸஞ்சரிக்க சௌகரியம் தருகிறது. தம்மை யறியாநிலையில் மற்றவர்கள் தம்மை அவமதித்தாலும், தமது பிரசித்த நாமத்தை அவர்கள் அவமதிக்க முடியாதாதலின் அதைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை.

ஃ

மிக்க பிரஸித்தி கொண்டுள்ள சிலரை அவர்களின் அருகில் உள்ளவர்கள் மதியாதது ஆச்சரியம்! அவர்களின் பந்துக்கள் பல விரோதங்கள் கொண்டு எதிர்ப்பதும் சாதாரண சம்பவம். அவர்களின் மனைவி மக்கள், சான்றோர் இவர்களெல்லாம் கேவலப் படுத்துவது ஒரு பெரிய வேடிக்கை. உங்களைச் சேர்ந்தவர் இன்ன இடத்தில் பிரபலஸ்தராய் வாழ்கின்றார்; அவர் தமது தங்கையையும், மற்றொரு பையனையும் விசாரித்து எழுதச் சொன்னார் என்று அவரது பந்துவினிடம் கூறினால், எல்லோரும் க்ஷேமந்தான் என்று நீங்களே எழுதி விடுங்கள் என்று அலக்ஷியமாய்ப் பதில் கூறுகின்றனர். நான் வரைவதிலும், உங்கள் கைப்படக் கடிதம் அனுப்புவது தூரதேசத்தில் தனித்திருக்கும் அவருக்கு அந்தக் கடிதம் ஒரு அமிர்த ஸஞ்சீவிபோல் ஆநந்திக்க

---

"என்னடி கெடுவாய்' உனக்குப் புது வாழ்வ வந்துவிட்டதோ? என்னடி முகத்தைப் பார்த்துப் பேசவும் முடியாமற் போயிற்று? கண்ணிலும் தொண்டையிலும் கொழுப்பு அடைத்துக்கொண் டிருக்கிறதோ?"—என்றான் தன்னை எதிர்த்துக்கொண்ட காதலியை நோக்கி ஒரு கண்ணாளன்.

வைக்கும் என்று வேண்டினால், அதற்கு நாங்கள் எங்கே எழுதுவது, நீங்களே எழுதிவிடுங்கள் என்பர். இத்தகையவரிடமே அவர் ஒரு நூறு ரூபா மணியாடர் செய்ய வேண்டுமாம், அதற்காக உங்கள் கைப்பட ஒரு கடிதம் சரியான விலாஸத்தோடும் தமக்குக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று எனக்கு எழுதியிருக்கிறார்; ஆகலின் நீங்கள் உடனே எழுதுங்கள் என்றால், அப்பொழுது எவ்வளவோ பரபரப்பாக அவர்கள் கடிதம் எழுதக் கூடுமல்லவா? எல்லாம் பணம் செலவிடுகிறவரையில், பை பையாய்த் தூக்கித் தருகிறவரையில், கேட்டதையெல்லாம் கொடுக்கிற வரையில், கொடுத்துக் கொடுத்து ஏமாறுகிற வரையில் பந்துக்களும் மற்ற அருகிலுள்ளோரும் பிரபலஸ்தர்களை மதித்துப் போற்றுவர். இவர்களின் போற்றுதலைவிட, தூர இருப்போர் மனஸ்பூர்வமாக மதித்துத் துதித்து விசுவாசித்து வைக்கும் கௌரவமே மேன்மையானது. அறிந்தார் அறிவார் அதனதன் அருமை.

---

## வாழ்க்கை பிசகிப்போனவர்கள்.

வாழ்வு தடுமாறிக் கைக்குக் கிடைத்த பாலைத் தவறி விழுந்துக் கீழே கொட்டிவிட்டவர்கள் அதுமுதல் புதுவிதமாய் மாறிவிடுகிறார்கள். அவர்களின் உலக ஆசையை வளர்ப்பதற்கிருந்த மனைவி மக்கள் மறைந்துவிட்டதால் தனிமரமாகி, இனி எவர் எப்படிப்போயினென்ன என்று கருதிப் பற்றுதல் நீங்கிவிடுகிறார்கள். இத்தகையோரைச் சிலர் சில காரியங்களுக்கு நம்பி, அவர்கள் அதைக் கவனியாதுபோக, அல்லது அறைகுறையாகச் செய்து விலகிவிட, அதற்காக அவர்கள்மீது கோபம் கொதித்து தாங்கள் கேட்டுக்கொண்ட காரியத்தை முடித்துத் தரவில்லை என்று குற்றம் சுமத்துகிறார்கள். தம் வாழ்வே தடுமாறிவிட்டுள்ள நிலையில் எவர் காரியம் எப்படியானால் எங்களுக்கென்ன என்று அவர்கள் சொல்லுகிறார்கள். உலகப்பற்றுதலற்றுப் போனவர்களைச் சிரத்தையுடன் ஒரு காரியத்தைக் கவனித்துச் செய்யும்படிச் செல்வோர் அவர்களின் பற்றற்ற தன்மையையும் கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும். அந்தப் பற்றுதல் தவறியவர்களும் ஆரம்பத்திலேயே தங்களை நம்பவேண்டாமென்று சொல்லிவிட்டிருந்தால் பிறகு எந்த வம்புவருத்தமுமில்லை. அப்படிக் கண்டிப்பாகப் பிகுவில் பேசிவிடவும் சாதாரணமாய் முடியாததால் முதலில் ஒப்பிப், பிறகு நடுவில் மெதுவாய் ஒதுங்கும்படி யாகிறது போலும்.

# பழமொழிக் குறிப்புகள்

## 3. இல்லறம்.

(446-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுமுதல் இல்லறத்தைக் குறித்த பழமொழிகளை சொல்லத் தொடங்குவோம்.

204. "நல்ல பெண்டீர் நல்லதைக் கண்டால்
நமது நாயகனுக்கு என்பார்கள்."

இது உத்தம ஸ்திரீகளின் லக்ஷணம். தங்களின் பர்த்தாவைத் திருப்தி செய்வதே அவர்களின் ஆவல். அதற்கே தாங்கள் ஜனித்திருப்பதாக அவர்களின் எண்ணம். தாங்கள் ருசித்து மகிழ்வதற்குமுன், அதைத் தங்களின் கணவர் புசித்து ஆநந்திக்கவேண்டுமென்று அவர்களின் மனம் விரும்புகிறது. நல்ல பதார்த்தமொன்றைக் கண்டால் அதைத் தங்களின் குழந்தைகளுக்ென்று வாங்கச் சிந்தை செல்வது பெற்றோர்களின் ஸ்வபாவம். தாங்கள் உண்ணாமல் குழந்தைகளுக்கு இடுவது அவர்களின் தன்மை. அவ்விதமே உத்தம ஸ்திரீகளும் நல்லதொன்றைக் கண்டால் அது தங்கள் பர்த்தாவுக்கு அதிகப் பிரியமானது என்று எண்ணி வாங்கிப் பத்திரப்படுத்தித் தங்கள் கணவர் வந்ததும் அதை அவருக்கு இட்டு அவர் உண்பதை ஆநந்தமாய்ப் பார்த்து மகிழ்வார்கள். அதன்பின் மிகுந்ததைத் தாங்கள் உண்டு களிப்பார்கள். கணவன் புசித்தபிறகே தாம் உணவுகொள்ளுகையென்பதும் உத்தம ஸ்திரீகளின் வழக்கம்; பெரியோர்களின் ஏற்பாடும் அதுவே. இவ்விதமாகக் கணவன் உண்டதற்குப் பிறகே உண்ணவேண்டுமென்பது அடிமைத்தனமாகுமென்று தற்கால நாகரீக நிபுணர்கள் வாதிக்கலாம். வீட்டில் சமையல் முடிந்திருந்தும் "பையன் பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் இலை போடு" என்று சொல்லித் தந்தை பசியுடன் அவனுக்காகக் காத்திருக்கிறார். இங்ஙனம் காத்திருப்பது அடிமைத்தனமாகுமோ? அந்தப் பையனுடன் சேர்ந்து உண்ண வேண்டுமென்ற ஆவலால்—அன்பால்—அவ்விதம் காத்திருப்பதன்றி அடிமைத்தனத்தாலன்று. மேலும், அவன் இல்லாமல் பதார்த்தங்களை வாயில் எடுத்து வைத்தால் விழுங்குவதற்கு மனம் சம்மதிக்கமாட்டேனென்கிறது. அவ்விதமே நல்லதொன்றைக் காணும் நங்கைக்கும் அதை அப்போதே புசித்துவிடுதற்கு, அது வாய்க்குள் போகமாட்டேனென்கிறது. அதைக் கணவனுருக்கு

---

கத்தரிக்காய்க் காம்பு பார்வைக்கு அழகாயிருப்பினும் இரண்டாக அறுத்த கிளாக்காய்க்குள்ளிருக்கும் விதையை எடுத்துவிட முடியாது. அதற்கு வேண்டிய கெட்டியான தன்மையும் அதில் இல்லை. ஒரு சிறு குச்சி அதை சுலபத்தில் எடுத்துவிடும். வெறும் அழகில் பலனில்லை. காரியமே முக்கியம்.

எடுத்து வைக்கவே தூண்டுகிறது. இது அடிமைப்பட்டுச் செய்கிற சங்கதி யல்ல. அன்பின்கண் சம்பந்தமாகித் தன்னை அறியாமலே இவ்விதமாக நடக்கவைக்கும் விஷயமாகும். இவ்விதமே, கணவனும்ஒன்றை வாங்கி அதைத் தான் உண்ணாமல் மனைவி பிரியமாகப் புசிப்பாள் என்று வீட்டிற்குக் கொண்டு வந்து தன் இல்லாளிடம் தருகிறான். இது அடிமைத்தனமோ? மனைவி பசித்தால் கணவனுக்கு முன்பு புசிக்கக்கூடாதென்றில்லை. ஆனால், புசிக்க அவளுக்கு மனம் செல்லுவதில்லை. அந்த மரியாதையைக் கணவனுக்குத் தான் தர வேண்டுமென்று அவள் ஆவலாதி கொள்ளுகிறாள். அவ்வளவே. இவையெல்லாம் ஒரு பெண்ணுக்குத் தன் பர்த்தாவின்மீது உண்மையான பிரீதி உண்டாகும்படிச் செய்யும் வழக்கங்களாகும். இல்வாழ்க்கையில் அன்பு கலந்து நின்றால்தான் அது பரிமளிக்கும். அந்த அன்பு நிறைந்த உத்தம ரமணிகளின் ஸ்வபாவத்தை இந்தப் பழமொழியானது குறிப்பிடுகின்றது. "நமது நாயகனுக்கு" என்று எடுத்துவைத்துப் பத்திரப்படுத்துவது அவன்மீது அவள் கொண்டுள்ள அளவுகடந்த ஆசையாலாகும். அருமையான பழங்களைக் கண்டதும் அவற்றைப் பகவானுக்கு வைத்து ஆராதிக்கவேண்டுமென்று ஓர் பக்தனுக்கு எண்ண முண்டாயிற்றும். இதுவும் அவாது பக்குவமான பக்தியால் உண்டான நினைவுதான். எல்லாம் அன்பின் சங்கதிதான். அன்பு இல்லாத ஸதிபதிகளின் சங்கதிகள்தாம் போலீஸ் ஸ்டேஷனில் பதிவாகின்றன. நீதி ஸ்தலத்தில் அவற்றிற்கு விசாரணையும் பிறகு ஒரு தீர்ப்பும் நிகழ்கின்றன.

205. "பரிவு இல்லாப் போசனத்திற் பட்டினி நன்று,
பிரியமில்லாப் பெண்டிரிற் பேய் நன்று."

தன் கணவனிடத்து யதார்த்தமான உள்ளன்பை வைத்து நடந்து கொள்வதுதான் உத்தமியான மனைவியின் லக்ஷணம். அந்த அன்பு அவளிடத்தில் இல்லாவிடில் அவளைக் கட்டிக்கொண்டு கதறுவதைவிட, பேயைக் கட்டிக்கொண்டு அழலாம். அவளுடன் வாழ்க்கை நடத்துவது எப்பொழுதும் துன்பமாகவே முடியும். எவ்வளவு நல்லவிதமாக நடந்துகொண்டாலும் அவளுக்குக் கணவனிடம் அந்தரங்க விசுவாசமே ஏற்படுவதில்லை. தன்னை விட்டால் வேறுபோக்கில்லை என்கிற எண்ணமும் அவளுக்கு வேறே. தான் ஒன்றை வேண்டியகாலத்துக் கணவனிடம் மிக இனிமையாய்ப் பேசித் தன் கருத்தை நிறைவேற்றிக்கொள்வதும், மற்றக் காலங்களில் கடுகடுப்பும் வெடுவெடுப்புமாகவே நிற்பதும் அவள் ஸ்வபாவமாகிவிடுகிறது. இதனால் இவள் வாரிக்கொள்வது என்னவோ? தனக்குக் கிடைத்த கணவனுடன் இசைந்து நடந்து இன்புற்றிருக்க என் புத்தி செல்லவில்லையோ? இவ்விதமானவளுடன் வாழ்வது எதற்குச் சமானமெனில், மனதார அழைத்து உண்ணும்படி உபசரியாமல் உள்ளே கடுகடுப்புடன் "இந்தா தொலைத்துக்கொள்" என்று இடுகிற

---

கணவனின் மனதிற்குத் தன் அமிர்த குணத்தால் பரிமளத்தைப் புகட்டி மகிழ்விக்காமல் தான் வீணே மல்லிகைப்பூச் சூட்டிக்கொள்வதால் யாது பயன்?

---

நாளை வந்தால் பாக்கியைக் கொடுத்துவிடுவதாய்க்கூறி, அவ்விதமே அந்த நேரத்திற்கு வந்தவர்களைத் தான் வீட்டில் இல்லை யென்று சொல்லி யனுப்பி விடுவது அதிகமாகப் பேர் வாங்கியவர்களிடம் கூட வழக்கமாக வுள்ளது.

உணவைவிடப் பட்டினிகிடப்பது மேலென்று எப்படிச் சொல்லும்படி யிருக்குமோ அதற்குச் சமானமாகவும் சொல்லலாம்.

206. "அடி என்றழைக்கப் பெண்டீர் இல்லை,
ஆண் எத்தனை பெண் எத்தனை என்றது போல்."

விதையே இன்னும் போடாதபோது காய் எத்தனை கனி எத்தனை என்பது எவ்விதம் பொருத்தமற்ற கேள்வியோ, அவ்விதமே 'அடி' என்றழைக்கப் பெண்ணில்லாதபோது ஆண் எத்தனை பெண் எத்தனை என்று வினவுவதும் அசந்தர்ப்பமான கேள்வியாகும் என்பதாம். இதனால் பெண் என்று ஒருத்தி ஏற்பட்டால்தான் "அடி" என்று அழைத்து அதிகாரம் செய்யவும், அவ்வித அதிகாரத்துடன் வீட்டிற்குத் தலைமை வகிக்கவும், ஆண் எத்தனை பெண் எத்தனை என்று சொல்லும்படி யாக மக்களைப் பெறவும் இவ்வாறான உலகவாழ்வும் செல்வமும்கூடி வரவுமாயிருக்குமென்பது இதன் உட்கருத்தாகலாம். பெண்ணால் குலம் விளங்குமென்பதும் வழக்கச்சொல். பெண் (மனைவி) உள்ள மனிதனுக்கும், பெண் இல்லாத மனிதனுக்கும் எவ்வளவு பேதம்?

(தொடரும்.)

## தெரிந்த மனிதன் கடை.

தெரிந்த மனிதன் உட்கார்ந்திருப்பதுகண்டு அவனுடைய கடைக்குச் சென்று ஒரு சாமானின் விலையைக் கேட்டால் அங்குள்ள வேலையாள் ஒன்றரையணா என்கிறான். அதை ஒரு அணாவுக்குக் கேட்கும்போது, அந்தத் தெரிந்த (!) மனிதன் தன் வேலையாளைப் பார்த்து இரண்டணா சொல்லவேண்டியதை விட்டு ஒன்றரையணா ஏன் சொன்னாய் என்று கண்டிக்கிறான். நம்மை முற்றிலும அறியாத கபோதியாகவே நடந்துகொள்கிறான். இதுதான் தெரிந்த மனிதன் கடைக்குப் போன லக்ஷணம். இவ்வித பவிஷியுள்ள தெரிந்த மனிதனின் கடையைவிட ஒரு அன்னியன் கடைக்குச் செல்வது மேல். அங்கு தாராளமாய் விலை குறைத்துக் கேட்கவும் தாக்ஷண்யத்துக்கு உட்படாமலிருக்கவும் முடியும். அலக்ஷியமும் ஏற்படாது. அவமதிப்பும் நிகழாது.

வீட்டு மோகம், பிள்ளையாசை இவற்றைக் கொண்டுள்ள வரையுமே அவனை ஹிம்சித்துப் பிடுங்கலாம். இவற்றை அவன் உதறிவிட்டு வெளியேறிவிடுவானாயின் மனைவி அவன் காலைப் பிடித்துக் கெஞ்சவேண்டியதே.

என்ன முன்போல வீட்டுக்கு வருவதில்லையே யென்றால், எங்கே அதற்கு சௌகரியப்படுகிறதில்லை யென்று தங்கள் புதுவாழ்வுப் பெருமையை ஆகாயத்தில் உயர்த்தி மஹா கௌரவமாகச் சொல்லிக்கொள்கிறார்கள்.

# கவிதா  விலாஸம்

## ஓர் கிழவனுற்ற சௌக்கியங்களும், அவன் அவற்றை எவ்வாறுற்றா னென்பதும்.

[ஒருவர் முதுமையும் தளர்ச்சியும் வந்த காலத்தில் தளர்வடையாமல் திடகாத்திரராய் மனமகிழ்ச்சியுற்றிருப்பதற்கும், தளர்ச்சியடைந்து நோயுழந்து வருந்தியிருப்பதற்கும்—அவரவர் பாலியத்தில் நடந்துகொள்ளும் நடத்தையும் செய்யும் காரியங்களுமே காரணம். இந்த உண்மையை எடுத்து விளக்கப் பின்வரும் பாடல்கள் இங்குத் தரப்பட்டுள்ளன. முதுமைப் பருவத்தில் நோய் நொடியில்லாமல் சுகமாகக் களித்து வாழவிரும்பும் இளைஞர்களுக்கு இந்தப் பாடல்கள் அதற்கேற்ற உபாயத்தைப் போதிக்கின்றன. இது ஒரு கிழவனுக்கும் இளைஞனுக்கும் நடந்த சம்பாஷணையாகக் கூறப்பட்டுள்ளது. இளைஞன் கேட்கக் கிழவன் விடை பகர்கின்றான்.]

1. ஐயநீ நோக்குமின் முதுமை யார்ந்தனை,
நையலில் முடிமயிர் நரைத்த தாயினும்,
மெய்யுறு வலியொடு மேனி தேய்ந்திலாய்;
செய்யவிவ் விசித்திரம் செப்பு வாய்கோலோ?

[நீ முதுமையடைந்து முடிமயிர் நரைத்தாயாயினும் தேகவலிமையும் திடகாத்திரமும் இழந்தாயில்லை; இதற்குக் காரணம் யாது?

2. செப்புவன்; இளமையாற் சிறந்த நாட்களில்,
ஒப்பறும் அவைவிரைந் தொழித லோர்தலால்,
கைப்படு வலியுநற் சுகமும் கண்டவா,
பிறபொழு தயர்ந்திடப் பிதிர்த்தி லேனரோ.

[இளமைப் பருவத்தில் இளமையானது நிலையற்றதென் றறிதலினாலே என் பலத்தையும் சுகத்தையும் துர்விநியோகத்தில் போக்கிக்கொள்ளவில்லை. அதுதான் இந்த முதுமையிலும் வலிமை பெற்றிருப்பதற்குக் காரணம்.]

3. அத்தநீ ஆய்ந்திடின் முதியை ஆயினும்,
போத்திய மகிழ்வெலாம் இளமை யோடுபோம்
சத்திய மாயினும், தணந்த நாட்களுக்
கேத்தனை யேனுமேன் னிரங்கி லாயரோ?

---

படிப்பு பிரமாதமாக இருக்கலாம். ஆனால் அது உண்மையான அன்பை உண்டுபண்ணாது. எழுத்தறியாரிடத்தும் எத்தனையோ யதார்த்த அன்பு இருக்கிறது. படிப்பு வேறு சங்கதி, அன்பு வேறு சங்கதி.

[நீயோ கிழத்தன்மையை அடைந்தாய். மகிழ்ச்சியோ இளமையோடும் போம். ஆயினும் நீ சென்ற நாட்களை நினைத்து ஏன் வருந்தவில்லை ?]

4. சாற்றுவன் இளமையைச் சார்ந்த நாள்சில,
ஏற்றவை கழிந்திடும். என்ன ஓர்கலால்,
தோன்றிடும் நாட்களிற் றுயரு றுவகை,
ஆற்றுநற் செயல்களை அறிவின் ஆற்றினேன்.

[இளமையானது நிலைநில்லாதென் றறிதலினாலே, பின் அதை நினைந்து வருந்தாதபடி, செய்யும் காரியங்களைச் செவ்வையாகச் செய்தேன்.]

5. தாதரீ முதுமையைச் சார்ந்தை; சாய்ந்தினி
ஓதிய உயிர்விரைந் தோடு மாயினும்,
தீதறு கனிப்போடும் சேரும் மாய்வினைப்
பேதுற வின்றியே பேச லென்னையோ ?

[நீ முதுமையை அடைந்தாய்; இனி நீ வெகு நாளிருக்கப் போகிற தில்லை; ஆயினும் உற்சாகமாயிருக்கிறாய்; மரணத்தைப்பற்றிச் சஞ்சலமின்றிப் பேசுகின்றாய். அதெப்படி ?]

6. உறைகுவன் அகங்களித் திருக்கும் காரணம்,
நிறைகுணத் தருளோடு நிரம்பு மீசனைப்
பெறவரும் இளமையிற் பேணல் தீர்ந்திலேன்,
இறைவனும் மறந்திலா னென்னை யின்றரோ!

[நான் அகமகிழ்ச்சியோ டிருப்பதற்குக் காரணம்—பால்யத்தில் தெய்வ பக்தியும், ஈச்வர சிந்தனையும் கைவிடாமல் கடவுளை வழிபட்டு வந்ததனால், அக்கடவுள் என்னை முதுமையடைந்த இக்காலத்தில் கைவிடாமல் ஆதரித்து வருகின்றார்.]

S. M. A.

## உழைப்பின் அவசியம்.

"மனிதன் தனது புஜபலத்தைக்கொண்டு உழைத்துத் தனது ஜீவனோபாயத்தை நடத்தவேண்டும்.''.........
"வேலை செய்யாதவன் எப்படிச் சாப்பிட உரிமை பெற முடியும்?'' நெற்றி வியர்வை நிலத்தில் விழும்படி பாடுபட்டு உனது உணவை உணவை உட்கொள்ளு'' என்று பைபிள் கூறுகிறது.........தெய்வீகமான சட்டத்தை மீறி நடக்கா விட்டால் (உழைப்பு என்பதை விட்டுவிடாதிருந்தால்) கிழவர்கள் திடசரீரிகளாக இருப்பார்கள்; மானிடருக்கே வியாதி வருவது அபூர்வமாக இருக்கும்.

(மஹாத்மாவின் வாக்கு.)




## அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு போவது.



இன்று கூடிய நமது கடையில் ஏமாந்த எல்லப்ப செட்டியார், வந்தது விழுங்கியான வையாபுரி செட்டியாரை வயிற்றெரிச்சலுடன் பார்த்து “அகப்பட்டதைச் சுற்றிக்கொண்டு போவது”—என்னும் விஷயமாய் ஒரு பெரிய பிரசங்கம் செய்துவிட்டார். அது பின்வருமாறு :—

“ஐயா! வையாபுரி செட்டியாரே! கௌரவ கொள்ளைக்காரரே! “இது உங்களுக்கு என்னத்திற்கு? நான் கொண்டு போகிறேன்?” என்று கையில் அகப்பட்டதை மெதுவாய்ச் சுற்றிக்கொண்டு போகப் பார்க்கும் என் அன்பரே! ஒன்று கேளும். எனக்கு உபயோகமோ, உபயோகமில்லையோ, என்னுடையதை என்னிடத்திலேயே கிடக்கும்படி விட்டுவிடுங்கள். உங்களுடைய வீட்டிற்கு வந்து உங்களுடையதை நான் எடுக்கிறேனா?—இல்லை. அதுபோல் என் வீட்டில் கிடப்பதைப்பற்றி அது எனக்குத் தேவைப்பட்டதா—இல்லையா என்ற ஆராய்ச்சியை நீங்கள் செய்யவேண்டாம். கைக்குக் கிடைத்ததைக் கொண்டுபோய் விடவும் வேண்டாம். பயனுள்ளதோ இல்லையோ என்னிடமே அது கிடந்தால் எந்தக் காலத்திலாவது ஒரு சமயம் எனக்கு உதவக்கூடும். என் அருகில் கிடந்து எனக்கு உதவக்கூடியது போல், உங்களுக்குத் தூக்கிக் கொடுத்து உங்கள் வீட்டிற்குக் கொண்டு போய்விட்ட என்னுடைய ஒரு பொருளானது எனக்கு ஒரு நாளும் உதவப் போகிறதில்லை. காதற்ற ஊசியும், பல்லுப்போன சீப்புங்கூட என்னிடம்கிடந்தால் எனக்கு எதற்காவது உதவும். உங்களிடம் கொடுத்துவிட்டால் என் வேளைக்கு எனக்கு உதவாது. ஆதலின், என்னிடம் கிடக்கும் எதையும் தாங்கள் கேட்கவும் வேண்டாம். நான் தர முடியாதென்றோ, தருவதற்குப் பின் வாங்கித் தவித்தோ படுகிற கஷ்டத்தையும் எனக்குஉண்டாக்கவும் வேண்டாம். இது உங்களுக்குக் கோடி புண்ணியமாகும். ”

அதைச் சும்மா கொடும் என்று இனாம்வகையில் கேட்கிறீர்கள். எதுவும் கைக்காசு போட்டு வந்ததுதான். இலவசத்தில் வந்தது எதுவும் இல்லை. ஒன்றிரண்டை இலவசத்தில் நாங்கள் பெற்றதாக நீங்கள் சொன்னாலும், அதற்குப் பதிலாக எங்கள் சரக்கை நாங்கள் இனாமாகக் கொடுத்தே அதைப் பெற்றிருக்கலாம். எதுவும் சும்மா வந்துவிடுவதற்குத் தெருவில் கிடக்கிற மண் அல்ல. இந்த

---

தேர்தலில் வெற்றிபெற்றவர் முகமும், ஏமாறித் தோல்வியடைந்தவர் முகமும் ஆ! எவ்வளவு பேதம்! என்னவோ கௌரவ ஆசை! யாவும் சுயநலம்!

வகையில் தங்களுக்கு நாங்கள் இனும் கொடுப்பதில் எங்களுக்கு வரும் லாப மென்ன? இதுவரையில் நாங்கள் உங்களுக்கு இனும் கொடுத்து அடைந்த பிரயோஜனங்கள் என்னென்ன? நாங்கள் ஒன்றை எடுத்து இனமாகக் கொடுப்பதும், தாங்கள் அதற்காக அழகிய பற்களைத் திறந்து புன்னகை காண்பித்துவிட்டு மெதுவாக நழுவிவிடுவதுமான சங்கதிக்கு மேலாக ஏதேனும் உங்களால் எங்களுக்குப் பிரயோஜனம் உண்டாயிருக்கிறதா? நீங்கள் எங்களிடம் இரவல், இனும் கேட்பதுபோல் உங்கள் வீட்டுச் சாமான்களில் ஏதாவது இரவல் இனும் நாங்கள் கேட்டிருக்கிறோமா? உங்கள் வீட்டுச் சொத்துக்களில் நாங்கள் ஏதாவது கைக்கு அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு போயிருக்கிறோமா? உங்களிடமிருந்து ஏதாவது சாமான் பெற்றால் அதற்கு உண்டான கிரயத்தை அவ்வப்பொழுது கொடுத்துவிட்டே அதைப்பெற்றிருக்கிறோம். ஒரு சிறு தகர டப்பியானாலும்கூட அதற்கும் அதன் கிரயம் கொடுத்திருப்போம். உங்கள் கடைச் சாமான்களில் எதையும் இனமாக நாங்கள் கொண்டதில்லை. ஒவ்வொன்றுக்கும் விலை கொடுத்தே வாங்கியிருப்போம்.

ஃ

இப்படியாக உங்கள் சாமான்களுக்கு மட்டும் விலை போட்டுக்கொள்வதுபோல எங்கள் சாமான்களுக்கும் விலை போட்டுப் பார்க்கவேண்டாமா? எங்கள் சாமான்களுக்கு மட்டும் விலை கிடையாது, அதை இனமாகக் கேட்கலாம்; உங்கள் சாமான்களுக்கு மட்டும் விலையுண்டு என்றால் அது என்ன ஒழுங்கு? உங்களின் வியாபாரக் கடை போலவே, இதுவும் எங்களின் வியாபாரக் கடை. இங்கு ஆயிரம் சிந்திக் கிடக்கலாம். அவற்றையெல்லாம் நீங்கள் சுற்றிக்கொண்டு போகப் பார்ப்பதென்றால், இவ்விதமே உங்கள் வீட்டிலும், கடையிலும் சிந்திக் கிடப்பதை நாங்கள் சுற்றிக் கொண்டு போவதற்கு நீங்கள் ஒப்புவீர்களா? உங்களின் சொத்துபோலத்தானே மற்றவர்களின் சொத்தும் அவர்களுக்கு அருமையாக இருக்கும். உங்கள் சொத்து தங்கம்; மற்றவர்களின் சொத்து ஆற்றில் போகிற ஜலமா? அதை அப்பா குடி, ஐயா குடி, இலவசத்தில் வந்தது—நன்றாக வயிறு நிரம்பக் குடி என்பதா?

ஃ

நாங்கள் ஒன்றை இனமாக உங்களுக்குக் கொடுத்துவிட்டு எங்களிடம் இருந்த அந்த ஒன்றை இல்லாதபடிக்குச்செய்து நஷ்டப்படுத்திக்கொண்ட முட்டாள்தனத்திற்குப் பிறகு, எங்களுக்கு ஒரு சமயம் அது வேண்டியிருந்து உங்களைக் கேட்டால் ஏழேழு ஜென்மத்தில் எந்த ஜென்மத்திலாவது நீங்கள் அதை எங்களுக்குக் கொடுப்பீரா? ஒருபோதுமில்லை. மெதுவாக நழுவிவிடுகிற சண்டாளராகவே அப்போது இருப்பீர். எதற்காகப் பிறர் சொத்துக்கு நீங்கள் ஆசைப்பட்டு அவர்களை ஏமாற்றி—மயக்கி, இனிக்கப் பேசி, பல சம்பாஷணைகளடித் தளுக்கு செய்து—கொண்டுபோகவேண்டுமோ? பிச்சை எடுப்பதிலும் கேவலமான—மோசமான—இழிவான— ஏமாற்றுதலான ஒருவரின் தலையில் பட்டுக் குல்லா

---

நான் சேர்மேனு யிருந்தேன், அப்படி இருந்தேன், நின்றேன் என்று தமது பெருமைகளை எல்லாம் தேர்தலின்போது சொல்லுகிறவர்கள் அவர்களின் மூர்த்திய பதவியை வகித்து வாழ்ந்த காலத்தில் ஜனங்களுக்கு என்ன வாரி இறைத்துவிட்டார்களோ? என்னவோ அவரவர்கள் பிழைக்கிற வழி!

போட்டுக் கொள்ளை யடித்தலான நீசத்தன்மை கொண்டதாய் இருக்கிற இந்தப் புத்தியை இனியாவது விட்டுவிடுங்கள். ௸

ஊரார் உடமைக்குப் பேயாய் அலையாதீர்கள். இரவல் வழியில் "அமுக்கி"க்கொள்ள நினைப்பதும், இனாம் வழியில் சுற்றிக்கொண்டு போய்விடப் பார்ப்பதுமான சண்டாளப் புத்தியை விட்டுவிடுங்கள். ஒரு "குடியரசு" பத்திரிகையை மெதுவாகச் சுருட்டிக்கொண்டு போகப் பார்க்கிறீர். அதன் கிரயம் ஒரு அணா என்பதை உங்களின் கபடமான—ஏமாற்றுத்தனமான நெஞ்சில் வாங்கிக்கொள்ளுங்கள். இங்கேயே உட்கார்ந்து வாசிப்பதானால் எந்த ஆக்ஷேபமுமில்லை. அவ்விதமின்றி அதோ கிடக்கும் "சுதேசமித்திர"னையோ, வேறு மாதப்பத்திரிகை, புஸ்தகம் எதையோ மெதுவாக மோசடியாக மயக்கி எடுத்துக்கொண்டு போய்விடப் பார்ப்பதென்றால், உங்கள் கடையிலுள்ள சுருட்டு நெருப்புப் பெட்டிக்கு விலைபோட்டுப் பார்ப்பது போல, அதற்கும் விலைபோட்டுப் பாருங்கள். அந்த விலையில் பாதியாவது தந்துவிட்டுப் பிறகு கொண்டு போக உங்களின் கபடமான சண்டாள மனம் ஒப்புமா? மெதுவாக இலவசத்திலேயே தான் சுருட்டிக்கொண்டு போகப் பார்க்கும். இனியாவது இந்தச்சண்டாள புத்தியையும் பிறருடைய பொருளை இரவல் கொடுங்கள் என்றும், இனாமாகக் கொடுங்கள் என்றும் கேட்டுக் கொண்டு போய்விடுகிற மயக்கடி வித்தையையும் விட்டுவிடுவீர்களா? இதைப் படித்த பிறகேனும் உங்கள் நெஞ்சில் உங்கள் செய்கை அநியாயமென்று படுமா? உங்களுடைய ஏமாற்றும் புத்தி உங்களைவிட்டுப் போகுமா? நீங்கள் இரவல் இனாம் கேட்கப்போய் எவ்வளவோ நல்ல புஸ்தகங்கள், பத்திரிகைகள், நல்ல வஸ்துக்கள் கைவிட்டுப் போய்விட்டன. அவன்தான் பொடி போடுவதை விட்டுவிட்டேனென்று சொன்னால், அந்தப் பொடி டப்பியை என்ன செய்தாய். என்று கேட்கிறீர். அந்த டப்பியை மெதுவாகச் சுருட்டிக்கொண்டு போய்விட எண்ணமா? அதன் விலை எட்டணா. அவனிடமே கிடந்தால் எப்பொழுதாவது ஒரு சமயம் அவனுக்கு உதவும். உமக்குத் தூக்கிக் கொடுத்துவிட்டால் பிறகு அவனுக்கு உதவுமா? எட்டணா விலையுள்ள அந்த டப்பியை ஐஞ்சணாவுக்காவது அவன் விற்றுவிட்டுத் தன் வீட்டுச் செலவுக்கு அந்தப் பணத்தை உபயோகப்படுத்திக் கொள்ளக்கூடும். உமக்கு அதைக் கொடுத்துவிட்டால், அவன் வீட்டுச் செலவுகளுக்கு நீர் கொடுப்பீரா? ஒரு காசு தான் தருவீரா? சுருட்டிக்கொண்டு போகிற தன்மை யுள்ளவர்களுக்குப் பணப்பையைத் திறந்து பணம் தர மனம் வருமா? ௸

எவ்வளவு புஸ்தகங்கள், பத்திரிகைகள், சாமான்கள் இங்கிருந்தும் பிறரிடமிருந்தும் இதுவரையில் கொண்டுபோயிருப்பீர்? இரவல் வழியில் பெற்றுப் பிறகு சாமலேபோய், அகஸ்மீகமாய் அப்புஸ்தகத்தை உமது கையில், கண்டு, அப்புஸ்தகத்திலுள்ள தனது கையெழுத்தைக் காண்பித்து அது தனது புஸ்தகம் என்றும், நீர்

---

பக்கத்து வீட்டில் நீ தந்த கடனை உன் மனைவிக்குச் சொன்னால், நீ அதைத் திரும்பப் பெற முன்பே உன் மனைவி பெற்றுச் செலவிட்டுவிடுவாள். வெகு நாள் பொறுத்தே அவன் வாங்கிக்கொண்ட இதை நீ அறிய நேரும்.

இரவல் பெற்றுப் போய்த் திருப்பித் தரவில்லையென்றும் சொல்லியும்கூட, பல்லை யிளித்துக்கொண்டே மெதுவாக அப்புஸ்தகத்தைக் கொண்டு போய் விட்டீரல்லவா? அதைத் திருப்பித் தரவேயில்லையே! இத்தகைய சண்டாளத்தனமான காரியங்களில் இனியேனும் கைநனைக்கவேண்டாம். பிறருடையதை இனாமாகவோ, இரவலாகவோ பெற்று விழுங்கிவிடப் பார்க்கவும் வேண்டாம். உண்மையைச் சொல்பவனின்மீது கோபம் உண்டாகலாம். வயிறு எரிந்து சொல்லியவைகள் இவையென்று அறியக் கடவீர். உங்களின் ஏமாற்றுதலான, காரியங்களுக்குக் கடவுள் உங்களை மன்னிப்பாராக'' என்று பேசினர். இவற்றைக் கேட்ட "வந்தது விழுங்கியான'' வையாபுரி செட்டியார் மெதுவாகத் தலை நாணிக் கோணி நழுவிச் சென்றுவிட்டார். நமது கடையும் இத்துடன் பூர்த்தி பெற்றது.

'பகதூர்' ரோன்வண்டு செட்டியார்.

---

## உடனே கடிதம் எழுதிவிடு.

உன் வியாதியைப்பற்றியும், நீ படுக்கைப் பிணியாளியாய்க் கிடப்பதைப்பற்றியும் உண்மையான அக்கறை கொண்டவர் உனக்கு எழுதிக்கேட்கும் கடிதங்களுக்கு உண்மையான பதிலை உடனுக்குடன் எழுதியனுப்பிவிடு. உனது பிணியின் வாதனை அதிகப்பட்டுப்போய் அதைத் தெரிவிக்கப் பின்னடைந்து, வந்த கடிதத்திற்குப் பதில் எழுதாமல் இரண்டு தினங்கள் நீ மௌனமாக இருந்துவிடுவதில், உனது கடிதம் காணாமையால் என்னவோ ஏதோவென்று உடனே புறப்பட்டு உன்னிடம் வந்து சேரும்படியாகிறது. உன்னைக் கண்டபிறகு அவர்கள் மனம் சற்று சாந்தமாகிறது. அத்தகைய யதார்த்த அன்பினர்களுக்கு எதையும் மறைக்காமலும், தாமதமின்றியும் உடனுக்குடன் உள்ளது உள்ளபடி எழுதிப் பதில்தந்து, உன்னால் அவர்களுக்கு அதிகப் பிரயாசை ஏற்படாமல் நடக்கப் பார்.

---

அன்றொரு நாள் நடந்த சண்டையை மனதில் வைத்தபடி அடம் சாதித்துக்கொண்டே நெடுங்காலம் பேசாமல் விறைத்து நிற்பவர்கள் சிலருண்டு.

---

எந்த அன்பிலும் காசு பணத்தைத் தாராளமாய் நீட்டாவிட்டால் ஒன்றும் நடவாது. காசு காட்டாத இடத்தில் அன்பு முழுதும் குறைந்து ஆதாவும் மண்ணாகிவிடும். சொந்த மனைவியிடமே இதைப் பரீக்ஷிக்கலாம்.



# நமது கதாப் பிரஸங்கி.

## 'புதிய சரக்கு'—லீலா!

---

இராகவனுக்கு சங்கீதத்தில வெகு பிரியம். எந்தப் பாட்டுக் கச்சேரியிலும் இராகவனைத் தவறாமற் பார்க்கலாம். இதை அப்பாய் அறிந்துகொண்டு நீலாம்பாள் இன்று தன் வீட்டில் ஒரு பாட்டுக் கச்சேரி நடத்துகிறாள்; அவள் ஸங்கீதத்தில் மிகப் பிரசித்தி பெற்றவள். கிராமபோன் ரிக்கார்டிலும் அவள் சங்கீதத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்; நாம் இருவரும் போய்வரலாம் என்றான். ஒரு தாசிவீட்டுக்கு வருவதென்றால் என் மனம் ஒப்பவில்லையென்று ராகவன் சொன்னான். நமக்கு வேண்டியது சங்கீதம்; அந்த சரக்கை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றதைக் குப்பையில் கொட்டிவிடுவோம் என்று அப்பாய் அவன் மனதுக்குத் தகுந்தபடி பேசினான். இராகவனும் சம்மதிக்க, அவனும் அப்பாயுமாக நீலாம்பாள் வீட்டிற்குச் சென்றனர்.

நீலாம்பாள் வீடு எங்கேயிருக்கிறது? அது முப்பத்தெட்டு சந்துகளுக்குள் இருந்தது இந்த சந்துக்குள்ளாகவா சங்கீதம் என்றான் ராகவன். கடைசியில் நீலாம்பாள் வீட்டைக் கிட்டியதும் வாயிற்படியில் தாய்க்கிழவி இவ்விருவரையும் வாருங்கள் வாருங்கள் என்று வரவேற்று உபசாரம் செய்து உள்ளே ஓடினாள். அடுத்த நிமிஷம் நீலாம்பாளின் பெண் லீலாம்பாள் இவர்கள் முன்பு வந்து வணங்கினாள். இராகவனும் வணங்க, அதை அப்பாய் பார்த்துச் சிரித்துவிட்டு, இந்தச்சின்னஞ்சிறுக்கி நம்மை வணங்கியதற்கு அவளை முதுகில் தட்டிக்கொடுப்பதை விட்டு, அவளுக்குப் பதிலுக்கு பதில் வணங்குகிறீரே என்று பரிகாசம் செய்தான். பிறகு இவ்விருவரையும் லீலாம்பாள் கட்டில் போடப்பட்டிருந்த அறைக்கு வெளியில் ரத்ந கம்பளத்தில் வீற்றிருக்கச்செய்து தானும் அவர்களுடன் உட்கார்ந்தாள். தாய்க்கிழவி தாம்பூலத் தட்டைக் கொண்டு வந்து வைத்தாள். அப்பாய் லீலாம்பாளிடம் சேஷ்டைகள் செய்ய ஆரம்பித்து ஒரு விசிறியால் அவளுக்கு விசிறினான். லீலாவோ ராகவன்மீதே கண்ணாக இருந்தாள். வாசனைப் பாக்கை எடுத்து ராகவனுக்குத் தரப் போக, ராகவன் அதை மறுத்துத் தானே போட்டுக்கொண்டான். அப்பாய் தனக்கு அந்த பாக்கைக் கொடுக்கும்படி கேட்க, அவன் வாயில் லீலா போட்டுப் பிறகு வெற்றிலையும் மடித்துக் கொடுத்தாள். இதன் பிறகு அப்பாய் நீலாம்பாள் எங்கேயடி யென்று

---

தாங்கள் நெஞ்சில் நினைத்ததைப் பிறர் அறிந்துவிடும்போது, தாங்கள் அவ்விதம் நினைக்கவே யில்லையென்று வெகு சாமர்த்தியப் பேச்சு பேசினும், அவர்களின் கள்ள உள்ளத்து லக்ஷணத்தை முகமே நன்கு காட்டி விடுகிறது.

கேட்க, அவசரமாக ஒரு தந்தி வந்து மத்தியானம் வண்டியில் கோயமுத்தூருக்குப் போயிருப்பதாக லீலா கூறினுள். ஓகோ, அதனால்தான் இன்றைய தினம் பாட்டுக் கச்சேரி யில்லையோ, அது நடக்கிறதென்று எண்ணியல்லவா இவரை யழைத்து வந்தேன். என்று அப்பாய் லீலாவை நோண்டிவிட்டுப் பேசினன். அதற்கு லீலா தான் பாடுவதாகச் சொன்னுள். உடனே, மிருதங்கம், வீணை முதலியவைகள் வந்து சேர்ந்தன. லீலாவும் மிகவும் உற்சாகமாய்ப் பாடினுள். இரவு பத்து மணியும் அடித்தது. அப்பாய் ராகவனைப் பார்த்து, இனி வீட்டிற்குப் போவது கஷ்டம்; இங்கேயே இராவுக்கு இருந்து விடுவோம் என்ருன். அதற்குள் லீலா அவர் என்னிடம் இருக்கட்டும் என்று சொல்லி ராகவனின் கரங்களைப் பற்றினுள். இராகவன் நாளைக்கு வருவதாகச் சொல்லிவிட்டு ஒரு கவரை லீலாவிடம் தர, அவள் அதை வெகு பிரியமாய்ப் பெற்றுக்கொண்டு வாசல்வரை வந்து வழியனுப்பினுள். ராகவனை வெளியில் வீதியின் ஓரத்தில் நிற்கவைத்து விட்டு அப்பாய் மறுபடியும் உள்ளே சென்ருன்.

அப்பொழுது லீலா ராகவன் கொடுத்த கவரைப் பிரித்தாள். அதற்குள் நோட்டுகள் இருக்குமென்று அவள் எண்ணினுள். ஆனல், நோட்டுகளுக்குப் பதிலாக ஒரு கடிதம் எட்டு வரியில் எழுதப்பட்டிருந்தது.

ஸகோதரியே!

நாம் இருவரும் ஸகோதரமாக
வே இருப்போம். நமக்குள்
விகல்ப சிந்தனை வேண்டாம்.
ஸங்கீதம் கேட்க வந்தவனே
யன்றி வேறுபேதம் நினைத்து
—உன்னை நாடி வரவில்லை.

ஒரு ஸகோதரன்.

என்றிருந்ததை வாசித்ததும் லீலா, அட பாவி, சாயந்திரம் ஐந்து மணியிலிருந்து இந்தப் பத்து மணி வரையில் வீட்டிற்கு வந்தவர்களை யெல்லாம் வெளியில் நிறுத்திவிட்டு உன்னிடமே உட்கார்ந் திருந்தேனே. நீ வாரிக் கொட்டிவிடுவாய் என்று உன் அழகில் மயங்கினேனே. நீ இவ்வளவு சமர்த்துள்ளவனு என்று சொல்லி நாசமாய்ப் போக என்று கையை முறித்தாள். அதே சமயம் அப்பாய் அங்கு வரவும், அந்தக் கடிதத்தை அவன் முகத்தில் விட்டெறிந்து, ஆசாமி பலே கெட்டிக்கார மனிதர், பரம சண்டாளப் பாவி, இக் கடிதத்தைப் பார் என்ருள். அப்பாய் அதைப் பார்த்துத் திகைத்துவிட்டு அவள் கையில் ஐந்து ரூபாய் நோட்டைத் தந்து வைத்துக்கொள் என்று சொல்லி வெளியில் வந்தான். ராகவன் நிற்கும் இடம் வந்ததும்,

அப்பாய்:— லீலா எப்படி? அவள் சங்கீதம் எப்படி? நீலாம்பாள் பழய சரக்கு. லீலா இப்போதுதான் பக்குவமாகித் தயாரான "புதியசாக்கு." புதுமைக்குத் தகுந்த புதிய சுகமும் அங்கிருந்ததல்லவா?

ராகவன் :—இந்த சாக்கடைக் கும்பையை நீ தான் மெச்சிக்கொள்ள வேண்டும். அரைக் காசுக்கு மானம் அழிகிற நிலையில் கற்பழிந்த மாதருக்கு அழகிருந்து என்ன செய்ய? சங்கீதம் இருந்து என்ன செய்ய? இவையெல்லாம் தீய சகவாசங்கள். அவ்வ

---

ஏமாற்றுகிற மனிதர் என்று சிலரைப் பற்றி நாம் தெரிந்து கொள்கிற போது, அதை அறியாத தன்மை யாகவே போய்விடுவது நலம். நாம் ஏன் அதைச் சொல்ல ?—அவர்கள் மனம் ஏன் நோக ?

ளவு அழகுக்குக் கற்பு இருந்தால் எவ்வளவு பரிமளிக்கும்? இத்தனை அழகுடன் எனக்கு ஒரு ஸகோதரி யிருந்தால் எவ்வளவோ சந்தோஷப்படுவேன். லீலாவின் அழகும் பாம்பின் மாணிக்கமும் சரி.

அப்பாய் :—உன் போக்கு ஊரில் இல்லாத ஒரு கோணல் வழி. அவளுடைய அழகை அநுபவிக்க உனக்குத் தெரியவில்லையே.

ராகவன் :—அநுபவிப்பது என்பதற்குப் பொருள் என்ன? தான் பிரியப்படும் ஒன்று தனக்குக் கடவுள் அறியச்சொந்தமாகி அந்த ஆநந்தத்தை உணர்வதற்கே அநுபவிப்பது என்று கருத்து. என் தாயார், என் ஸகோதரன்—ஸகோதரி, என் மக்கள், என் மனைவி அழகா யிருக்கிறார்களென்றால் அது எனது சொந்த சொத்தானதால் எனக்குப் பெருமை யுண்டாக்கும். இங்கோ லீலா அன்னிய ஸ்திரீ. கை வறண்டால் போய் வாருமென்றே கயத் தலைக்கே குட்டும் படுமோசக் கள்ளி. அப்படிப்பட்டவளுடைய கூந்தல் நாவற்பழம் போன்று கருத்துப் பளபளவென்று கால் தொடும் வரை இருக்கிறதென்றால்—அது அவளுடைய கூந்தல். அதில் எனக்கென்ன லாபம்? அவள் அழகி என்றால் அந்த அழகு அவளுடனேயே இருப்பது. அதில் எனக்கென்ன லாபம்? அவளு ஆபரணங்கள் ஜெகஜ்ஜோதியாய் ஜொலித்தால் அந்த நகைகள் அவளுடையது. அதில் எனக்கென்ன லாபம்? என் மனைவியைப்போல் அவள் எனக்கு இகபரங்களிலும் சொந்தமாவாளா? அவ்விதம் ஆகாதபோது எனக்கென்ன லாபம்? அன்னிய ஸ்திரீயான அவளைத் தனக்குச் சொந்தமென்று நம்புவதும், அவள் பிரியத்தைப்பெற அவளுக்குத் தனது குடும்ப செல்வத்தைப் பாத காணிக்கையாகத் தந்து ஓட்டாண்டியாவதும் சுத்த மௌடீகம். என்றைக்கும் இரவல் என்பது இரவல்தான். இரவல் சோறு பஞ்சம் தாங்குமா? அவளுக்குச் செலுத்தும் பாத காணிக்கையைச் சொந்த மனைவி மக்களுக்கு நகை செய்து போட்டாலும் பிரயோஜன முண்டு; தனது ஆபத்திற்கு விற்கவும் முடியும்.

அப்பாய் :—எது பெரிய பிரசங்கம் செய்துவிட்டாயே போதும் என்று சொல்லி மவுனமானான்.

அன்றுமுதல் காமக் களஞ்சியமும் விடபுருடனுமான அப்பாயின் சகவாசத்தையே ராகவன் முற்றிலும் வெறுத்து விலகிக்கொண்டான். அப்பாயும் ஜாடை தெரிந்து ஒதுங்கினான். இப்பொழுது அப்பாய், லீலாவுக்கும் அவனுக்கும் உண்டான சச்சரவில் அவன் லீலாவைக் குத்திவிட்டு எங்கோ ஓடிவிட்டதாகக் கேள்வி. வேசையர்தம் நேச உறவு நன்மை பயந்தது என்றேனு முண்டா?

---

அன்புக்காகத் தங்கள் காசை விட்டுக் கொடுப்பதில்லை. காசிலும் கவனமாயிருந்து கொண்டு, அன்பு வார்த்தைகளையும் ஒரு பக்கம் கொட்டி, மிக்க வேண்டிய தன்மையில் தங்களைக் காட்டிக் கொண்டு, தங்கள் பாக்கிப் பணத்தையும் வசூலித்துக் கொள்வது! இது அன்பா?—சுயநல ஜோதி நாடகமா?

“ஏழைகளுக்குத் தர்ம வைத்தியம்” என்று விளம்பரப்பலகையை வெளியில் மாட்டுவது ஒரு பெரிய வியாபார தந்திரம். அந்த வகையில் பலரைத் தங்களிடம் வரச்செய்து வியாபார கிராக்கிகளை அதிகப்படுத்திக் கொண்டு பலருக்கும் வைத்தியம் பணத்திற்குச்செய்து தனம்திரட்டும் சாதுர்ய வழி அது.

# அநுபவ மணிகள்

(406-ம் பக்கத் தொடர்ச்சி.)

25. சிலர் தன்னைத்தானே பிறரிடம் விளம்பரம் செய்துகொள்கிருர்கள். சிலர் மற்றவர்கள் மூலம் விளம்பரம் செய்கிருர்கள். இன்னும் சிலருக்கோ அவர்களின் பெயரே முன் சென்று விளம்பரம் செய்துவிடுகிறது.

26. முன்பின் அறிந்து பேசியிருப்பினும் அவர்களின் வீட்டிற்குத் திடீரென்று செல்வதற்கு மனம் எவ்வளவோ பின்னடைகின்றது. சிலரோ முன்பின் அறியாத பெரிய மனிதர்களிடமும் துணிந்துபோய்ப் பேசிப் பழகி அவர்களின் பிரியத்திற்கும் பாத்திரர்களாகிவிடுகிருர்கள்.

27. பத்திரிகைக்குக் குறைந்த சந்தாவைச் செலுத்தி வருஷ முழுதுக்கும் பத்திரிகையைப் பெற சிலர் பலவித யுக்திகளை அநுஷ்டிக்கின்றனர். அவற்றில் பத்திராதிபர்களுக்கு வேண்டியவர்களைக்கொண்டு சிபாரிசு செய்யச் சொல்வதுமொன்று.

28. பிறர் செய்யும் காரியத்தைத் தூஷிப்பதிலேயே சிலருக்கு நாட்டம். அந்த சிலர் தம்முடைய வேலையைப் பிறர் தூஷிக்க இடமில்லாதிருக்கின்றதா வென்பதைக் கவனிக்க மறந்துவிடுகிருர்கள் போலும்!

29. ஆதியில் மாமியின்கீழ் மருமகளாக வருந்தினேன். அந்தியத்தில் மருமகளாலேயே வருந்த நேர்ந்துவிட்டது. எனக்கு என்றைக்குமே கண்ணீரா? ஒருபோதும் விமோசனமில்லையா என்கிருள் ஒருமாது.

30. இரவல் புஸ்தகம் கேட்பது வெகு சுயநலமான எண்ணம். அதைத் திருப்பித் தராமலிருப்பது ஒரு கண்ராவி. கிழித்துக் குப்பையாகக் கொடுப்பது ஒரு வயிற்றெரிச்சல். ஆசாமியே கண்ணில் படாதபடி மறைந்துவிடுவது எல்லாவற்றையும் விடப் பெருத்த வேடிக்கை. புஸ்தகத்தையும் பறிகொடுத்து, அதற்குச் செலவிட்ட பணத்தையும் இழக்க நேருகிறது. பட்டவர்களுக்குத் தெரியும் இந்தப் புண்.

31. இரவல் புஸ்தகம் பெறும் புலிகள் நம் வீட்டிற்கு வரும்போது அவர்களைத் தரிசித்தவுடனே வயிற்றில் பகீர் என்கிறது. இன்று எத்தனைப் புஸ்தகங்களைத் தத்தம் செய்ய வேண்டுமோ தெரியவில்லையே என்கிற கவலை முதலில் ஆரம்பமாகிறது. வந்திருக்கும் குள்ளநரிகள் சற்று மரியாதைப்பட்டவர்களாயின் கட்டாயம் நமக்கு அன்று நஷ்டந்தான். சற்று வேற்று மனிதராயின் சிறிது வாதாடிய பிறகு நமது புஸ்தகத்தை அவர்களிடம் கொடுத்து இழக்க நேரிடுகிறது. என்ன அநியாயம் இது?

32. ஏதோ ஒருபுஸ்தகம் கொடுங்கள், பேஷான மதிப்புரை எழுதச் சொல்லுகிறேன் என்று கூறி அடித்துக்கொண்டு போகும் தந்திரம் ஒன்று; நான் பலருக்குக் காண்பித்து வாங்கிக்கொள்ளச் சொல்லுகிறேன் என்பது ஒன்று; பிறகு பணம் கொடுத்துவிடுகிறேன் என்று கூறிப் பெற்றுக்கொண்டுபோய் உடனே படித்துவிட்டு, இப்போது புஸ்தகம் வேண்டாம், பிறகு பார்ப்போம் என்பது ஒன்று. நூலாசிரியரின் வீட்டிலேயே உட்கார்ந்து சாதுர்யமாகப் பேசிக்கொண்டே புதிதாக அச்சிட்ட புஸ்தகத்தை அறிந்து மெதுவாகப் படித்துவிட்டுப் போய்விடுவது ஒன்று.

ஏதோ பூர்வத்தில் கடன்கொடுத்திருந்ததைப் பெறுவதுபோல் ஒவ்வொரு புதுப்புஸ்தகம் வெளியிடும்போதெல்லாம் வந்து "எனக்கு எங்கே புஸ்தகம்" என்று இலவசத்திலேயே பெற்றுச் சென்றுவிடுவதும் ஒன்று.

33. சிலருக்குச் சில விஷயங்களைப் பலதரம் உரைத்திடினும் மூளையில் ஏறுவதேயில்லை. அதே சிலரிடத்தில் அங்கு சண்டை, இங்கு சச்சரவு என்ற வம்பு விஷயங்களைக் கூறினால், அவை உடனே மூளையில் பதிவதுடன், சில வருஷங்கள் சென்றபிறகு அவ்விஷயங்களுள் ஏதேனும் கேள்வி கேட்டால் வெகு ஞாபகத்துடனும் எடுத்துக் கூறுகிறார்கள்.

34. விவாகம் ஆவதற்கு முன்னால் மிகவும் சமரசமான பேச்சுகளே சம்பந்திகளுக்குள் நடக்கிறது. தாலி கட்டிய மறுநிமிஷமே ஒரு புது தினுசில் மாறுதல்! மாப்பிள்ளையின் கைக்கு ரிஸ்டு வாச்சும், விரலுக்கு வைரமோதிரமும் போட்டால்தான் மாப்பிள்ளை சாப்பிட வருவான் என்ற சண்டை ஆரோகணமாய் விடுகிறது. இது பிராமண ஜாதியில் பல இடத்திலும் கண்ட அனுபவம்.

35. அந்தப் பெண்ணை மணந்தால் மணப்பேன்; இல்லையேல் விவாகம் வேண்டாம் என்று கூறிய மணமகனே, மணந்த பெண் பக்குவமடைந்து பக்கலில் வருவதற்குள் ஓர் தாசிக்கு அடிமையாகி விடுகிறான்! இதென்ன பேய்மனக்கூற்றோ?

36. மனம் கலந்த சிநேகிதர்களுடன் உட்கார்ந்து புசிக்கும் ஆநந்தம் ஒரு தினுசு. உறவினரின் கூட்டத்தில் புசிப்பது ஒரு தினுசு. மரியாதைப்பட்டவர்களுடன் புசிப்பது ஒரு தினுசு. முகமறியாதவர்களின் எதிரில் புசிப்பது ஒரு தினுசு, ஒரே இலையில் மனதொன்றுபட்ட காதலர்கள் புசிப்பது ஒரு தினுசு. ஒவ்வொரு தினுசுக்கும், ஒவ்வொரு தனித்த மாறுதலுக்கும் விதம்விதமான ருசியும் ஆநந்தமும் கூச்சமும் ஏற்படுகின்றது.

(தொடரும்.)

வை. மு. கோதைநாயகி அம்மாள்.

## காலங் கடந்து கண்ட அறிவு.

ஏழெட்டு குழந்தைகளைப் பெற்றபின்பு, இப்படியெல்லாம் இருந்தால் ஆண்குழந்தை பிறக்கும், இவ்வாறு செய்திருப்பின் பெண்குழந்தைகள் உதிக்கும் என்று அறிந்து ஆவதென்ன? விதவையாய்ப் போனபின்பு பிள்ளைகளைப் பெறும் நூலை வாசித்துப் பயனென்ன? வீடுகட்டி முடித்த பின்பு மற்றொரு ஊரில் புதுவிதமாய் அமைந்த வீட்டைக் கண்டு இவ்விதமாய்த்தான் அமைக்கவேண்டுமென்று அறிவு படைத்து லாபமென்ன? தன் குமார்த்தியை ஓரிடத்தில் தந்தபின்பு இன்னொரிடத்தில் தகுந்தவன் யிருக்கிறானென்று அறிந்து என் செய்ய? இவை காலங்கடந்து கண்ட அறிவாகும். நேற்றைய தினத்தை இன்று எட்டிப்பிடிக்க முடியுமா?

# பலதிரட்டு.

## நரபலி :—

நரபலி கொடுக்கும் துஷ்டர்கள் முற்காலத்தில் அநேகர் இருந்தனர். இவர்களை மூடபக்தி யென்னும் பிசாசு பிடித்திருந்தது. எந்தக் காரியமாகவேண்டுமானாலும் இஷ்ட தேவதைக்கு நரபலி கொடுத்தபிறகு தொடங்குவார்கள். இத்தகைய துராசாரம் நாகரீக சுவர்ன்மெண்டால் நின்றது. ஸ்திரீகளுக்கிருந்த அக்ஞானத்திற்கு அளவில்லை. அக்ஞானம் ஸ்திரீஜாதிக்குச் சத்துருவென்பதில் சந்தேகமில்லை. சட்டஞானமில்லாததாலும் தர்மமார்க்கத்தை அறியாததாலும் குழந்தைகளில்லாத ஸ்திரீகள் அந்யர்களின் குழந்தைகளைப் பலி கொடுக்கும் பாபிஷ்டைகளாயிருந்தார்கள். கர்னல் மேடோ ஸ்டேலர் என்பவர் க்ஷுத்ரதேவதைகளுக்குப் பலிகொடுக்கும் கள்ளர்களைப் பிடிப்பதில் வெகுவாய்ப் பிரயாஸப்பட்டவர். தக்ஸ் என்னும் கள்ளர்கள் நரபலி கொடுப்பதில் நிபுணர்கள். ஒருசமயம் ஒரு கள்ளனைப் பிடித்து விசாரிக்கையில் அவன் தானொருவனே 700-ஜனங்களைப் பலிகொடுத்திருப்பதாயும், தன்னைப் பிடிக்காதிருப்பின் இன்னும் ஆயிரக்கணக்கான ஜனங்களைப் பலிகொடுத்திருப்பேனென்றும் கூறினன். சிறுவயதில் காணமற் போன தன் குமாரனையே 18-வயதில் கண்டு, அந்யனெனறு அவனைப் பலி கொடுக்கத் துணிந்து, பின் விவரம் அறிந்து திடுக்கிட்டதுமுண்டு.

## தேள் கடி :—

தேள் கடித்தால் ஒரு மருந்திருக்கிறது. கடித்த இடத்தில் க்வைனு என்னும் ஜ்வாப்பொடியை வைத்துத் தேய்த்தால் இரண்டு நிமிஷத்துக்குள் நோய் பரிகாரமாய்விடுமாம்.

## காரணம் தெரியவில்லை :—

அந்த நண்பன் தன்னை என்றும் மறவாதவனென்றும், தனது கடிதம் கண்டால் உடனே ஓடிவரக்கூடியவனென்றும் கோபாலனின் எண்ணம். எண்ணம் மட்டுமல்ல; திடமான நம்பிக்கையும் அதுவே. அவ்விதமிருக்க நான்கு மாதங்கள் பொறுத்துத் தன் நண்பனைக் காணக் கோபாலன் சென்று தனது கஷ்டங்களையெல்லாம் கூறி வருந்துகிறன். அந்த நண்பன் "அப்படியா" என்று நாலைந்து தலையசைப்பு அசைத்து விட்டு, ஏதேனும் பேசவேண்டுமே யென்று பழய சங்கதிகள் இரண்டை இழுத்துப் பேசிவிட்டுப் பிரியமான முகமாகவே காண்பித்து நிற்கிறன். கோபாலனே அன்று பகல் முழுதும் அந்த நண்பனிடம் இருக்க நினைத்து வந்தவனுயினும், தனது களைப்பிற்குக்கூட நண்பன் உதவி செய்யாமலும், ஒரு மாதிரியாய் "டக் டக்" என்று சிலவார்த்தைகள் மட்டும் பேசுவதுமாயிருக்கக்கண்டு, "போய் வருகிறேன்" என்று எழுந்திருக்க, நண்பனும் நல்லது என்று வழியனுப்ப,

---

பிறருக்குப் பிரியமாகிய சொல் செயல் முதலிய புறவிஷயங்களைப் பிறப்பித்து, நேசத்தின் காரணமாக விளங்கும் உள்ளத்து உணர்ச்சியையே அன்பு என்று சொல்லப்படும்.

மிக்க ஆயாசத்துடன் கோபாலன் வெளிவந்து ஒரு கடையில் தனது களைப்பைத் தீர்த்துக்கொண்டு புறப்படுகிறான். யதார்த்த நண்பன் இப்படிப் பாராமுகமாய் வெளிவேஷமாமாய் நின்றதின் காரணம் விளங்கவில்லை. அந்த நண்பனுக்கு அவனது சொந்த விஷயங்களில் எதாவது கஷ்டம் இருந்து அதனால் இப்படி ஒதுங்கிப் பேசநேர்ந்ததோ என்னவோ? என்றாலும் "இயற்கையான முகமலர்ச்சி" அங்கே தென்படாமல் "பாவனுருபமான முகமலர்ச்சியல்லவோ அங்குக் காணப்பட்டதென்பதையும் மறப்பதற்கு முடிகிறதில்லை. ஒரு காலத்தில் எவ்வளவோ உதவிசெய்து உயிர் நண்பர்களா யிருந்தவர்கள், பிறகு மற்றொரு காலத்தில் முற்றும் மாறி வேறு முகமாய்விடுகிறார்களென்று இந்த சங்கதியை முடிவு செய்கிறதா? என்ன?—என்கிறான் கோபாலன்.

## தாசில்தார், மீன், பாம்பு:—

இம்மாகாணத்திலே சுமார் 50-வருஷங்களுக்குமுன் நடந்த செய்தியொன்று பின்வருமாறு அறிவிக்கப்படுகிறது:—

சுமார் 50-வருஷங்களுக்கு முன் தாசில்தார் ஒருவர் இருந்தார். அவர் தன் வேலையைச் சரிவரச் செய்வார். மேலதிகாரிகளின் பிரியத்தை அனுவசியமான உபாயங்களால் தேடியடைய மனமில்லாதவர். ஒரு பைசா கூட லஞ்சம் வாங்கமாட்டார். அப்பொழுது இருந்த மிஸ்டர் தாமஸ் என்னும் கலெக்டருக்குத் தூண்டில் போட்டு மீன் பிடிப்பதில் மிக்க பிரியமுண்டு. ஆகவே, அக்கலெக்டர் அந்த வட்டத்திற்கு வரப்போகிறதாகவும், மீன் பிடிப்பதற்கு வேண்டிய எற்பாடுகளைச் செய்யவேண்டுமென்பதாகவும் தாசில்தாருக்கு அறிவிக்கப்பட்டது. உடனே தாசில்தார் சில செம்படவர்களைத் திட்டப்படுத்தி யிருந்தார். குறிப்பிட்ட தினத்தில் கலெக்டர் வந்து மீன் பிடித்தசில் கொஞ்சம் மீன்களே கிடைத்தன. உடனே செம்படவர்களுக்குத் தகுந்த கூலி கொடுக்கவேண்டுமென்று தாசில்தார் ஒரு "பில்"லை கலெக்டரிடம் நீட்டினார். அதைக் கலெக்டர் பார்க்க மனமில்லாது சிரஸ்ததாரே பாரும் என்றார். முடிவில், என்னுயிற்றென்றால், கலெக்டருக்குச்செம்படவர்கள் லாயர் நோட்டீஸ் கொடுக்கவே சிரஸ்ததாரால் செம்படவர்களின் கூலி கொடுக்கப்பட்டது. இது நடந்த கொஞ்ச காலத்திற்கெல்லாம், பாம்பு பிடிப்பதிலும் பாம்பாட்டுவதிலும் மிக்க பிரமையுள்ள ஒருவர் வரப்போகிறாரென்றும், அவருக்கு வேண்டிய உதவி புரிய வேண்டுமென்றும் மேற்படி தாசில்தாருக்கு சிரஸ்ததார் ஒரு கடிதம் எழுதினார். உடனே அந்தத் தாசில்தார் பதிலனுப்பிய கடிதத்தின் விவரமாவது:—"வேண்டிய எற்பாடும் உதவியும் செய்தால் கூலி கொடுப்பது யார்? கவர்ன்மெண்ட் உத்தரவுகளையும் மதிப்புத் திட்டங்களையும் பார்த்தால், பாம்போட்டுவதில் பிரியமுள்ளவர்களுக்கு வேண்டிய எற்பாடு செய்வதில் நேரும் செலவுகள் கொடுக்கப்படவேண்டுமென்று காணப்படவில்லையே."

இவ்விதம் தாசில்தார் கடிதம் எழுதவே, கலெக்டர் ஆபீஸில் உண்டான குழப்பத்தைச் சொல்லி முடியாது. தாசில்தாருக்கு வயது 55-நெருங்கிவிட அவர் வேலையிலிருந்து விலகிக்கொள்ளும்படியாயிற்று.

---

தாங்கள் மட்டும் செட்டாக எண்ணிச் செலவிட வேண்டுமாம். மற்றவர்கள் மாத்திரம் எண்ணிப் பாராமல் தாராளமாய்ச் செலவிட வேண்டுமாம்.

# மூளைக்கு வேலை.

(1) ஒரு நாளிரவு தலையாரி யொருவன் தன் வீட்டிற்குக் கொஞ்சம் வெள்ளரிக்காய்கள் கொண்டுவந்தான். அவனுக்கு மூன்று குமாரத்திகளுண்டு. ஒவ்வொருத்திக்கும் ஒவ்வொரு குழந்தை யுண்டு. தலையாரி வெள்ளரிக்காய்களைக் காலையில் கொடுக்கலாமென்று படுக்கைக்குச் சென்றுவிட்டான். அப்பொழுது அவன் முதல் குமாரத்தி ஒருவருக்குந் தெரியாமல் வந்து இருந்த வெள்ளரிக்காய்களில் முதலில் தன் குழந்தையிடம் ஒன்றை எடுத்துக் கொடுத்துவிட்டு மற்றவைகளை மூன்றாகப் பங்கிட்டு ஒரு பங்கைத் தானெடுத்துக் கொண்டு போய்விட்டாள். இப்படியே மற்ற இரண்டு குமாரத்திகளும் தனித் தனி தெரியாமல் வந்து மூத்த குமாரத்திபோலவே தங்கள் குழந்தைகளுக்கு முதலில் ஒவ்வொன்றைக் கொடுத்து மும்மூன்றாகப் பங்கிட்டு ஒவ்வொரு பங்கை எடுத்துச் சென்றனர். காலையில் தலையாரி மீதி வெள்ளரிக்காய்களைத் தன் மூன்று குமாரத்திகளுக்கும் சமபாகமாய்ப் பிரித்துக் கொடுத்தான். அப்படியானால் அவன் கொண்டுவந்த வெள்ளரிக்காய்களெத்தனை ?

T. S. குழந்தைவேல் முதலியார்.

(2) இந்தியாவிலிருந்து இம்மலாய் நாட்டிற்கு எமது சிநேகிதர்கள் சிலர் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டு, அவர்களிடம் சென்று க்ஷேமலாபங்களை விசாரித்துவிட்டு, "நீங்கள் எத்தனை பேர்கள் ஊரிலிருந்து வந்தீர்கள்" என்று கேட்க, அதில் ஒருவர், "நாங்களும், எங்களளவும், எங்களில் பாதியும், அதில் பாதியும், உம்மையும் சேர்த்தால் நூறு பேராகும்" என விடை பகர்ந்தார். வந்தவர்கள் எத்தனை பேர் ?

மு. நா. தெண்டாயுதபாணி பிள்ளை, கோலாலம்பூர்.

[நண்பர் விரும்பியவாறு விடுவிப்பை இனி மறு ஸஞ்சிகையில் பிரசுரிக்கிறோம். ப-ர்.]

(3) குகுகுகுகுகுகுகுகு செட்டி மகள்,
அஅஅஅஅஅஅஅஅ ற்கு ஆசைப்பட்டாள்,
முமுமுமுமுமுமுமுமு மூன்று பணியாரம்,
சிசிசிசிசிசிசிசிசி ல் கட்டி யனுப்பு.

இதைச் சரியாக வாசிக்கவேண்டும் ?

(4) கால் உடைந்து தரையில் கிடக்கும் ஓர் நொண்டிக் குருவியானது பறக்கும் குருவிகளைப் பார்த்து ஓ நூறு குருவிகளா எங்கே போகிறீர்கள் என்று வினவியது; அதற்குப் பறந்தவைகள் நாங்களல்ல நூறு குருவி; ஆனால், நாங்களும் எங்களைப்போல் ஒரு பங்கும் அதில் பாதியும் அதில் பாதியும், உன்னையும் சேர்த்தால் நூறு, குருவிகள் என்று சொல்லிற்று.

ஆனால் பறந்த குருவிகள் எத்தனை ? சா. கா. அப்துல் ரோஜாக்.

[பென்சில் கொண்டும் மக்கின கடிதத்திலும் எழுதியதால் ஒரு அன்பரின் விடுகதைகள் பிரசுரம் பெறவில்லை. பிரசுரமாகாதவை ஸ்டாம்பு இல்லாவிடில் திருப்பி யனுப்பப்பட மாட்டா. அழித்துவிடப்படும். ப-ர்.]

# பேய் பிடித்த நீலா.



"யௌவன பருவத்தில் இராப்பொழுது கழிவது மிகவும் கஷ்டம். வெகு சோதனையான நேரம். எவ்வளவோ எண்ணங்களை யெண்ணி ஏங்கவைக்கும் சமயம். தூய அன்பு உணர்த்தித் தூங்கவைக்கும் துணை அருகில் காணாதபோது தூக்கம் கெடுவதும் நித்திரையே வாராதொழிவதும் ஒரு வியப்பாமோ? இனித்த இன்பக்கட்டியான இரவுகளும் எத்தனையோ உண்டுதான். அது இப்போதில்லை. என்றைக்குமே இனி இல்லை யென்பதல்ல. இந்த பொழுதுக்கு இல்லை; இன்னும் சிலநாட்களுக்கு இல்லை; இந்த "இல்லாமை" என்பதின் கால எல்லையும் அவ்வளவுதான். தனித்துக் கிடக்கும் கடுஞ்சிறை வாசமும் அதன் பின் தீர்ந்துவிடும். தீர்ந்துவிடும் என்றால் அதன் பொருள் என்ன? பிராணேசர் வந்துவிடுவார். சோகம்தீர்ந்துவிடும்; மோகம் முதிர்ந்துவிடும்; இந்திர போகம் கூடிவிடும் என்பதே அதன் கருத்து. இந்திராணியாகிய நான் இதோ இருக்கிறேன்; என் இந்திரன் எங்கே? என் மனோகரன் எங்கே? என் காதல் கவர்ந்த கள்வன் எங்கே? அந்தக் கண்ணிய புருஷன் எங்கே? எனது மோகன ரூபன் எங்கே? நான் முத்தமிடும் முத்து எங்கே? என் நாதன்—கண்ணாளன் எங்கேயோ?—எங்கேயென்று கேட்கிறாயா?—அதுதான் முன்பே கூறினேனே! நாட்கள் சிலது கழிந்தால் நாயகன் வரும் தினமும் நெருங்கிவிடும்; கண்ணும் கண்ணும் கண்டுவிடும் என்று விவரமாகச் சொன்னேனே. என் ஏழை நெஞ்சமே! பிரிவாற்றாமையை இன்னும் சற்று சகித்திரு. அன்பர், ஆரு

> நாலு வீடுகளிலும் பழகி நிற்பவர்களை உன் வீட்டு வேலைக்கு அமர்த்திக் கொள்ளாதே. உன் வீட்டின் மர்மம் அவர்கள் மூலம் நாலு வீடுகளுக்கும் போய்க் கேவலப்படும். உன் வீட்டோடு ஒட்டி உன்னோடிருந்து ரகசியம் காத்து உனக்குமட்டும் உதவக்கூடியவர்களாக இருப்பவர்களை மட்டுமே நீ வேலைக்குத் தெரிந்தெடுத்துக் கொள். ஜலம் கொண்டுவரக் குடம் எடுத்துச் சென்று அப்படியே ஓடிவிட்ட விசுவாசக்காரர்களு முண்டு.

---

தூக்கமில்லை, ஒன்றுமில்லை. எல்லாம் பாசாங்கு. புறண்டு புறண்டு படுக்கிறதைப் பார். கபட நெஞ்சு தூங்குமா? என்ன பேசுகிறார்களென்றல்லவோ அது உற்றுக் கேட்கும். பிறகு தான் கேட்டதைச் சொல்லிக்காட்டும்.

வீர்த் தலைவர் நான்கே நாட்களில் வந்துவிடுவார். அப்பொழுது ஆவல்தீர அணைத்து ஆநந்தப்படலாம். அதுவரை பொறு. இரு."

ஃ

என்று தன்னுள் சொல்லிக்கொண்டு நீலா தன் படுக்கையை விட்டு எழுந்தாள். தன் கணவனாரின் மேஜைக் கருகில் வந்து ஒரு நாற்காலியில் அமர்ந்தாள். என்னென்னவோ நினைந்தாள். உடனே அந்தச் சமயம் அவள் மனத்தில் முன்பு மனனம்செய்து வைத்திருந்த சில பாடல்கள் அவளது ஞாபகத்திற்கு வந்தன. அவை வெகு உருக்கமாக இருந்தன. உள்ளத்தைக் கவர்ந்தன. உருக வைத்தன. தன்னையே மறக்கச்செய்தன. தன் அன்பனின் உருவை எதிரே தோற்றவைத்துக் காட்டின. பரவசம் மீறினள். பாடல்களை வாரிக் கொட்டினள். அவற்றை எட்டிப் பிடித்துக் கட்டினள். தாங்கொணு இன்பத்தைக் கிட்டினள். ஆனல் இவ்வளவும் தன் மனதுக்குள்ளாகவேதான். அந்த ஆநந்தத்தில் அவள் உடலம் ஆடியது. தலையும் ஆடியது. அழகிய கேசங்கள் அவிழ்ந்து கலைந்து அவளுக்குச் சாமரை வீசின.

ஃ

1. முழுமனத்தோ டுந்தனையான் முக்காலுந் தியானித்துப்
புழுங்கிமனங் காதலினுற் புலம்புவதும் பொய்யாமோ?

2. சகமதனில் யான்விரும்புஞ் சிறந்தபொரு ளுண்டாயின்
முகமதனு லெனைவளர்க்கு மதுமொழியே நீயன்றே?

3. காதென்னு மோர்பொறிக்குக் களிப்புடைய துண்டானல்
தீதற்ற நின்வாயின் றேன்மொழியென் றறியாயோ?

4. மூக்கென்னு மோர்பொறிக்கு மணமுடைய துண்டானல்
ஆக்கமென் னழகுடைய ஆருயிரே நீயன்றே?

5. மெய்யன்போ டுந்தனையான் மறவாது துதித்துவர
மெய்யன்பி லாதவன்போல் மறந்திருப்ப தழகாமோ?

6. எக்காலு முனைமறவா விருதயமோன் றுளதாயின்
எக்காலுஞ் சிந்திக்கு மென்மனமென் றறியாயோ?

7. எப்போது நின்னுருவே யென்னெதிரி லுளதானல்
எப்போது முனைமறவே னென்றியம்பல் வியப்பாமோ?

8. எக்காலும் நின்பெயரே யென்னுவி லுளதானல்
எக்காலு நினைமறவே னென்றியம்பல் பொய்யாமோ?

ஃ

இவற்றை மனத்துள் இன்னும் அதிக ஆர்வத்துடன் பாடுகையில் அந்த ஆநந்த பரவசத்தில் நீலா தன்னை மறந்து தன் தலையை ஆட்டியபடி

னின்றான். சந்தோஷ வெள்ளத்தில் மேஜையையே மத்தளமாக நினைத்துத் தாளம் கொட்டினான். இந்த சப்தத்தைக் கண்டு வீட்டிலிருந்தவர்கள் நித்திரை கலைந்து எழுந்தனர்; நீலாவை நோக்கினர். அவள் கண்மூடி தன் உள்ளத்தே தன் நாதனைக் கண்டபடி நின்றாள். அவளது கூந்தல் அவிழ்ந்து அலைவதையும் அவள் தலையாடுவதையும் கண்டு ஏதோ பேய் பிடித்துவிட்டதென்று தீர்மானித்தனர். வரவரத் தலையாட்டம் அதிகமாயிற்று. அடுத்த தெருவிலுள்ள முருகப்ப மந்திரவாதிக்குச் சொல்லியனுப்பவும் அவன் விரைந்தோடி வந்தான். அப்பொழுது இரவு இரண்டு மணி யிருக்கும். முருகப்பன் நீலாவின் எதிரில் நின்று கனைத்தான். "ஆட்டமா?—ஆடுகிறாயா?—ஆடு ஆடு" என்றான். இது முனியின் சேஷ்டை. அத்துடன் இருளனும் காட்டேரியும் கூடிக்கொண்டிருக்கிறது; ஆக மூன்றும் சேர்ந்துகொண்டு இந்த ஆட்டம் போட வைத்திருக்கிறது. நாளை இரவுக்கு என் வீட்டிற்கு அழைத்து வந்து மந்திர பீடத்தில யந்திரம் எழுதி உட்காரவைத்து ஒரு நிமிஷத்தில் அடக்கி விடுகிறேன் என்றான். நீலாவின் மாமனாரும் மாமியும் எப்படியாவது பேயை யோட்டி விடவேண்டுமென்று வெகுவாய் வேண்டிக்கொண்டனர்.

ஃ

உடனே முருகப்பன் தன்னையே மறந்து ஆடிக்கொண்டிருந்த நீலாவின் கூந்தலைப் பிடித்துக் குலுக்கினான். இப்பொழுதுதான் நீலாவுக்குத் தன் உணர்ச்சி வந்தது. கண்களைத் திறந்து பார்த்தாள். பெரிய கூட்டம் எதிரில் இருக்கக் கண்டாள். அதற்குள் முருகப்பன் "நீ யார்? சொல்" என்று சிங்க கர்ஜனையுடன் அதட்டிக் கேட்டான். நீலாவுக்கு விஷயம் விளங்கிவிட்டது. தான் தன் நாதனை எண்ணிப் பாடல்களை மனத்துள்கூறித் தன்னை மறந்து ஆடியதைப் பேய் பிடித்து ஆடுவதாக நிச்சயித்து விட்டனரென்பதை யறிந்துகொண்டாள். மந்திர முருகப்பனின் மதியீனம் எதுவரையில் இருக்கிறதென்று தெரிவதற்கு இது ஒரு நல்ல சமயம் என்று தீர்மானித்துக்கொண்டாள். அதற்குள் முருகப்பன் மறுபடியும் "நீ யார்?" என்று உரத்துக் கேட்டான். நீலாவும் அதற்குப் பதிலாக "நீ யாரடா?—முழுமூட முருகப்பனா?—மூதேவியப்பனா?" என்றாள். "கேட்கிறதற்குப் பதில் சொல்லுகிறாயா இல்லையா?" என்று குதித்துக் கேட்டு மறுபடியும் கூந்தலைப்

வீட்டுக்குள் வருகிறவர்கள் ஒவ்வொரு சாமானாக ஆராய்ந்து தங்களுக்கு வேண்டியவற்றைப் போகும்போது மறைத்துக்கொண்டு போய்விடுகிறார்கள். வெகு யோக்கிய உறவாகவும் நடிக்கிறார்கள். பிறகு அவர்கள் கொண்டுபோய் விட்ட சாமானை நாம் தேடி அகப்படாமல் அங்கலாய்த்து வாடுகிறோம். ஆகவே, இவர்களைக் கண்டதும் ஜாக்கிரதைப்பட வேண்டி வருகிறது. சுயநலமே பெருகி இந்த நாள் நாறுகிறது.

---

பாசாங்கு செய்தவர்கள் தங்களின் பாசாங்குத் தன்மையை மற்றவர் அறிந்து விடும்போது அவர்களின் முன்பாக வராது மறைகின்றனர்.

பற்ற முயன்றான். ஒரு அன்னிய மூடன் தன்னைத் தீண்டுவதைத் தாளாமல், "மூடா! என்னைத் தொடாதே எட்டி நில்!" என்று அருகிலிருந்த துடைப்பத்தை எடுத்துத் தன்னை முன்பு தொட்டதற்குப் பரிசாக ஏழெட்டு அடிகள் தீர்த்துவிட்டாள். துடைப்பமும் தூள் தூளாயது. முருகப்பனும் பயந்தவனாய்த் தூர நின்றான். பிறகு சிறிது பொறுத்து "நீ யார்?" என்றான். நீலா அதற்குப் பதில் சொல்லவில்லை. முருகப்பன், "இது மூன்று பேய்கள் செய்யும் வேலை. எனக்கு நூறுரூபாய் கொடுத்தால் ஆயிசுக்கும் இவைகள் எட்டிப் பாராதபடி செய்துவிடுகிறேன்; நூறுக்குக் குறைந்து முடியாது, அதிகம் ஜெபித்து மந்திர தூபம் போட்டு ஒவ்வொரு பேயையும் திருப்தி செய்து அடக்கவேண்டி யிருக்கிறது; மூன்றுக்கும் மூன்று ஆடுகள் வெட்டியாகவேண்டும்" என்றான். நீலாவின்மாமனார் இதற்குசம்மதித்துக்கொண்டார்.

ஃ

முருகப்ப மந்திரவாதியின் வீட்டிலே மூன்று நாளாகப் பட்டினி. பக்கத்து வீட்டில் கடன் வாங்கிய அரிசியும் தீர்ந்துவிட்டது. இரண்டு தினங்களாக முருகப்பனுக்கு சாராயத் தண்ணிக்கே காசு அகப்படவில்லை யென்றால் இன்னும் விவரிப்பானேன்? இந்தச் சமயம் நீலாவுக்குப் பேய் பிடித்தது தன் அதிர்ஷ்டமே யென்று எண்ணினான். முதலில் இருபது ரூ ாய் தரும்படியும் நாளை இரவுக்குத் தன்வீட்டிற்கு நீலாவை யழைத்து வரும்படியும் சொன்னான். நீலாவின் மாமனார் பணம் எடுப்பதற்காக வீட்டிற்குள் சென்றார். அந்த சமயம் அங்கு ஒரு வண்டி வந்து நின்றது. அதிலிருந்தும் நீலாவின் பர்த்தாவான விஜயராகவன் கீழே இறங்கினான்; கூட்டத்தைக் கண்டான்; பிரமித்தான்; என்ன என்றான். "நீலாவுக்குப் பேய் பிடித்துவிட்டது" என்றனர். விரைந்து நீலாவிடம் ஓடிவந்தான். "நீலா! நீலா! என் ஆசை நீலா! உன்னைப் பேயா பிடித்துவிட்டது?" என்று கே ட்டுவிட்டு அலறினான்.

> நாம் அந்தரங்கத்தில் ஒரு தவறுதலைச் செய்கையில், இன்று அதற்குத் துணையிருப்பவர், நாளை நமக்கு விரோதியாகி நமது செயலை வெளியிட்டுக் கேடு சூழலாம். அதை இன்றே யோசித்துத் தவறுதலில் செல்லாமல், நியாய வழியில் நடந்துவிட்டால், நாளை எவரையும் நமது தவறுதலையும் வெளியிடாதிருக்கும்படி கெஞ்சவேண்டியதில்லை. அஞ்சவும் தேவையில்லை. நாம் தவறு செய்யினும் அதை நமது மனம் மாத்திரமே அறியலாம். பிறர் அறியலாகாது.

ஃ

"நீலா! உன்னை என்ன பேய் பிடித்திருக்கிறது? நான் யாரென்று உனக்குத் தெரிகிறதா?"

---

பல பாபதோஷங்களுக்கு உள்ளாகி ஆன்ம—சரீர விஷயங்களில் பிழைபாடுகள் புரிந்து, அவற்றை மறைக்கும் தன்மை வெகுபேருக்கு உண்டு.

"தெரிகிறது. தெரிகிறது அச்சச் சின்னஞ் சிறுக்கி, சிற்றாடைக்காரி யான நீலாவின் கள்ளப் புருஷன் தானே நீ?"

"உன்னை என்ன பேய் பிடித்திருக்கிறது? அதைச் சொல்?"

"என்னை "காதற் கலிவெண்பா" என்ற பேய் பிடித்து ஆட்டி என் மனத்தை உருகிடச் செய்ய அதில் நான் என்னை மறந்து ஆடவும், உடனே இந்த முருகப்ப மூடனைப் பெரியோர்கள் தருவித்தனர்."

"அப்படியா சங்கதி. உன்மீதுள்ள பேயை முருகப்பனால் ஓட்ட முடியாது. என்னால்தான் ஓட்ட முடியும். நான் உனக்கு இதோ கட்டளையிடுகிறேன். அந்த "காதற் கலிவெண்பா"வில் இரண்டு சொல்லு பார்ப்போம்."

"ஆகா! இதோ சொல்லுகிறேன்.

10. இணைந்தபின் பிரியாதிவ் வுலகில்வாழ்ந் திடுதல்
அணைந்திட்ட காதலருக் கழகேன் றறியாயோ?

11. பிரிந்திடுவா யென்றெண்ணிப் பெருமழைபோல் நீர்சோரியும்
வரிநிறைந்த வென்கண்கள் வற்றிடுவ தெக்காலம்?"

ஃ

இந்தப் பாடலைக் கேட்டதும் முருகப்பன் "நீலாவின்மீது எறியுள்ள காட்டேறியும், இருளனும் பாட ஆரம்பித்துவிட்டார்கள்; நூறு ரூபா போதாது; அதிகம் கஷ்டப்படவேண்டியிருக்கு; சாதாரணப் பேய்களல்ல இது; அத்துடன் இது தேவதைகள்; சரியான பூஜை படையல் போடவேணும்; என் பிரயாசைக்கு ரூபாய் 150-கொடுத்தால்தான் ஒப்ப முடியும்" என்றான். இதற்குள் வக்கீலான விஜயராகவனின் தந்தை அங்கு வந்து முருகப்பனிடம் இருபது ரூபாய் தரப்போக, அதை முருகப்பன் வாங்காமல், முதலில் முழுசாக ஐம்பது வைத்துப் போடுங்கள், யோசிக்காதங்க, பிடித்திருக்கிற மூணும் ரொம்ப பொல்லாதவைகள், பெண்ணையே கொண்ணு போடுங்க" என்றான். இதைக்கேட்ட நீலா கொல்லென்று சிரித்துவிட்டாள். முருகப்பன் கோபத்துடன் "சிரிக்கிறாயா? பத்திரம்" என்று அதட்டினான். விஜயராகவனுக்கு ஆத்திரம் உண்டாகி மந்திரவாதியை ஒரு அறை அறைந்து தள்ளினான். நீலாவும் மறுபடியும் தடைப்பத்தை எடுத்து இரண்டு பூசைகள் தந்து, "பேயுமில்லை, சாவுமில்லை, ஐம்பது ரூபா பணமுமில்லை; ஓடு வீட்டிற்கு" என்று

> பெரிய மனிதர்களின் வாழ்க்கையில் எல்லா பாக்கியமும் வைத்து— முக்கியமான சிலவற்றைமட்டும் பகவான் மொட்டையடித்திருப்பார். குறைப்படாதார் ஞாலமீது யார்?

கூறிவிட்டுத் தனது மாமனையும் மாமியையும் வணங்கினன். விஜயராகவன் தன்பெற்றோர்களுக்கு நீலாவை ஆட்டியது காதற் கலிவெண்பா என்றநூலில் உள்ள பாடல்களாகும்; வேறு எச்சப் பேயும் அவளைப் பிடிக்கவில்லை யென்று நடந்த செய்திகளைச் கூறினன். நீலாவும்—"ஆம்"—என்று தெரிவித்தாள். "மஹா கண்டுகொண்டவன்போல் மூன்று பேய்கள் பிடித்திருப்பதாக முருகப்பன் உளறினனே" என்றார் விஜயராகவனின் தந்தை. "எல்லாம் வயிற்றுப் பிழைப்புக்குத்தான்" என்றான் விஜயராகவன். உள்ள சங்கதி தெரிந்ததும் முருகப்பன் மெதுவாக நழுவிச் சென்றுவிட்டான். பாவம் அவனுக்கு 150 ரூபா நஷ்டம்! பிரிந்த காதலர் கூடினர். நீலாவும் தன் பிராணநாதனை அன்புடனே கட்டியணைத்து மகிழ்ந்தாள். நீலாவை விஜயராகவன் எனும் பேய் பிடித்தது. விஜயராகவனை நீலா எனும் பேய் பிடித்தது. இதுதான் உண்மை.

## அன்பின் வகைகள்.

மெய்யன்பு:—பிறருக்கு மெய்யான நன்மையுண்டாகப் பாராட்டும் அன்பு.

பொய்யன்பு:—பிறருக்கு அறிந்தும் அறியாமலும் தீமையுண்டாகும்படி பாராட்டும் அன்பு.

செய்யன்பு:—தங்களுக்குப் பிற்காலத்தில் உண்டாகும் நன்மையைக் கோரி அதன் நிமித்தம் செய்யும் அன்பு.

உள்ளன்பு:—உள்ளத்தில் உள்ளதும், வெளிக்கு அதிகமாகத் தோன்றுவதுமாகிய பட்சம்.

வெளியன்பு:—வெளிக்கு அதிகமாக இருப்பதாகக் காணப்பட்டும், உள்ளத்தில் அணுவளவும் இல்லாததுமான போலி அன்பு.

பகட்டன்பு:—வெளிக்கு அதிகம் உள்ளதாகக் காணப்பட்டு உள்ளத்தில் அணுவளவும் இல்லாத பாசாங்கு அன்பாம்.

இதில் நீங்கள் எந்த அன்பிலே சேர்ந்தவர்கள்?

ஒரு சங்கதியில் அறிகிற ஒருவருடைய குணத்தைக் கொண்டே அவரது முழுக் குணத்தையும் அளந்தறிந்து விடுவதற்குக் கூடுமானதாகிறது.

---

தீமை செய்தவர்களும் துரோகிகளும் வாழ, நல்லது செய்தவர்களும், தெய்வத்தை நம்பினவர்களும் சோதனைக்குள்ளாகிறார்களே! என்ன பாவம்.



# பெரியாரின் மொழிகள்



(முன் பக்கம் 425-லிருந்து.)

577. It is not reading of many books that is necessary to make a man wise and good but the well reading of the few.
R. BAXTER.

பல புஸ்தகங்களைப் படிப்பதினுலேயே ஒருவன் அறிவுடையவனுகவும் நற்குணமுள்ளவனுகவும் ஆகிவிடமாட்டான் ? படிக்கும் புஸ்தகங்கள் கொஞ்சமாயினும் ஊன்றிப் படிக்கவேண்டும்.

578. You ought to read books as you take medicine by advice and not by advertisement.
RUSKIN.

எப்படி மருந்துகளை வைத்தியர் சொல்படி அருந்துகின்ருேமோ அவ்விதமே கற்ருேர் உதவிகொண்டு தேர்ந்தெடுத்த புஸ்தகங்களையே படிக்கவேண்டும். விளம்பரங் கண்டு பிரமித்துப் புஸ்தகங்கள் வாங்கிப் படிக்காதே.

579. We brought nothing into this world and it is certain we can carry nothing out, BIBLE.

உலகத்திற் பிறக்கும்போது நாம் ஒன்றும் கொண்டுவந்தோ மில்லை. இறக்கும்போது நாம் ஒன்றும் கொண்டுப்போகப் போகிறேமில்லை. நம்முடன் வருவது பாவபுண்ணிய மிரண்டுமே.

580. It is better to suffer death than disgrace. PROVERB.

மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே.

581. To err is human, to forgive is divine. POPE.

தவறுதல் எளிது, பொறுத்தலே பெரிது.

582. There must be a place for everything and everything in its place.

ஒவ்வொன்றிற்கும் ஒரு தனி இட மிருக்கவேண்டும். அவைகளில் அவ்வப்பொருள்களை அமைக்கவேண்டும். K. S. மணவாள ஐயங்கார்.

II

583. "Marriage hath pains but celibacy hath no pleasures."

இல்லறததில் கஷ்டங்க ளிருக்கின்றன; ஆனல் கல்யாணமே யில்லாமலிருப்பதில் சுகங்க ளொன்றுமில்லை.

584. "A man's love is but a hunger, which, when satisfied the food becomes distasteful. A woman's love is more enduring; it is not easily satisfied. It is a perpetual longing that lives as long as she lives and only dies with her ; Perhaps it still remains with her spirit after-

---

மருந்தில் ஒரு குணமும் மண்ணும் இல்லாமற் போனுலும், அதை உண்ணுகையில் புளி புகையிலை அபத்திய பதார்த்தங்கள் தள்ளி வைக்கவேண்டுமென்று தங்கள் மருந்தைப் பிரமாதப் படுத்துவர் சில கபட வைத்தியர்கள்!

wards. Woman will kiss the rod that smites and still love. She will go down to death and bless the hand that sends her there. If man could love as woman do, the earth would be Elysium."

மனிதனுடைய காதலானது (நாயின்) பசியை ஒத்தது; ஆகாரத்தை வுண்டு பசி தணிந்தவுடன் அந்த ஆகாரமே வெறுப்பாய்விடும். ஆனல், ஸ்திரீயினுடைய காதலோ நிலையானது, அவ்வளவு சுலபத்தில் தணிந்துவிடக் கூடியதல்ல. அவள் காதலானது உயிருள்ளவரை சாஸ்வதமாக விருந்து அவளுயிருடன் தான் அழியும்; ஒருக்கால் தேகம் அழிந்தபின்பும் அவள் ஆத்மாவுடன் அக்காத விருக்கும். ஸ்திரீகள் தங்கள் காதலர் தம்மைப் புடைக்கும் தடியையும் முத்தமிட்டு அவர்களை நேசிப்பர். தன் காதலன் தன்னை அடித்துக் கொன்றாலும் சந்தோஷத்துட னிறந்து தன்னைக் கொல்லும் அவன் கைகளையும் ஆசீர்வதிப்பாள். ஸ்திரீகளைப்போல் மனிசர்களும் காதலிக்கக் கூடுமாகில் உலகமே புதிதாகி இன்ப சாகரத்திற்கு இருப்பிடமாய்விடும்.

T. V. சிவசுப்பிரமணியம் பி. ஏ.,

III

585 Te be conscious that you are ignorant is the first step to wisdom.

நீ அறிவிலி யென்பதை உணர்வது தான் ஞானத்தை யடைவதற்கு முதற்படியாகும்.

586. Age considers; Youth ventures.

வயது முதிர்ந்தோர் எதையும் நிதானித்துச் செய்வார்கள்; இளமையிலுள்ளோர் தைரியமாக இறங்கிவிடுவார்கள்.

587. Dumb dogs and still waters are dangerous.

குரைக்காத நாய்களும் அமைதியாகத் தோன்றும் நீர் நிலைகளும் அபாயகரமானவை.

588. The greatest truths are the simplest.

உயர்ந்த உண்மைகளே வெகு தெளிவானவை.

589. Love ligetens labour and sweetens sorrow.

அன்பினல் கடுமையான வேலையும் சுளுவாகும்; துக்கமும் இனிமையைப் பெறும்.

590. He serves his party best who serves his Country best.

தேசத்திற்குச் சிறந்த சேவை செய்வோனே தனது கட்சிக்கும் சேவை செய்தவனுவான்.

R. இராமகிருஷ்ணன் M. A.

---

வைத்தியருக்கும் வக்கீலுக்கும் பிறரிடமிருந்து பணத்தைச் சுரண்டுகிற வழி எப்படி யென்றும், எந்த சமயத்தி லென்றும் நன்கு தெரிந்திருக்குமாம்.

---

நானும் இரண்டாவது பெண்டாட்டிக்காரன், நீங்களும் அப்படியேதான். ஆகவே அதன் அனுபவத்தை ஒருவருக் கொருவர் சொல்லித் தெரிய வேண்டியதில்லை யென்று ஒருவர் மற்றொருவருக்குக் கூறினர்.

# சிறுமணித்திரள்

(முன் பக்கம் 349-லிருந்து)

742. விவாகத்திற்குப் பொருத்தம் பார்க்கும்பொழுது முதலில் ஆயுளைக் கவனித்த பிறகு தான் அழகைக் கவனிக்கவேண்டும். ஏனெனில், ஆயுளில்லாதவனுக்கு அழகிருந்து யாது பயனுமில.

743. நாம் ஒரு பொருளைக் கொடுத்தால் பெற்றுக்கொள்ளாத குழந்தையான மைத்துனியானவள் நமது மனைவி கொடுத்தால் மட்டும் வாங்கிக்கொள்வானேன்? எல்லாம் தன்னிடம் நெருங்கியவர்களிடையே தான் அதிக உறவு.

744. முகம் அழகாயிருப்பினும் அழகில்லாதிருப்பினும் அது உள்ளவாறே கண்ணாடியில் தெரியுமேயன்றி வேறுவிதமாகப் புலப்படாது. அது போல், களங்கமற்ற சாதுக்களுடைய மனதில் நல்லவர்கள் கெட்டவர்கள் இவர்களுடைய நடத்தை அப்படியே படிந்துவிடும். அது அறிந்தவனின் குற்றமன்று. அறியப்படுபவருடையதேயாகும். ஆகையால், அறிந்தவனிடம் கோபிப்பது அறியாத்தனமே.

745. நீ நினைத்த காரியத்தைச் செய்வதற் கேற்ற சமயம் நேரிடின் அதை இழந்துவிடாதே. எப்படியும் முடிக்கவே பார். இல்லையேல் அதற் கேற்ற தருணம் பல்லாண்டுக வானுலும் கிடைக்கவே மாட்டாது.

746. நாம் எவ்வளவுதான் கொஞ்சமாகவும் அன்பாகவும் பேசினாலும் நமது மனைவிமட்டும் ஒரு வார்த்தை கூடச் சொல்வதில்லை. அவள் உண்மையாகவே உள்ளன்புள்ளவளாகவே இருக்கலாம். அதை வெளியில் காட்டாதிருக்கிறாளோ என்னவோ! அல்லது அன்பே இல்லையோ யாதோ! இதனால் நமது மனது மிகவும் வருந்துகிறது. சில சமயம் கோபத்தையும் அடைகிறோம்.

747. கொம்புத்தேனினும் இனிப்பது அன்புத்தேனேயாம். கொம்புத்தேன் அளவுக்கு மீறினால் திகட்டிவிடும். அன்புத்தேனோ அப்படியன்று. பருகப் பருகத் திகட்டாதது. மனதிற்கு மகிழ்ச்சியையும் உடலுக்கு உத்ஸாகத்தையும் கொடுக்கவல்லது.

748. பொழுது போக்குவதற்கு வழியில்லாமலிருக்கையில் நம்மிடம பேச ஒருவரும் வருவதில்லை. நல்ல கிரந்தங்களைப் படிக்கும் சமயத்தில், ஒருவரைக் காணச் செல்லுகையில், ஒரு வியாசத்தை எழுதப்புகும் தருணத்தில்தான் நம்மிடம் வந்து தொந்தரை செய்கின்றனர். நாம் தட்டிச் சொல்வதற்கும் தாக்ஷிணியம் நடுவே குறுக்கிடுகிறது. என்ன செய்கிறது?

749. எவன் தன்னறிவு சிறிதுமின்றிப் பிறது புத்தியையே பின்

---

மூன்றாம் கடன்வேண்டுமென்று கேட்க, அவன் மவுனமாய் வேறொரு வாசல் வழியாய் வெளியே சென்று விட்டான். காரணம் முன்பு தந்த கடன் திரும்பி வாராததாலாம்.

பர்மகிறுனே? அவன் கூடிய சீக்கிரம் தானும் செட்டு அண்டினவர்களையும் கெடுத்துவிடுவான்.

750. ஒரு சுட்ட செங்கல் உடைந்தபோனுல் அதன் துண்டுகள் எப்படி ஒன்று சேராதோ அதுபோல் மிகவும் நொந்து பிரிந்த மனது எவ்வளவுதான் ஆறுதல் செய்யப்பெறினும் முன்போல் அவ்வளவு ஒற்றுமையை யடைவது அரிதினு மரிது.

751. நாம் செய்கிற வேலையில் தப்பிதமிருந்தால் எஜமானர் கோபிப்பதை ஒருவகையில் ஒப்புக்கொள்ளலாம். எடுத்ததற்கெல்லாம் முகத்தைச் சுளிக்கும் எஜமானனிடம் எவ்வளவு உத்தமனான பணியாளும் வருந்தாமலிருக்க முடியாது. அவ்விதமான எஜமானனுக்கு அடங்கி நடப்பதைவிட ஒரு கல்லைக் கட்டிக் கொண்டு அழுவது உத்தமமாகும்.

752. உலகத்தில் மிகவும் புத்திசாலியாயும் படித்தவனுயும் இருக்கிற மனிதன் இம்மூன்று வகைகளில் சேர்ந்தவனுகவே இருப்பான். (1) அல்பமான ஆயுளை யுடையவன். (2) ஏழை. (3) பிள்ளை இல்லாமலிருத்தல். இம்மூன்றும் இல்மாமலிருப்பவன் அரிதே.

753. உமியினின்று விடுபட்ட அரிசியானது எப்படி முளையாதோ, அதுபோல் பிறர் சகாயமின்றி செய்யப்படும் காரியமும் அநேகமாக நிறைவேறுது.

754. உத்தியோகம்—கலகப்—அரிப்பு—சூது—கள்—பிரமாதர்களை விரும்பல் — ஆஹாரம் — இன்பம் இவைகளைச் சேவித்தால் விருத்தியடையுமேயன்றி ஒருபோதும் குறையாது. P. R. நாராயண சர்மா.

---

## வெகுமதி என்பது என்ன ?

நற்குண நற்செயலின் பயனுகவும், அவற்றைத் தொடர்ந்து நடத்தவும், மற்றும் நற்குண நற்செயல்களை விரும்பி அப்பியசிக்கவும், தகுந்த ஆதரவும் உற்சாகம் தரும் கருவியாகவும் விளங்கி, ஆளுபவரின் தந்திர யுக்திகளில் ஒன்றுகிப் பெறுவோருக்குச் சந்தோஷம் விளைக்க அருளப்படும் நன்கொடையே வெகுமதி யென்னப்படும். இது ஒருவருடைய நற்குண நற்செயலைப்பற்றி வேறொருவர் கொண்ட மதிப்பின் பயனுகவும், அதனை விரும்பிய—புகழ்ந்த—பிறாதுமகிழ்ச்சியின் வெளித்தோற்றலக்ஷணமாகவும் விளங்கும். ஆனல் ஏமாற்றிப்பெறுவது வெகுமதியல்ல.

எவனெவன் பொறுமைக் கண்ணனே, எவனெவன் நமக்கு இடம் தெரிந்து கொள்ளி வைக்கக் கூடியவனே அவனை அடியுடன் விலக்கி ஒரு கடிதமும் அவனுக்கு எழுதாதே. அவன் விலகுவதும் நம்முடைய நற்காலமே.



# ஹாஸ்ய சஞ்சீவினி



கருப்பன் :—இந்தப் பெண் அவருடைய மனைவியா? ஆச்சரியமே. நாடகத்தி லிருந்ததாக ஞாபகம்.

மூப்பன் :—அந்த ஆச்சரிய மெல்லாம் கல்யாணமானதும் மறைந்து போய்விட்டது. இப்போது லேடி ரத்தினம் பிள்ளை என்று அம்மாளுக்குப் பெயர்.

——

மூத்தம்மா :—இதென்ன பாழுங் கூச்சல்? குழந்தைகளை இப்படியா வைத்திருக்கிறது? அடித்து, உதைத்து, திட்டி அடக்குகிற தில்லையா.

சின்னம்மா :—குழந்தைகள் அப்படித்தான் ஓடியாடிக் கூச்சல் போடுவார்கள். உங்களுக்குக் குழந்தைகள் பிறந்திருந்தால் இதை ஒரு சங்கடமாய் 'கூச்சல்' என்று சொல்ல மாட்டீர்கள்.

——

டாக்டர் :— மிக்க கொடூரமான ஜ்வரத்தில் திடீரென்று மருந்துக்கு வராமல் நின்றுவிட்டீர்களே. தமிழ் மினுசுக்கு வைத்தியரிடம் போனீரா?

நோயாளி :—என் தகப்பனார் இறந்த தந்தி வரவும் ஊருக்குச் சென்றுவிட்டேன். அந்த அலங்கோலத்தில் ஜ்வரமும் உங்கள் குயினைவை வேண்டாமலே தன் ஊருக்குப்போய்விட்டது.

——

பத்திராசிரியர் :—சரி, சரி, ஆகட்டும், படித்து இந்தப் புஸ்தகத்திற்குச் சீக்கிரம் 'மதிப்புரை' எழுதுகிறேன்.

நூலாசிரியர் :— மதிப்புரைக்காக நான் தரவில்லை. மதிப்புரையே எனக்கு வேண்டாம். தங்களுடைய அன்புக்காகவே என் ஞாபகமாகக் கொடுத்தது. ஆகவின் 'மதிப்புரை' எழுதிவிட்டு, அதற்கும் நான் கொடுத்த புஸ்தகத்திற்கும் சரியாய் விட்டதென்று கணக்குத் தீர்த்துவிடாதீர்கள். என் ஞாபகம் என்றும் இருக்கவே தந்தேன்.

——

"அந்தச் சுகம் எப்படி இருந்தது? அதைக் கொஞ்சம சொல்லு".

"உனக்கும் அந்த வயது வரும். சற்று பொறு. அப்போது தெரியும்."

——

வேம்பு :—என்னடி உன்மேல் இப்படி வேப்பெண்ணெய் நாற்றம்?

சோம்பு :—குழந்தைக்கு வேப்பெண்ணெய் ஊற்றினேன். அதைச் சொல்கிறயாக்கும். "எல்லாம் நாற்றந்தாண்டி!"

——

சீனு :—நான் ஒரு புதிய கடை வைக்கப் போகிறேன்.

வேணு :—அப்படியானல் நானும் கொஞ்சம் கடன் வாங்க வருகிறேன்.

——

புருஷன் :—ஏண்டி என்னுல் தானே இவ்வளவு வாழ்வு? நான் போனல் நீ தலைகீழ் விழுகிற இந்த வாழ்வெல்லாம் மாறிவிடுமே.

மனைவி :—என்னவோ பிரமாதம்! புருஷன் போயும் எத்தனையோ விதவைகள் பிழைக்கவில்லையா? செத்தா போனர்கள்?

——

---

அவன் உன்மீது கோபித்து உர் என்று இருந்தால், நீ அதைத் தெரிந்து கொள்ளாதவனாகவே போய்விடு. அவன் ஏமாறிவிடுவான்.

"பெண்கள் மிகவும் துர்ப்பலம்."

"ஓ! இல்லவே யில்லை. அவர்கள் தூக்குகிற 18-முழச் சேலையே அவர்களைப் பலசாலிகளென்று சாக்ஷி சொல்லுமே." ———

(1)

"என்ன வெகு யோசனையிலிருக்கிறீரே!"

"ஆம், இவளை ஏன் கல்யாணம் செய்துகொண்டோமென்றுதான். பெரிய துக்கம் இது."

(2)

"என்ன பெரிய யோசனை செய்கிறீரே?"

"சம்சாரம் தவறிவிட்டது. மறு கலியாணத்திற்கு எங்கே சென்று கடன் வாங்குவதென்று யோசிக்கிறேன். பெரிய துக்கம் இது."

———

ஜட்ஜ்:—(திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டுள்ள கைதியைப் பார்த்து) உன்னுடைய தொழிலில் உனக்குக் கிடைக்கக்கூடிய எவ்வித வஸ்துவையும் நீ எடுத்துக்கொள்வாயல்லவா?

கைதி:—(ஜட்ஜ் தன் பக்கத்தில் அநுகூலமாகப் பேசுகிறாரென்றெண்ணிக்கொண்டு) ஆம் எஜமான்களே!

ஜட்ஜ்:—சரிசரி, அப்படியானால், இப்போது என்னிடத்தில் ஆறு மாதக் கடுங்காவல் தண்டனையொன்று உபயோகமில்லாமல் துருப்பிடிப்பதற்கு ஆரம்பிக்கிறது. அதை இப்போது உன்னுடன் எடுத்துக்கொண்டுபோனால் நீ நிருந்துகிற எல்லாக் காரியங்களுக்கும் அநுகூலமாயிருக்கும். ———

ஒருவன் தன் கிராமத்துக்குப் போகையில் நடுவே மழையில் அகப்பட்டுக்கொண்டு காலில் இருந்த பாதரக்ஷையைக் கையில் எடுத்து உயர்த்தி சிறு குடையாகத் தலைக்கு மேல்பிடித்துச் செல்லுகையில், பாதரக்ஷையின் அடியில் பற்றியிருந்த நாகலில் மழையடித்துக் கரைந்து அவன் தலையில் விழுந்தது. உடனே நாற்றமுண்டானதைக் கண்டு, அவன், "இதென்ன பீ மழை பெய்கிறது" என்றானாம்.

———

குப்பர்:—நீங்கள் என்னை இன்னும் நன்கு அறிந்துகொள்ளாமைக்குச் சிறிதும் வருத்தப்படாமலிருக்க முடியவில்லை. உலகம் அப்படிப்பட்டது. உங்கள்மேல் தப்பிதமில்லை. என்னைப்பற்றித் தெரிந்துகொள்ளாதவற்றைக் காலவட்டம் அதாவது இனி வருங்காலம் அறிவிக்கும். நான் இப்போது சொல்லவேண்டுவதில்லை.

சுப்பர்:—தாங்கள் சொல்லவேண்டிய அவசியமில்லாமலே, இனி வருங்காலம் வரையில் காத்திராமலே—தாங்கள் ஒரு பெரிய கபடசாகரம்—வெளியுபசார கேசரி, உள்ளே அன்பு ஒன்றுமில்லையென்று வெகு நன்றாகத் தெரிந்துகொண்டு விட்டேன்.

———

"தண்டனை" என்னும் பதம் தண்டு—தண்டம்—என்னும் மொழியினின்று பிறந்து தடி (ஊன்றுகோல், கொம்பு) கொண்டு அடிப்பதற்கு ஆகித் தற்போது சகலவித ஆக்கினைக்கும் பொதுப் பெயராய் அமைந்து வருகிறது.

———

எல்லாம் நெருங்கிய உறவுகள்தான். அவரவர்களின் பிழைப்புக்கென்று ஓடிவிட்ட இடங்கள் வெகுவெகு தூரத்திலாய்விட்டன. உறவும் மறந்தன.




# சுபோத பாரிஜாதம்.

1. இராஜநீதியும், ஸ்திரீகளின் கற்பு நிலைமையும், மறையவர்களுடைய வேதமந்திரங்களும், ஸத்தியமும், தருமமும், கடவுள் ஆராதனையும் இவ்வாறும் சேர்ந்துதான் காலாகாலங்களில் மேகம் வருஷிக்கக் காரணமாகின்றதென்று உணர்ந்து அவ்வண்ணம் ஒழுகிவர வேண்டும்.

2. தன் பர்த்தாவுக்குத் தலையணையாக உதவுவதற்குத் தனது கைகளை நீட்டும் மங்கை தனது உள்ளத்தில் மறைந்து நிற்கும் அன்பை அங்கு வெளியிடுகிறாள்.

3. கணவனுக்கு இன்பமுடையவளாகி, அவன் கஷ்டங்களைத் தன் நற்குணங்களால் மறைத்து, அவனைப் பிரீதிக்காதவர்களிடமிருந்து தானும் ஒதுங்கி, என்றும் அவன் நினைவேயாக உள்ளவள் எவளோ அவள்தான் உத்தமி.

4. வீட்டிற்கு அழகையும் வசிகரத்தையும் உண்டாக்குகிறவர்களான பெண்மணிகட்கும் மகாலக்ஷ்மிக்கும் யாதொரு பேதமுமில்லை.

5. பெண் புஷ்பவதியாய்விட்டாள்தான்; வீட்டிற்குள் விவாகமின்றி வெகுகாலமாக அடைபட்டிருக்கிறாள்தான்; ஆனால், இதற்காக அவசரப்பட்டு நற்குணமில்லாதவனுக்குத் தந்து கண்ணீர்விடும்படி செய்யக்கூடாது.

6. மனைவி என்பவள் தெய்வத்தின் நன்கொடை. அவ்விதமே கணவன் என்பவர் கடவுள் கொடுத்த பாக்கியம். அதில் கோணல்கள் ஏதேனும் இருப்பின் அது அவரவர்களின் பொறுமையைச் சோதிக்கிறதற்காகக் கடவுள் உண்டுபண்ணியவையாகும். பொறுத்துக்கொண்டு மனது ஒத்துப் போனால்தான் நல்ல வாழ்வு உண்டு.

7. மனிதர்கள் தெய்வத்தினால் கொடுக்கப்பட்ட மனைவிகளை யடைந்திருக்கிறார்களே யன்றி தங்கள் மனதின்படி யடையவில்லை. இவ்விதமே கடவுள் நியமித்தபடி கணவன் ஏற்படுகிறாரேயன்றிப் பெண்களின் மனோரதங்களுக்கு ஏற்றபடி அடைந்திருக்கவில்லை. இதை நன்றாக நினை.

8. பர்த்தாவைத் தனது இனிய குணங்களால் தன் வசப்படுத்திக் கொண்டு போற்றத்தகுந்த உயர்வைப் பெற்றிருக்கும் ரமணீரத்நங்களுக்கு ஸ்வர்க்கபோகமும், முக்தியும் இவ்வுலகிலேயே இருக்கின்றன.

9. எந்த வமிசத்தில் உடன் பிறந்த பெண்கள் ஆதரிக்கப்படாமல்

---

இவர்கள் தன்னவர்கள், இவர்கள் அன்னியர்கள் என்று பேதம் பார்த்துப் பிரிக்கும் கண்களுக்கு வாய் நீளமாயும், கை குட்டையாயும், நெஞ்சு பாசாங்குத்தனமாயும் தர்மம் லோபமாயும் அக்கிரமம் அதிகமாயும் இருக்கும்.

போகின்றனரோ அந்த வமிசத்திற்கு விருத்தி என்பதே இல்லை. அந்தக் குலம் நசித்துவிடுகின்றது.

10. மனைவியைக் கணவன் நூதனவஸ்திராபரணங்களால் திருப்தி செய்தால்தான் அவளும் ஸந்தோஷ முடையவளாவாள். அவள் மனம் இன்புறாவிடில் கணவனுக்கும் இன்ப மில்லை. அதனால் சந்தான விருத்திக்கும் மார்க்கமின்றிப் போகலாம்.

11. தன் பர்த்தாவிடம் அன்புள்ள நங்கை தன் காதலைப் பலவகைகளி லும் வெளியிடுவாள். தன் கணவன் முன்பு கைகள்ஆபரணங்கள் இவற்றை நிமித்தமின்றி நீட்டுதலும், தன் கூந்தலை அவன்முன்பு அவிழ்ந்ததுபோலக் காட்டி முடித்துக்கொள்வதும், தன் ஆடைகளை அங்குச் சரியாக உடுத்த லும், தன் புருவங்களை எறிட்டுப் பார்ப்பதும், தன் கணவனைக் கண்ட இடத்தில் அச்சமும் அன்பும் பெருக ஒருபுறமாய் ஒதுங்கி ஓரைக்கண்ணால் பார்த்துப் புன்னகையிற் பூரிப்பது மாய் விளங்குவாள்.

12. பூஜ்பதை செய்யப்பட்ட ஒரு ஸ்திரீயால் சபிக்கப்பட்ட ஒரு குடும்பமானது, பில்லி சூனியத்தினால் அழிவதுபோல அழிந்துவிடும்.

13. ஒருவன் நூறுவருஷகாலம் ஸ்திரீயின் இன்பத்தை அனுபவித்தா லும் அந்த ஆசை நீங்கித் திருப்தி அடைகிறதில்லை. புருஷர்கள் பத்தினி இறந்தபிறகு தங்களுடைய தேக அசக்தியினாலேயே ஸ்திரீ யின்பத் தைப் பெரும்பாலும் துறக்கிறார்கள். ஆனால், ஸ்திரீகளோ தாங்கள் கைம் பெண்ணாகியும் கற்பைக் காப்பாற்று வதில் மிகுந்த மனோவுறுதி காட்டிப் புருஷ சுகத்தை மறக்கின்றனர்.

14. ஸ்திரீகளால் இரத்தினங்க ளுக்கு அழகு உண்டாகிறது. இரத்தி னங்கள் இல்லாமலே ஸ்திரீகள் தங்கள் நாயகனுக்கும் மனோகரமானவர்களாக வும், அவர்களின் ஆசையை விர்த்தி செய்யக்கூடியவர்களாகவும் ஆகலாம். இரத்தினங்களோ ஸ்திரீகளின்றிப் பிரகாசிக்கமாட்டா.

## சிறுவர் கையில் துட்டு.

பொழுதுவிடிந்தால் துட்டு, பொழுதுபோனால் துட்டு, பள்ளிக்கூடம் போவென்றால் துட்டு, அதைச் செய் யென்றால் துட்டு, தாயார் கடைக்குப் புறப்பட்டால் துட்டு, தந்தை வேலைக்குப் போனாலும் துட்டு, வேலையை விட்டு வீடுவந்தாலும் துட்டு, தெருவில் ஏதாவது விற்றாலும் துட்டு, தின்றுவிட்டு வாவென்றால் துட்டு, மருந்தை வாயில் போட்டுக்கொள்ளவும் துட்டு, கால்கை பிசையவோ மிதிக் கவோ அதற்கும் துட்டு, விளக்கு வைத்தால் துட்டு, விளை யாடப்போனால் துட்டு, இப்படிச் சிறுவருக்குத் துட்டு கொடுத்துக் கெடுப்பதில், கடைசியில் அவர்களே பெற்றோர் காணாதபடி பெட்டியிலிருந்து துட்டு எடுக்கச் செய்துவிடும்.

விவேகம்
விநோதம்
வசித்ரம்
விகடம்

விகடப்பிரதாபன்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரிய
ஆநந்தம்

# மூமூமூ மூஞ்சி சங்கதி!



மூஞ்சூரு சங்கதியா? அல்ல அல்ல. மூஞ்சி சங்கதி! அவன் கதி, இவன் கதி, இருந்தவன் கதி, ஊர் போனவன் கதி, வாழ்ந்தவன் கதி, வீழ்ந்தவன் கதி, வந்தவன் கதி, நொந்தவன் கதி, புகுந்தவன் கதி, பிடித்தவன் கதி, படித்தவன் கதி, நடித்தவன் கதி, தடித்தவன் கதி, அடித்தவன் கதி, இடித்தவன் கதி, குடித்தவன் கதி, ஒடித்தவன் கதி—இன்னும் ஆயிரம் கதிகளையும், அதற்குமேற்பட்ட விதிகளையும் விளக்கும் சங்கதிகள் எல்லாம் அப்பொழுதுதான் படம் எழுதிக் காட்டினாற்போல அந்த மூஞ்சியிலே தெரிந்து போகுதே, அந்த ஒரு மூஞ்சியைப் பார்த்ததும் விளங்கி விடுகிறதே, சகலத்தையும் அந்த மூஞ்சி சொல்லி விடுகிறதே, 'அகத் தழகு முகத்திலே' என்றபடி உள்ளேயிருக்கும் கசுமாலக் குப்பைகளெல்லாம் முகத்தில் வெட்ட வெளிச்சமாய்விடுகிறதே—அதைப்பற்றித்தான் விகடன் மூமூமூ யெனக் கீக்கி நினைத்துக் கொண்டு இங்கு கொஞ்சம் தொனப்பிக் காட்டலாமென்று புறப்பட்டேன். கேட்கிறீர்களா? என் குஞ்சு குட்டிகளே! ஃ

பெருத்த தலையும் சிறுத்த உடலும் குறுகிய கால்களுமாய் ஒருவன் விகார ரூபியா யிருக்கிறான். ஆயினும் அவன் முகத்திலே ஒரு ஒளி வீசுகின்றது. அவனைப் பலர்பழித்துப் பேசினாலும் கடைசியில் அவன் தாண்டா அப்பா லக்ஷ சிமோனி எல்லோரும் கைகட்டிக் காத்திருக்க உயர்ந்துவிடுகிறான். அவன் சிறுவயதில் கேவலப்பட்டுச் சீரழிந்த வேளையிலும் அவன் முகத்தைக் கவனித்தசிலர் அவன்தான் நாளைக்கு அதிர்ஷ்டசாலியாவான் என்று அவர்களுக்கே ஒரு நிச்சயம் ஏற்பட்டுச் சொல்லிவிடுகிறார்கள். அப்படியே பிந்திய நாளில் நடந்தும் விடுகிறது. ஃ

இன்னொருவன் இருக்கிறானய்யா! அவன் சாப்பாட்டுக்கு என்றைக்கும் கஷ்டமே இருக்கும் என்று ஆரம்பத்திலேயே அவன் தந்தை எப்படியோ தீர்மானித்துவிடுகிறார். அதற்குத் தகுந்த விதமாக அதிர்ஷ்டவதியான ஒரு பெண்ணைப் பார்த்து மணமுடித்துவிடுகிறார். அந்தக் கண்ணாட்டியால்தான் அவனுக்கு சோறு என்று தகப்பனார் சொல்லிவிடுகிறார். சொத்துக்கள் எவ்வளவோ இருந்தும் அவ்வளவும் பிற்காலத்தில் போய்விட, மனைவியின் தாய் வீட்டினரால் ஸம்

ரக்ஷிக்கப்படும்படியாகி மனைவியால் தான் சோறு என்பதும் உண்மையாய் முடிகிறது! இதுவும் மூஞ்சி காட்டி விடும் சங்கதி.

ஃ

ஒருவனுக்குக் குழந்தைகளே இல்லையென்று ஜாதகம். ஆயினும், அவன் முகத்தின் ஒளி தந்தை ஸ்தானத்திற்கும் அவன் கொடுத்துவைத்திருக்கிறானென்று சொல்லுகிறது. அதற்குச் சரியாக புத்திரபாக்கிய வாமுள்ள ஒரு பெண் அவனுக்கு மனைவியாய் அமர்ந்துவிடுகிறாள். இருளாகவே கிடக்குமென்ற வீட்டில் எண்ணெயற்ற விளக்கு வந்து சோராமல் நன்றாகக் கொளுத்திவிட்ட தீபம் வந்து ஜ்வலிக்கவே, இருளும் பறந்து ஒளியும் பிறந்து வீடும் லக்ஷ்மீகரமுள்ளதாவது போல, வந்த பெண்ணின் அதிர்ஷ்டத்தால் மக்களும் தோன்றிவிடுகின்கின்றனர். அவனுக்குக் குழந்தை குட்டிகள் ஏது என்று குதூகலமாயிருந்தவர்கள் இப்போது வயறு எரிகின்றனர்.

ஃ

இன்னொருத்தி இருக்கிறாளய்யா கருத்த குட்டி! அவள் அக்கா இருவரும் சிவப்பாயிருக்க, அவள் எங்கிருந்து தான் பிறந்தாளோ கன்னங்கரேலென்று; ஆயினுமென்ன? அக்காளுக்கு இல்லாத ஒரு தனி ஒளி அவள் மூஞ்சியிலிருந்து, அவள்தான் நீண்ட காலம் வாழ்கிறாள். அவளது தமக்கைகள் அற்பாயுளாக விவாகத்திற்கு முன்பே முடிந்துவிடுகின்றனர்.

ஃ

ஒருவனிடம் இன்னொரு சிங்கமுக ஒளியிருக்கிறது. அவன் எவருக்கும் உட்படாமல் தலை மிஞ்சியவனாகவே, தன் கை உயர்ந்தவனாகவே போகிறான். சின்னஞ் சிறு பயலாக இருந்துங்கூட அவனிடம் ஒரு மரியாதை வைத்தே மற்றவர் நடக்கின்றனர். மற்றப் பயல்களுக்குக் காலணா திருவிழாவுக்குத்தந்தால் இவனுக்கு இரண்டணா தருகிறார்கள். இவன் மற்றவர்களைவிட ஒருபடி உயர்ந்தே காணப்படுகிறான். இதே உயர்வு அவனைக் கட்டையிலே வைக்கிற காலம் வரையும் அவனைச் சுற்றிக்கொண்டு பெருமையான வாழ்வு வாழ வைக்கிறதே, அதுதாண்டா அப்பா பெரிய அதிசய சங்கதி; அவன் கையில் காசும் சரியாய் இருப்பதில்லை. ஆனாலுமென்ன ஊரும் உலகும் உற்றாரும் மற்றாரும் அவனுக்கு ஒரு தனி மதிப்பும் ஒரு தனி மரியாதையான தாம்பூலமுமே கொடுத்து உன்னதப்படுத்துகிறார்கள். அவனுக்கும் எவ்வளவோ பணம் கைக்குவருகிறது; எவ்வளவோபேர்கள் அவன் அன்னத்திற்குக் காத்திருந்தும் உண்ணுகிறார்கள். இவ்வளவு பெருமை வாழ்விலும் அவன் தலை கீழாக விழுந்து தள்ளிப் போய்த் தலை விரித்தாடுவதில்லை. வணங்கிய குணமுள்ளவனாகவே, ஆனால், தலை நிமிர்ந்த மேலான ஸ்வபாவமாகவே அவன் போகிறான். இது ஒரு மூஞ்சியின் வேடிக்கை!

ஃ

இன்னொரு மூஞ்சியின் சங்கதி கேட்கிறீர்களா? என்னவோ அதைப் பார்த்த மாத்திரத்தில் அது கபட மூஞ்சி என்று தெரிந்துவிடுகிறது! ஆளுக்குத் தக்கபடி தாளம் கொட்டும் மூஞ்சி என்று விளங்கிவிடுகிறது. அன்புமில்லை, ஆசை கொள்வதுமில்லை. ஆயினும் எவ்வளவோ பிரியம்

---

தன்னையொன்று இரவல் தரும்படி கேட்கிறவர்களுக்குத் தன் கணவனைக் கேட்டுச் சொல்லுகிறேன் என்று சொல்லிவிடுவதும், அவ்விதமான வழக்கமுடையவளாக எப்பொழுதுமே இருப்பதும், மற்ற பெண்களுடைய மனஸ்தாபத்திற்கும் குட்சிகளுக்கும் ஆளாகாது தப்ப சுலபமான வழி.

காட்டிக் கொள்வதுபோல் அந்த மூஞ்சி பாசாங்கு வேஷம் போடுகிறது. பேசுவதெல்லாம் பொய், செய்வதெல்லாம் புண்ணிலே கோலிடுதல், வாழைப்பழத்திலே ஊசி சொருகல். ஆனாலோ வெகு உண்மையாக நடந்துகொள்வதுபோலவும், சத்தியவந்தன் போலவும் காட்டிக்கொள்ளப் பிரயாசைப்படுகிறது! ஒருவனுக்குக் கடன் வாரண்டு வந்து அவனைப் பிடித்துப் போக, அப்போது இந்தக் கபட மூஞ்சி வெளியே வருவதே யில்லை. அவன் ஜாமீன் கொடுத்துத் தன் வீடு திரும்பிய பிறகு இந்தக் கபட மூஞ்சி அவனிடம் போய், இப்போதுதான் கேள்விப்பட்டேன், வெளியிலே போயிருந்தேன். கடன் வாரண்டுக்கு நான் இருந்திருந்தால் உடனேஜாமீன்தந்திருப்பேனே என்று தடபுடலாய் வார்த்தைகளைக் கொட்டுகிறது! ஒருவன் ஊரிலிருந்து வந்தது நேற்றே தெரியும். ஆனால் அவனைப் பார்க்கப் போகிறது கிடையாது. அலக்ஷியமாய் நேற்று முழுதும் இருந்துவிடுகிறது. பிறகு மறுநாள் புறப்பட்டுப் போய் அவனைக் கண்டுகொண்டு, நீங்கள் நேற்று வந்த சங்கதி எனக்குத் தெரியாது என்று வார்த்தைகளை நீட்டுகிறது! உள்ளுக்கோ எவ்வளவோ கெடு புத்தி! வெளிக்கு மட்டும் தாராளமான வண்டி வண்டியாகக் கொட்டுகிற சிரிப்பு! இந்தக் கபடப்பேயாண்டிகள் கடைசியில் என்ன வாரிக்கொள்ளப் போகிறார்களோ அதுதான் விகடனுக்குத் தெரியவில்லை! இவர்களின் உள்ளத்துப் பவிசியும் லக்ஷணமும் அவர்களின் மூஞ்சியே சொல்லிவிடுவதில், அவர்கள் என்னதான் ஆடம்பர உடைகள் போட்டு தளுக்குக் காட்டி மறைத்தாலும், மற்றவர்கள் அதைக் கண்டுகொண்டு வெறுத்து ஒதுங்கி தூரத்தான் போய்விடுகிறார்கள்! ஃ

இன்னொரு மூஞ்சி; அது வெகு உருக்கமாயும் மக்க உபசாரமாயும் நடப்பதாகக் காட்டுகிறது. உழைக்கிறதுங்கூட உண்டுதான். ஆனாலுமென்ன, அந்த மூஞ்சியிலே பொறாமையும் மற்றவர் வாழச் சகியாமையும், தாண்டவ மிட்டுக்கொண்டே திரிகிறது. பிரிக்கிற புத்தியும் அந்த மூஞ்சியில் இருக்கிறது. ஒரு வீட்டுக்காரன், தனக்கு வேண்டாதவனா யிருந்தால் தன் காரியத்துக்காக அவன் மனைவிக்குத்தான் வேண்டிய வகை போல் நடித்துக்கொண்டு மயக்கி, தன் சங்கதியை நடத்திக்கொள்ளுகிற பச்சுவம் அந்த மூஞ்சியில் இருக்கிறது. இந்த மோசக் கோடுகள் அந்த மூஞ்சியைப் பார்த்ததும் தெரிந்துவிடுகிறது!

ஃ

வேறொரு தினுசு மூஞ்சிகள்! இந்த மூஞ்சிகள் ஒருவரை யொருவர் காண எவ்வளவோ தூரமிருந்து வருகிறதுண்டுதான். ஆனாலு மென்ன, காண வந்தவர்களிடம் இந்த மூஞ்சியும்-இவர்களைக் கண்டுகொண்ட வீட்டிலிருக்கிற மூஞ்சியும் பார்த்தபோது மட்டும் சிரிப்பும் வரவேற்பும் காட்டுகிறார்களே தவிர, இந்த இருவகை மூஞ்சியிலும் இயற்கையாக உண்டாகிற ஆவலாதிகளும், பாசங்களும் தோன்றக் காணோம்! ஏதோ கொஞ்சம் நாய் நக்கின பிரியம்! அந்த நக்கின பிரியம் நாலு நாழிகையில் நலங்குலைந்து மறைகிறது! ஃ

இன்னொரு மூஞ்சி அது மகா தந்திரமுள்ள தளுக்கு மூஞ்சி! ஆளுக்

---

பிச்சைக்காரனுக்கு ஏன் வட்டு பூர்த்தியும் என்றாலோ, அப்படியல்ல; அவனும் விவாகத்திற்கு வந்த ஒரு உண்மையான விருந்தாளியே. மேலும் பந்துவைவிட அவன் கடவுளின் மெய்ப் பிரதிநிதியாகவும் இருக்கலாம்.

கேற்றதுபோலவும் வேளைக்கு இசைந்தது போலவும் வேடம் போடும் மூஞ்சி! இந்த சாமர்த்திய தந்திரங்கள் அவ்வப்போது வெளிவந்து ஆறு காசுக்குக் கூட நம்பக்கூடாத நிலைக்கு அவர்கள் வந்துவிடுகிறார்கள்! அவர்கள் வாழ்வுங்கூட அப்படியே கிழுக்குஇறங்கிய முகமாகவே போய்விடுகிறது!

ஃ

வேறொரு மூஞ்சி! அது எப்பொழுதும் மூஞ்சியைப் பெரிய தன்மையாக்கிக்கொள்ள விரும்புகிறது. அதற்கேற்றதுபோல் பெரிய எண்ணங்களிலும், பெரிய ஆடம்பர உடுபாவனைகளிலும் நடை போடுகிறது! அதிலிருந்து மூஞ்சியும் மண்டையும் மூளையும் பெரியதாய் விரிந்துவிடுகிறது; முன்னே ஜன்னலின் கம்பிகளுக்கிடையே தன் கழுத்தை நீட்டியதுபோல் இப்போது முடிகிறதில்லை. ஏனெனில் மண்டை ஓடு பெரியதாய் வளர்ந்துவிட்டதே; இந்தவித மூஞ்சியில் பார்த்ததும் பெரிய தன்மையின் கோடுகள் தோன்றி பெரிய மனிதனைக் காட்டுகிறது! அப்படியே அது பெரிய மனிதனாகவும் ஆகிறது.

ஃ

சாமர்த்தியமான மூஞ்சி மற்றொன்று இருக்கிறதப்பா; அந்த மூஞ்சியைப் பார்த்ததும் அது நன்றாகத் தெரிந்து விடுகிறதடா அப்பனே; என்ன சாமர்த்தியம். மோசம் செய்கிறதா, அபகரிப்பதா, அல்ல அல்ல. எல்லாருக்கும் நல்ல பிள்ளையாக, நல்ல பெண்ணாகப் பேரெடுத்துக் கொண்டு போகவேண்டு மென்கிற நினைவு. நினைவு நல்லதுதானுகையால் மூஞ்சியிலும் அந்த தன்மையின்கோடுகளும், அந்த நல்லதுக்கான லக்ஷ்மீ விலாஸமும் தாண்டவ மாடுகிறது. அதைப் பார்த்ததும் எவரும் மயங்கி, அடிமையாகிவிடுகிறார்கள். அடங்கியும் நடக்கிறார்கள்; அவர்கள் ஒவ்வொருவருக்கும் தக்கபடி இந்த நல்ல மூஞ்சியும் நடந்துகொள்ளப் பார்க்கிறது. ஆனால் முடிவென்ன? இன்னார் தன்னைச் சேர்ந்தவர்கள்—இன்னார் எவ்வளவு தன்மீது வண்டி வண்டியாக அன்பு காட்டினும் அவர்கள் அன்னியர்களே யென்றும் இந்த நல்ல(?) மூஞ்சி எண்ணிவிடுவதால் அது நல்ல மூஞ்சியா என்று கேட்கும்படிக்குங்கூட ஆகிவிடுகிறது! அந்த மூஞ்சியின் சங்கதிகளும் வஞ்சகமும், பேதமும், தளுக்கும், தந்திரமும், எதிலும் பட்டுக்கொள்ளாமையும், வெளி உபசாரக் கை நழுவும் போக்குமாய் முடிந்து சாக்கடை நாற்றம் நாறத் தொடங்கிவிடுகிறது. மூஞ்சியைப் பார்த்தால் உத்தம கோடுகளே காணப்படுகிற தாயினும், தன்னவர்கள் என்றும், அன்னியர்களென்றும் பிரிக்கிற இழிந்த புத்தி மிகப் பயங்கரமுடையதாகி வெகு பேரை ஏமாறச் செய்து, பாவம் தவித்துக் கண்ணீர்விடவும் இந்த நல்ல மூஞ்சி பண்ணிவிடுகிறதப்பா!

ஃ

இனி அழகு மூஞ்சிகளின் கதி சொல்லட்டுமா? அழகிலே கம்பீர குணமும், கற்பு லக்ஷணமும், வீரத்வமும் விளங்குகிற அழகுக்கே மதிப்பு அதிகம். ஏதுமறியாத பேதமையுடன் கூடிய கர்வமற்ற சிந்தையுடனே சில அழகு மூஞ்சிகள் உண்டு. அவர்கள் உலகில் எவ்வளவு ஏமாறினும் மகா உத்தம உத்தமிகளானதாலே கடவுள்

---

அவள் தன்னுடன் பேசாததை இவள் தன் கணவனிடம் சொல்லி அதன் காரணமும் விவரிக்கிறாள். அப்படியே இவள் பேசாததை அவள் தன் கணவனிடம் சொல்லி அந்த மனஸ்தாப விவரமும் தெரிவிக்கிறாள்.

காலமுழுதும் அவர்களுக்குச் சஞ்சி வார்த்துக் காக்கத் தயாராயிருக்கிறார். இது இரண்டாவது திருசு. இனி மூன்றாவதான அழகு மூஞ்சிகள் இருக்கிறார்களே, அவர்கள்தானப்பா பெரிய படுபாவிகள்! ஊர் பெண்டுகளின் கற்பையெல்லாம் உறிஞ்சிப் பார்க்கிற சண்டாளர்கள்! ஏமாறிய பெண்களையெல்லாம் கெடுத்துச் சந்தியில் விட்டவர்கள்; அக்கா தம்பி—தயன் தங்கை உறவ கொண்டு கடைசியில் கொஞ்சி மிஞ்சிக்கொண்டு போய்விடுவார்கள். இந்தக் கேடுகெட்ட அழகு மூஞ்சிகள் சிவப்பும், தளுக்கும் நல்ல சதையும் கொழுப்பும் ஏறி உப்பிப் போயிருப்பதில் அவர்களைப் பார்க்கிறவர்கள் நல்ல சாமிகளென்று நம்பிவிடவும், பின்னால் அவர்கள் நல்ல காமிகளாக இருப்பது கண்டு கலங்கவும், மோசம் போகவும் வருகிறது. ஆனால், விகடனைப் போன்றவர்கள் இந்த மூன்றாந் தரத்து அழகு மூஞ்சிகளைக் கண்டதும், துடைப்பக்கட்டை போல் அவர்களை ஒதுக்கிவைத்து விடும்படி அவர்களின் மூஞ்சியின் கோடுகளே காட்டிவிடுகிறது.

இன்னொரு மூஞ்சியிருக்கிறதப்பா: அந்த மூஞ்சிகளிருக்கிறவரையில்தான் அந்தந்தக் குடும்பங்களுக்கு மங்களமுமாகிறது. எவ்வளவு வறுமையும் தொல்லைகளும் சூழ்ந்தாலும் சமாளித்துக்கொண்டுபோக முடிந்துவிடுகிறது. அந்த மூஞ்சிகள் கண்ணை மூடிக்கொண்டாலோ அவ்வளவுடன் அந்த வீட்டு வாழ்வுபோய். வீடும் உடைமைகளும் விற்கப்பட்டு இடமே மாறி பழய நிலை பறந்து வெகு கேவலப் பட்டு விடுகிறார்கள். ஆகவே, அந்த மூஞ்சியில் என்னவோ ஒரு தெய்வீகம் இருந்துகொண்டு அனைவரையும் அரசாண்டு வந்து, அந்த மூஞ்சியுடனே அந்த அரசும் முடிந்துவிடுகிறதாக்கும்!

வேறொரு விநோதம் கேட்கிறீர்களா! இரண்டு மூஞ்சிகளும் ஒன்றையொன்று காணாமலே அநேக நேசக் கடிதங்களை வெகு ராகத்தில் வெகு நாளாக நீட்டிக்கொள்கிறது. கடைசியில் இரண்டு மூஞ்சிகளும் சந்திக்கிறதப்பா! சந்தித்ததும் நடக்கிற சங்கதி என்ன? ஒரு மூஞ்சிக்கு இன்னொரு மூஞ்சி பிடிக்கவில்லை. ஒன்றையொன்று நெருங்கிப் பேசவும் நிற்கவுமே மனம் ஒன்றுபடுகிறதில்லை. கடைசியில் முடிவு என்ன? சீக்கிரம் இந்த இரண்டுமே பிரிந்துபோகிறது. மறுபடி கூடுவதுமில்லை சந்திப்பதுமில்லை. ஆகவே மூஞ்சியில் பரஸ்பரம் வசீகரித்தலான காந்தசக்தியானது ஒன்றிருந்துகொண்டு அந்த மின்சாரகாந்தம் பாயாத இடத்தில் அதுவும் ஒட்டிக்கொள்கிறதில்லையென்று தோன்றுகிறது!

மற்றொரு விசித்திரம்! எங்கேயோ கிடக்கிற ஒரு ஆண்கட்டைக்கு எங்கேயோ பிறந்து வளர்ந்த ஒரு பெண் குஞ்சு பெண்டாட்டியாய் வருகிறது. சிலநாளைக்குப்பிறகு இந்த இருமூஞ்சிகளையும் பார்த்தால் ஒன்றுக்கொன்று பொருத்தமான மூகச்சாடை ஒட்டியதான மூஞ்சிகளாய்ப் போய்விடுகின்றது. கண்டமாத்திரத்திலேயே அவள் புருஷன் இவன்—இவன் மனைவி அவள் என்று சொல்லக்கூடிய ஒற்று

---

உப்பில்லாப் பத்தியக்காரன் புளி உப்புக்கு ஏங்குவதுபோல், விவாகமற்றவனும் விவாகத்திற்கு ஏங்கி, பின் பத்தியம் தீர்ந்ததும் புளி உப்பையுண்டு சாதாரணமாவதுபோல், விவாகமானதும் அது கிடைக்காதவரமென எண்ணியதுபோய் அது அவனுக்கு சாதாரணமாகிவிடுகிறதாம்.

மையான ஜாடை அவர்களுக்குள் ஏற்படுகிற தேக சம்பர்தத்திலிருந்து உண்டாகி, அதனுல் மூஞ்சியின் சம்பந்தமும் பேதம் அதிகமின்றி ஒன்றுய் விடுகிறதாக்கும்! இது ஒரு விசித்திர செய்தி! ஃ

வியாபார மூஞ்சி! இது இந்த மூஞ்சியைப் பார்த்ததும் தெரிந்துவிடும். வியாபார உத்தேசத்தையே எதிலும் நுழைத்துக்கொள்ளும். நட்பையும் பார்க்காது—உறவையும் பார்க்காது—பிறருக்கு ஆபத்து என்றுல் அதையும் நோக்காது. தன் வியாபார சங்கதியைத் தான் முதலில் கவனித்துக்கொள்ளும். எவ்வளவு அன்னியோன்னியத்திலும் வியாபார உள்மர்மத்தை வெளியிட்டுவிடாது. இந்த மூஞ்சி நேசத்துக்கு உதவுவது அதிககஷ்டம். காதலுக்குக்கூட அப்படித்தானே என்னவோ! அதிலும் மோசடிகள் செய்கிற வியாபார மூஞ்சிகளும் இல்லாமலில்லை. ஃ

கொலை மூஞ்சி! இதைப் பார்த்ததும் அது செய்த ரகசியக்கொலை அதன் முகத்தில் காட்டும். திருட்டு மூஞ்சி! இதுவும் ஒருசமயம் அகப்பட்டுக்கொள்ளும். தன் காரிய மூஞ்சி! இதை எவரும் அதிக விருப்பமாய் ஏற்கமாட்டார்கள். சுயநல மூஞ்சி! இதைக்கண்டதும் மற்றவர்கள் ஏமாறுமல் ஜாக்கிரதையாய்விடுவார்கள். விபசார மூஞ்சி! இதைக்கண்டதும் அவரவர் தமது பெண்களைக் கடைசிகட்டுக்கு அனுப்பி மறைந்திருக்கச் செய்துவிட்டு வெளித்திண்ணைக்கு வந்து இந்த மூஞ்சியுடன் பேசி அப்படியே எழுந்துபோகச் செய்துவிடுவார்கள். பூனைமூஞ்சி! இது வீட்டுக்குள்ளேயே யிருந்து சுரண்டுகிற வேலை செய்யும். இதுவும் ஒருநாள் அகப்பட்டுக்கொள்ளும். பக்கத்துவீட்டு மூஞ்சி! இது அடிக்கடி இரவல் கேட்கவரும்! தன் உப்பை இரவல் கொடுத்துவிட்டு மறுநாள் காப்பித்தூள் இரவல்கேட்க வரும். காப்பித்தூளின் விலையென்ன, உப்பின் விலையென்ன! இரவல் வாங்கினதைப்பிறகு திருப்பித்தாவேதாது. இச்சகமூஞ்சி! இது தன் விருப்பத்தை ஜாடைகளாலும் கண்ணடி—புன்னகைகளாலும் தெரிவித்து, வீட்டுக்குள் இருக்கிற பெண்சொத்தை அடித்துக்கொண்டுபோய்விடும். அல்லது வீட்டுக்குள்ளேயே இருக்கவிட்டுப்பிள்ளையாரின் வயிருகவைத்து ஓடிவிடும். விருந்து மூஞ்சி! சாதம் ஆய்விட்டதா, எப்போது இலை விரிப்பார்கள் என்று எதிர்பார்த்தபடி யிருக்கும். ஓடுகிற மூஞ்சி! இதற்கு எத்தனை உபசரிப்பினும், எவ்வளவு செலவிடினும் மணியை எண்ணியபடியே ரயிலுக்குக் செல்வதல்தான் அதிக பரபரப்புகொண்டிருக்கும். பிடுங்கும் மூஞ்சி! இந்தவகையில் மருமகன், கணவன் வீடு சென்றபெண், வைத்தியன், பிராமணன், யாசகன் இன்னும் எவ்வளோ பேர்களைச் சேர்த்துவிடலாம். படிக்கும் மூஞ்சி! இது எப்போது பார்த்தாலும் ஏதாவது ஒரு புஸ்தகத்தைத் தொட்டுத்தின்று வயிறு உப்பியபடி கிடக்கும். இதுக்கு சோறு தின்னணுமே யென்கிற ஞாபகமே இருக்கிறதில்லை. படித்துப் படித்துப் பைத்தியமாய்ப் போகத்தான் தெரியும். சிடுசிடுக்கும் மூஞ்சி! இதை அந்தந்தக் குடும்பங்களில் காணலாம். துஷ்ட மூஞ்சி, போக்கிரி மூஞ்சி! குழிதோண்டுகிற மூஞ்சி! பிணம் தூக்கும் மூஞ்சி!

---

ஒரு குடும்பத்தின் நிலையை ஏதும் உட்புகுந்து காணுதவர் வெகு தூரமான ஊரிலிருந்தபடி ஒப்புக்கு இரண்டுவரி எழுதி நீ ஏன் உன்னவர்களோடு எதிர்க்கக்கூடாது என்று ஆவேசமூட்டித் தூண்டிவிடுவது அழகாகாது.

பிச்சையெடுக்கும் மூஞ்சி! ஆண்டி மூஞ்சி! சேவக மூஞ்சி! உத்தியோக மூஞ்சி! மந்திரி மூஞ்சி! ராஜாமூஞ்சி! போர்வீரன் மூஞ்சி! வேலை போய் விட்ட மூஞ்சி! உபகாரச் சம்பளம் பெறும் தொந்தி மூஞ்சி! வியாதிக்கார னின் மூஞ்சி! வியிருள்ளமூஞ்சி! சாகப் போகிறவனின் மூஞ்சி! செத்தமூஞ்சி! கவலைமூஞ்சி! கடன்பட்டவன் மூஞ்சி! பெண்டாட்டியிடம் பிடுங்கல்பட்ட மூஞ்சி! புருஷனிடம் அப்பளம் முது கில் வாங்கிய மூஞ்சி! ஏமாறிய மூஞ்சி! எலும்பு வீங்கிய மூஞ்சி! பேதிக்குச் சாப் பிட்டு 8—9—தடவை போய்விட்ட மூஞ்சி! கைதியானவன் மூஞ்சி! கள்ள னிடம் அகப்பட்டுக்கொண்டவன் மூஞ்சி! இப்படியே கெடுக மூஞ்சிகளை விகடன் சொல்லி அந்தந்த வேளைக ளிலே அந்தந்த மூஞ்சி சந்நிதிகளின் ஜோலிப்பு அந்தந்த மூஞ்சிகளிலே— நன்றாகத்தெரிந்துபோகுமென்றுவிஸ் தாரமாக விவரிக்கலாம். ஆனல், என் நஞ்சான் குஞ்சான்களுக்குக் குறிப்பு காட்டிவிட்ட அளவில் அவர்களே நீட்டிக்கொள்ளக்கூடிய புத்தி நாடி ஓட்டம் படைத்தவர்களானதால் விக டன் மூஞ்சிகளைப் பரப்பி விரித்தது போதுமென்று இவ்வளவுடன் என் தொனதொனப்பை நிறுத்திக்கொள்கி றேன். இதில் நீங்கள் எந்த மூஞ்சியாய் இருக்க ஆசைப்படுகிறீர்களோ! அது உங்கள் பிரியம்—இஷ்டம்போல நடக் கட்டும். கள்ளங்கபடமற்று கடவுளுக் குப் பயந்த நல்ல பரோபகார மூஞ்சிக ளாயிருந்தால் நல்ல சோறு அப்படிப் பட்டவர்களுக்குக் கல்லும் காவிரியும் இருக்கிறவரையிலும் கிடைக்கும். அவ்வளவே விகடன் சொல்லக்கூடும். ராம்! ராம்! சுபம்! சு! ஸ்வாஹா !!

---

## ஹித சத்துரு.

ஒருவன் தன் பக்கத்திலிருப்பவனைக் குறித்து மற்றோ ரிடத்திற்குக் கோள் சொல்லிக் கடிதம் எழுதிவிடுகிறான். பிறகு பக்கத்து மனிதனோடும் வெகு அன்பாய்க் குலாவி நிற்கிறான். இதை யறிகிற நாம்—நம்மைப்பற்றியும் இப்ப டியே வேறோரிடத்திற்கு எழுதி நெருப்பு மூட்டிவிட்டு நமது பக்கத்திலும் ஏதும் தெரியாதவன்போல் குலாவக் கூடுமென்று கருதி அந்த விஷமியிடம் எச்சரிக்கையா யிருப்பது நன்று. சிரித்துக்கொண்டே "சுண்ணும்பு" தடவ வருகிறவர்கள் பயங்கரமான அநுகூல சத்துருக்களாவர்.

ஒருசாமான் காணமற்போனவுடனே எவ்விதமேனும் அதை மறுபடியும் வாங்கிவிடவேண்டுமென்றமனம்எவ்வளவோஅவசரமும்ஆவலாதியும்கொண்டு உயர உயரப் பறந்து பிறகு நாட்கள் செல்லச் செல்லத் தணிந்துவிடுகிறது.

---

பத்து பதார்த்தங்களை சமைத்து அந்தக் கஷ்டத்தால் வெடுவெடுப்புடன் தெறிவிழுந்து அவற்றை உண்ணச் செய்வதிலும், இரண்டு பதார்த்தங்களைச் சமைத்து யாவரும் சந்தோஷமாய்ப் புசிக்கவைப்பது சிலாக்கியம்.




ஒரு தெருவுக்கு 4-5-தபாற்காரர்கள் மாறி மாறி வருவதில், அத்தனை பேருக்கும் தீபாவளி இனும் தருவதற்கு அதிகத் தலைநோவு எடுக்கிறதாம்! ஃ

பட்டாசு, மத்தாப்புகளைத் தான் சுடாவிட்டாலும், மற்றவர் சுடுவதைப் பார்க்கும் ஆசை போகக்காணோமாம்!

ஃ

மாலையில் புருஷன் முத்தமிட்டாலும், காலையில் தன்னை அடித்து உதைத்ததை மனைவி மறக்கமாட்டாளாம்! ஃ

ஆசை ஊன்றிவிட்டால், அழகு மூஞ்சியைக் கொடுத்தாலும் அதை நாடாமல் முன்பு ஆசைவைத்த அவலக்ஷண மூஞ்சியைத்தான் விரும்புமாம! ஃ

பேச்சுதான் பெரிய வேதாந்தமே தவிர நடக்கக்காணோமாம்! வழக்கமாயுள்ள குணப்போக்கின் இழிவும் மாறினபாடில்லையாம்!

ஃ

ஒரு பெண்ணையே ரதிசாஸ்திரத்தில் வெற்றிகொள்ள முடியாத ஆடவனுக்கு 2-3-பெண்டாட்டிகள் எதற்கென்றதற்கு--ஆசைப்பேய் தாளாமல் என்று அசரீரி பதில் சொல்லிற்றாம்!

ஃ

பிராந்திபுட்டிக்கும் ஆசையாய் இருக்கிறது. அதிகப் பணம் தந்து அதை வாங்கவும் கஷ்டமாயிருக்கிறது என்று ஒரு குடியர் கூறுகிறார்.

ஃ

தீபாவளியுடன் அமாவாசை நாளும் கூடிக்கொண்டதால் அவ்வளவாகக் கறிதின்றுகொண்டு மிதமிஞ்சிக் குடித்துக் குதூகலப்பட முடியவில்லையாம்! ஃ

எந்த வியாபாரம் குறைந்தாலும், வயிற்றுப்பசி, அறிவுப்பசி, நாவல் கதைப் பசி வியாபாரம் ஒருநாளும் குறையாதென்று விகடேசர் பந்தயம் போடுகிறாராம். ஃ

ஒரு சங்கதியைத் தெரிந்துகொண்டும், தெரியாததுபோல் கேட்பவர்களுக்கு நீயும் அவர்கள் கேட்பதைத் தெரியாததுபோ லிருந்துவிடுவதே நல்லதாம்! ஃ

சின்னஞ்சிறு குட்டியானாலும் பெத்தப்பெரிய தாதாவைக் கட்டிக்கொண்டால் பாட்டி முறைதானாம்!

ஃ

பட்டாசுக் கட்டுகளாக எத்தனை தந்தாலும் அதற்குக் கணக்கு இல்லையாம். பணமாகத் தந்தால்தான் கணக்காம்! ஃ

தாலிக்காரக் கழுத்துக்குமட்டுமல்ல, ஊரில் அலையும் வெறுங்கழுத்துக் காரிகளுக்குக்கூடக் கவலையும் கண்ணீருந்தானாம்! ஃ

தர்மபுத்திரரைவிட இனிமேலும் குழந்தை பிறக்கும் என்று காத்துள்ள பிள்ளையில்லாதாரின் பொறுமையே ரொம்ப பெரிசாம்! ஃ

எல்லா யோக்கியதையும் அவரவர் அவிழ்க்கிற—விழுங்குகிற பணத்திலிருக்கிறதாம்! ஃ

இருக்கிறவன் கொஞ்சம் கோணினால்சிறைக்கிறவனும் கோணுவானாம்.

ஃ

பிறர் செலவிலேயே தன் வீட்டுக்குக் காய்கறிகள் வாங்கிக்கொண்டு, அவர்களுக்கும் துணை நின்றதுபோல் நடிக்கவேண்டுமாம்! ஃ

தலைப்பாகையின்வெண்மைக்கும், பேச்சின்உயரத்திற்கும்தக்கபடிஊரை மயக்கி வாயில் போட்டுக்கொள்ள வசதிகள் அநேகம் கிடைக்குமாம்!

# மானச அறிவும் சிகிச்சையும்

மனோ வைத்தியத்துக்கு இன்றியமையாததா யுள்ளது வியாதியஸ்தனுடைய பூரண நம்பிக்கை. மக்களுக்குள்ளது இரண்டு மனசு. ஒரு மனசு அல்ல. ஒன்றை வெளிமனம் அல்லது மனசு என்றும், மற்றொன்றை உள்மனம் அல்லது உள்ளம் என்றும், நாம் பேசிக்கொண்டு போவோம். ஃ

ஒரு குறிப்பிட்ட மனிதனை ஹிப்னடைஸ் செய்துவிட்டால், அதாவது அவன்றன் மனசை உறங்க வைத்துவிட்டு, உள்ளத்தைப் பிரகாசிக்கச் செய்துவிட்டால், அவன் தற்சமயத்துக்கு நாம் எதை எப்படிச் சொன்னாலும் நம்புவதிற் றடையில்லை.

ஃ

அடே! நீ நாயடா!

என்றால், நாய்போல் அவன் குலைக்கவும் ஆரம்பித்துவிடுகிறான். நீ மகாராஜன் என்றால், மகாராஜனைப் போலவே நடிப்பான். குரங்கென்றால் குரங்கைப்போலவே கூத்தாடுவான். (Stage Hypnotism) இஃது உண்மை. ஃ

ஆகலான், நாம் ஒரு வியாதியஸ்தனுடைய நோயை யொழிக்கும்படி,-- அடே உனக்கு நோயில்லை; நோய் உன்னைவிட்டுப் போகிறது; இதோ போகிறது பார்! இதோ போய்விட்டது!—என்று அவனைப் பார்த்துக் குறிப்பாக எச்சரிப்பதால் (By suggestion), அவன் மனம் மட்டும் எதிர்வேதம் பேசாமல் இருக்குமானால் அவன் தன் உள்ளம்—ஓம் (ஆம்) என்று சொன்னதை உண்மையென்றே நம்பும். ஃ

உள்ளந்தான் தேக வுறுப்புக்களையெல்லாம் கிரமப்பிரகாரம் நடப்பித்துக் காத்துவருகிறதாதலின், உடனே எந்தத் தேக வுறுப்பில் எந்தவிதமான தோஷம் நேரிட்டு வியாதி யுண்டாயிற்றோ, அந்த உறுப்பில், அந்த தோஷத்தைக் கணத்தில் ஒழித்து வியாதியைத் தீர்த்துவிடும். (Christian Science) கிறிஸ்டியன் சையன்ஸ் என்ற வித்தையால் அமெரிக்காவில் பலர் வியாதியைக் குணப்படுத்துவதை விசாரித்து உண்மையறிக. ஃ

ஆயினும் மருந்தினால் ஒரு பிரயோஜனமும் இல்லையா?

சில மருந்துகள் போஜன பதார்த்தங்களைப்போலவே தங்கள் சத்தை (essence) நம்முடைய தேகத்தில் வாழும் சிற்றுயிர்கட்குத் (cells) தருகின்றன. அவைகளால் சிற்றுயிர்கட்குப் போஷிப்பு உண்டாகின்றன. சிற்றுயிர்கள் பலவீனம் ஒழியப்பெற்று வலிவடைந்தால் நம்முடைய தேகங்களும் பலவீன மொழிந்து, வியாதி நீங்கி வலிவடைகின்றன. மற்றுஞ் சில மருந்துகள் உறங்குகின்ற மகனை யொருவன் தட்டி யெழுப்புவது போலவே, தேகத்தில் வாழும் சிற்றுயிர்கள் உறங்கும்போது அவை

---

ஒரு பெருங்கூட்டத்தில், ஒரு விருந்தில், ஆசிரியத்துவ வரம் வாய்ந்த பெரியோர்கள் இரண்டொருவரே யிருக்கலாம். அதுவும் அரிதாகலாம்..

களைத் தூண்டியெழுப்பிக் கிரமப்பிரகாரம் அவைகளைத் தத்தம் தொழில்களைச் செய்யும்படி ஏவுகின்றன. மருந்துகள் செய்யக்கூடியன இவையேயாம். நமது உள்ளத்திடம் அசாத்திய வைத்திய சக்தி இருப்பதால் நூலமருந்து கொடாமலே உறுதியைத் தரத்தக்க எச்சரிக்கையான சொற்களைப் பிரயோகித்த மாத்திரத்திலேதானே (by mere Suggestion) சர்வ வியாதிகளையும் குணப்படுத்தக் கூடுமென்று கூறுவர்.

முதல் நாள் அதிக உபசாரம். பிறகு வரவரக் குறைத்தல் என்பதைவிட முதல் நாள் கையிலை, மறுநாள் ...தயிலை, பிறகு வாழையிலையாகப் படிப்படியாய் உபசாரத்தை அதிகப்படுத்தி, ஊர் போகிறநாளில் கனத்த விருந்துநடத்தி, உன் மீது குற்றப்பேச வகையின்றி மயங்கச் செய்துவிடு. முதல் தினத்து நெய்யில்லாச் சோற்றுக்குப் பழித்த வாய் பிறகு கடைசிநாளின் பாயசம் வடையைக்கண்டு அடங்கிவிடும். பட்டும் படாமலும் போ.

ஃ

வாயினால் எச்சரிக்கை செய்வது போலவே சில வேளைகளில் மனவலிவுடையோர் வாயைத் திறந்து ஒன்றைச் சொல்லாமலே மனதினால் எச்சரிக்கை செய்து (By Telipathic suggestion) யாதொருவனுடைய வியாதியைக் குணப்படுத்தி விடுகின்றனர். இதில் மந்திர தந்திரம் இல்லை. மானச அறிவுகொண்டு சிகிச்சை செய்யும் திறனும் பயிற்சியுமே இதில் அடங்கியுள்ளது. இது மேதாவிகள் செய்யும் மஹா காரியம்.

---

வியாதியஸ்தன் சாப்பிடுவது ஒரு பக்ஷணமானால் அவன்பேரைச் சொல்லித் தயாரித்து வீட்டிலுள்ளோர் சாப்பிடுவது ஒரு கூடைப் பக்ஷணமாம்.

---

பேஷ்! வெகு நல்ல அனுபவமாக இருக்கிறதென்கிறார்கள் படிப்போர். அந்தவித அனுபவமாய் வரைவதற்கு அந்தத் துரதிர்ஷ்டசாலி எவ்வளவு பாடுகள் கண்டு—நொந்து—கண்ணீர்விட்டு—தெரிந்து—பின் எழுத்தில் நுழைத்தானோ? அதை யறிந்தார் யார்? எந்த அனுபவத்திற்கும் ஒரு வரலாறு உண்டு.

---

மனைவி மக்கள் எல்லோரையும் தனது கோபத்தில் கொலை செய்துவிட நினைக்கிறான். பிறகு தனது புத்திப் பலத்தால் கொலைசெய்து விட்டதுபோல் மனோராஜ்யம் செய்து அதன்மேல் நடப்பதென்ன வென்று யோசிக்கையில் தனக்குத் தூக்குத் தண்டனையும் கொலைப்பாதகமுமே லாபம் என்று தெரிய வருகிறது; சீ இந்தவழி வேண்டாம், சேர்ந்திருக்கவே பார்ப்போம் என்று மறுபடியும் கூடி வாழ்ந்திட எண்ணிச் சாந்த மடைகிறான்.

# அதிர்ஷ்ட வேட்டை!



நான் பி. ஏ. பரீக்ஷை தேறியதும் ஒரு 'கொயர்' காகிதம், ஒரு ரூபாய்க்கு ஓராறுத் தலைகள் இவைகளை வாங்கிவந்து எங்கெங்கு வேலை கிடைக்குமென்று தெரிந்ததோ அங்கங்கெல்லாம் ஒரு மனுவைப்போட்டு விட்டுத்தான் உட்கார்ந்தேன். "கல உமி தின்றால் ஒரு அவல் தட்டாதா" வென்பது என் எண்ணம்! இத்தனை மனுக்களில் ஏதேனு மொன்றினால் வேலை கிடைக்குமென்று ஆவலே வடிவாய் ஒவ்வொரு நாள் தபாலையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். உத்திரவு கிடைக்காத ஒவ்வொரு நாளையும் 'நாளை வரும் நாளை வரும்' என்றெண்ணி சமாதானமாய்க் கழித்தேன். இவ்வாறு ஒரு மாதஞ் சென்றும் மனுக்களெல்லாம் கிணற்றில் போட்ட கல்லைப்போலிருந்தனவேயன்றி ஒன்றிற்கேனும் உத்திரவு கிடைக்கவில்லை. இதனால் என் மனம் ஏங்கியது.

ஒருநாள் என் ஏக்கம் நீங்க தபாற் சேவகன் ஓர் நீண்ட உறையைக் கொடுத்தான். படபடத்த மனதுடன் அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தேன். தென்னிந்திய ரெயில்வே 'ஆடிட்' ஆபீஸில் 'கிளார்க்' வேலைக்கு ஆள் வேண்டுமென்றும் நேரில் வந்து யோக்கியதாம்சங்களைக் காட்டி வேலையை ஒப்புக் கொள்ளலாமென்றும் அதில் எழுதியிருந்தது. நான் அடங்கா மகிழ்ச்சியுடன் நல்ல கோட், கியாப்புடன் ஆபீஸுக்குச் சென்று என் யோக்கியதாம்சங்களைச் சொல்லி பல 'சர்ட்டிபிகேட்'டுகளையுங் காட்டி வேலையி லமர்ந்தேன்.

ஆரம்பத்தில் சம்பளம் இருபத்தெட்டு ரூபாய் தான். இதைவிட உயர்ந்த சம்பளமுள்ள வேலையில் அமரவேண்டுமென்ற எண்ணம் என் மனதிற்குள் ளிருந்தாலும் இப்பொழுது எங்ஙனமேனும் ஒட்டிக்கொண்டால் அதிக சம்பளத்தை அப்புறம் பார்த்துக் கொள்ளலாமென்று கருதினேன். ஏனெனில் இம்மாதிரி இடங்களில் வேலை கிடைப்பது கஷ்டமென்றும், இவ்வாபீஸில் வேலை பார்ப்பவர்கள் பாக்கியவந்தர்களென்றும், இதில் நுழைந்து கொண்டால் பின்னால் எத்துணையோ நல்ல பதவிக்கு உயரலாமென்றும் கேள்விப்பட்டிருந்ததோடு அறிந்து மிருந்தேன்.

வேலையிலமர்ந்த ஆறாவது மாதத்திலேயே 'ஹெட்கிளார்க்' தன் உத்தியோகத்திலிருந்து வேறு வேலைக்கு மாற்றப்பட்டுப் போய்விட்டா ராகையால் அவர் ஸ்தானத்துக்கு அநுபோகம் வாய்ந்த பல 'கிளார்க்'குகளிருக்க, என்னுடைய வேலைத் திறமையைக் கண்டு என்னை அந்த ஸ்தானத்தில் உட்கார வைத்தார்கள். உத்தியோ

---

சிலசமயங்களில் செய்துவிடும் காரியங்கள் அந்தரங்க சுத்தியைச் சோதிப்பனவாயுள்ளன. ஒரு குறித்த விஷயம் தவறல்லவென்று மற்றவர்களுடன் எப்படியோ பேசிச் சமாளித்தாலும் தன் மனஸாக்ஷியை ஏமாற்ற முடியவில்லை. மாமிசபக்ஷணம், வியபிசாரம் தவறல்லவென்று கூறினும் மனசாக்ஷி தவறு என்றே பேசுகிறது. இவ்விதமே தன் மனம் ஒப்பாதவைகளும் பல.

கம் உயர சம்பளமும் தொண்ணூறாக மேல் ஸ்தானம் பெற்றது. இவ்வேலையிலேயே இரண்டு வருடஞ் சென்றது. என் சுறுசுறுப்பையும் வேலையில் காட்டும் அக்கரையையும் திறமையையுங் கண்டு ஆபீஸிலுள்ளோர் அதிசயித்தனர்.

இந்த சமயம் கிழவராயிருந்த 'அக்கௌண்டண்ட்' காலமானார். உடனே அந்த ஸ்தானத்தை நான் கைப்பற்றினேன். சம்பளமென்ன? முன்னூற்றைம்பது! இப்பொழுது என் மனம் மகிழ்ச்சியால் பூரித்தது. என்றாலும் இன்னும் மேல் உத்தியோகத்தைத் தாவிப் பிடிக்கவே மனதிற்குள் ஆசை யடித்துக்கொண்டது. இந்த வேலையில் சம்பளத்தோடு 'மேல் வரும்படி'யையுங் கண்டேன். நான் சுறுசுறுப்புடனும் வெகுசாமர்த்தியத்துடனும் ஆபீஸ் காரியங்களை ஒழுங்காக நடக்கும்படி செய்து வருவதை ரெயில்வே ஏஜண்டு அறிந்து அடுத்த வருஷம் 'அஸிஸ்டெண்ட் ஆடிடர்' உத்தியோகத்தை எனக்களித்தார். சம்பளம் நானூற்றைம்பது. பின்னுமொரு வருஷம் போக 'ஆடிடர்' ஆனேன். எண்ணூறு ரூபாய் சம்பளம்.

இப்பொழுது கும்பகோணத்திலிருந்த என் தாய் மாமன் தன் பெண் கமலாக்ஷியை எனக்குக் கலியாணம் செய்து தருகிறேனென்று கடிதத்திற்கு மேல் கடிதமெழுதித் தொந்தரவு செய்தார். நான் வேலையிலமராததற்கு முன் என் தந்தை அப்பெண்ணை எனக்கு விவாகம் செய்யக் கேட்டபொழுது நான் ஏழையாயிருக்கிறேனென்ற காரணத்தை மனதில் வைத்துக்கொண்டு பெண் சிறியதாயிருக்கிறதென்று மறுத்து விட்டவர். இப்பொழுது வலிய வருவதைக் கண்டதிசயித்தேன். ஐயாயிரம் ரூபாய் வரதக்ஷிணை கொடுத்தால் கலியாணம் செய்துகொள்ள இஷ்டந்தானென்று நானே கடிதமெழுதினேன். நான் பெரிய உத்தியோகம் வகிக்கிறேனென்பதற்காக என் மாமா அதற்கிசைந்து தன் பெண்ணை எனக்குக் கலியாணஞ் செய்து கொடுத்தார். ஆறுவது மாதத்தில் என் மனைவி புஷ்பவதியானாள்.

ஒரு வருஷஞ் செல்ல, ஆயிரத்து இருநூறு ரூபாய் சம்பளமுள்ள 'சிப் ஆடிடர்' ஸ்தானத்தி லேறினேன். இந்த சமயம் கும்பகோணத்திலிருந்து என் மாமா, பெண்ணுச்குச் சாந்திக் கலியாணஞ் செய்யவேண்டுமென்று கடித மெழுதினார். அப்பொழுதும் நான் ஐயாயிரம் ரூபாய் கொடுத்தால் தான் இசைய முடியுமென்று கண்டிதமாய்க் கடித மெழுதினேன். என்னை அவமதித்த என் மாமாவுக்கு இதனால் அறிவு கொளுத்தவேண்டுமென்பது என் எண்ணம். இவ்வாறு நான் இரண்டாமுறை ஐயாயிரம் ரூபாய் கேட்டதால் என் மாமா ஆயாசமடையாமல் என் உத்தியோக மேம்பாட்டில் பரவசமுற்று எங்கோ கடன் வாங்கி ஐயாயிரம் ரூபாயில் அரைத்தம்பிடியுங் குறையாமல் என் கையிலேயே கொடுத்து 'ஸ்பிரிங் காட்' முதலிய சீதனப் பொருள்களெல்லாம் கொடுத்து சாந்

---

**ஆசை என்பது அறிவை மறைக்கும் திரையாகும்.**

---

குற்றங்கண்ட அப்போதே அவன் முதுகில் வண்ணான் துணியை வெளுப்பதுபோல் பளார் பளார் என்று இரண்டு அறை கொடுத்துத் திருத்தியிருந்தால் இப்போது இந்தமாதிரி கெடுவானா?

திக் கலியாணத்தைச் சிறப்பாக நடத்தி வைத்தார். அப்பொழுது என் மனமடைந்த சந்தோஷ பூரிப்பை அநுபவித்தே அறியவேண்டும். என் மாமா கும்பகோணம் சென்ற மறு நாளே பத்தாயிரம் ரூபாய்க்கு ஒரு 'செக்' எழுதி அவர் பெயருக்கு, 'ரிஜிஸ்டர்' செய்து அனுப்பினேன். இந்த என்செயலைக்கண்டு என் மாமா 'மாப்பிள்ளை அந்தரங்கத்தில் இத்துணை உயரிய எண்ணமுடையவரென்று நான் எண்ணவேயில்லை; எனக்கு இதனால் நல்ல புத்தி கற்பித்தார்' என்று பிறரிடம் சொல்லி மகிழ்ந்தாராம். அவர் தன் குற்றமுணர்ந்த ஒன்றே எனக்கு மனத்திருப்தி யளித்தது.

நாலைந்து வருடங்கள் கழிந்தன. இப்பொழுது என ஆஸ்தி இலக்ஷத்திற் கதிகமாய் உயர்ந்திருந்ததை யறிந்து என் மனம் இன்ப பூரித முற்றது. ஏழையா யிருந்தபொழுது என்னை ஏறெடுத்தும் பாராதவர்கள் இப்பொழுது என்னைப் பார்க்கத் தெருவில் நெடுநேரங் காத்துக் கிடப்பதையும் என்னை லக்ஷியம் செய்யாதவர்களெல்லாம் எனக்குச் 'சலாம்' செய்து என் தயவை நாடுவதையுங் கண்டு அதிசயித்தேன். பணத்திற்குள்ள மகாத்மியத்தையும் உத்தியோகத்திற்குள்ள செல்வாக்கையு மறிந்து பின்னும் பின்னும் பணஞ் சேர்ப்பதிலும் உயர்ந்த உத்தியோகத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்து தருணம் வாய்த்தபொழுது தாவிச் சென்று சிம்மாசனம் போட்டுவிடுவதிலும் கண்ணுங்கருத்துமுடையவனாயிருந்தேன்.

ஆங்கில பாஷை எனக்குத் தண்ணீர்போல வரும். அதனால் ஐரோப்பியர்கள் சிநேகம் அதிகம். ஆடையுணவுகளெல்லாங்கூட அவர்களைப் போலவே நானுங் கைக்கொண்டு அரை ஐரோப்பியனாக மாறியிருந்தேன். இதிலேயே மதிப்பிருக்கிறபடியால் இவ்வாறு செய்ய நான் பின் வாங்கவில்லை. நான் ஐரோப்பிய உடை யணிந்திருப்பதற்கும 'ஹாட்' தலைக்கும், சிவத்த தோலுக்கும் என்னைப் பார்க்கிறவர்களுக்கு ஐரோப்பியனோ வென்று ஐயத்தை யுண்டாக்கி ஒருவிதக் கவர்ச்சியையு மளித்தது. இந்தக் கவர்ச்சியால் ரெயில்வே ஏஜண்டும் என்னிடம் வெகு பிரியமாய் வார்த்தையாட ஆசைப்படுவார். நான் வேலையில் புலியென்பது அவர் அபிப்பிராயம். கெட்டிக்காரனா யிருப்பவன்பேரில் ஒரு அபிமானங் கொள்வது ஆங்கிலேயருக்குள் ஒரு வழக்கம். நாளேற நாளேற ஏஜண்டின் பிரியமும் மதிப்பும் வளர்ந்து என்னைத் தன்னிடம் தலைமைக் காரியதரிசியாக அமர்த்திக் கொண்டார். அவ்வேலையில் ஏஜண்டுக்குத் திருப்திகரமாக நடந்துகொண்டும் அவரது அன்பையும் ஆதரவையும் மேலும் மேலும் வளரச் செய்தேன்.

இவ்வளவுவைபவமாக நான் படிப்படியாய் உயர்ந்து வாழ்ந்து வரும் நாளில் ஏஜண்டவர்கள் தன் நண்பரொருவருக்குத் தன் வீட்டில் விருந்தொன்று நடத்தினர். அதற்கு நானும் போயிருந்தே னென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? எல்லோரும் சிற்றுண்டிகளை யுண்டு தேத்தண்ணீர் பருக ஆரம்பித்தோம். அப்பொழுது

கடன் கொடுத்த செட்டியார் மாதத்தில் ஆறுதடவை வந்து தங்கியிருந்துண்டு சென்றுகொண்டிருந்தார். அது பெருந்தொல்லையும் செலவுமாயிருக்கவே, அடுத்த இரண்டு மாதங்களில் அவர் கடன் முழுதும் தீர்த்துவிட, அதன்பின் அவர் வருவதும் நின்றுவிட்டது. வருவதிற்கும் வழியில்லை.

ஒரு ஈ என் மூக்கில் நுழைய, தேத்தண்ணீர் மூக்கின் வழியாய் வெளிவரும்படி ஒரு பெருந் தும்மல் தும்மினேன். கண்களிரண்டிலும் நீர் வந்தது. என் கைத்துண்டால் கண்களைத் துடைத்துக்கொண்டு கண்களை விழித்துப் பார்த்தேன். ஏஜண்டையோ ஏஜண்டு வீட்டையோ நான் காணவில்லை. திகைத்தேன். மனம் படபடவென்று அடித்துக்கொண்டது. "எண்டாப்பா இன்றைக்கு இத்தனைநாழி தூங்கி விட்டாய்?" என்று கூட்டிக்கொண்டிருந்த என் தாய்கேட்டது செவியிற் பட்டது. அப்பொழுதுதான் நான் அநுபவித்த உத்யோக அதிர்ஷ்ட வேட்டைகளெல்லாம் வெறுங் கனவென் றுணர்ந்து வெட்கினேன். என்னுடைய உத்தியோகப் பேராசைகள் இருந்தவாறென்னே! என்னே!!

T. S. குழந்தைவேலு முதலியார்.

[அதிர்ஷ்ட வேட்டை சிலருக்கு வீண் மனோராஜ்யமாயும் கனவாயும் முடிய, வேறு சிலருக்கோ உண்மையாகவே அது பலித்துபடிப்படியாய் மேலுக்கு உயர்த்துவிடுகின்றது. ப-ர்.]

---

அவனும் இவனும் சண்டையிட்டுக் கொள்வதில் கோபித்துக்கொண்ட மனிதன் தன் பந்துவின் வீட்டில்போய் குந்திக்கொள்கிறான். அந்தப் பந்துவோ இவர்களுக்குள் சண்டையானால் என் வீட்டில்வந்து உட்கார்ந்து அதிகசெலவு வைக்கிறார்களே யென்று ஒலமிடுகிறான். வந்தவனும் பலநாளைக்கும் போவதில்லை. பிறகு பந்துவும் ஜாடையாகத் தன் சம்சாரப்பளுவு அதிகரிப்பதைப்பற்றி சொல்லப்போக, வந்து குந்தியவன் அந்தப் பந்துவையும் நாலு திட்டு திட்டிவிட்டுத் தன் வீடுபோய்ச் சேருகிறான். இத்தனைநான் கஷ்டப்பட்டுப் போட்டதற்கு இந்தத்திட்டு லாபம் போலும்!

---

குரங்குக் கையும், தோல்வாயும், பக்குவயௌவனமும் சும்மா இருக்குமா?

---

உத்தமர்களின் மனது புண்படச் செய்ததற்குச் சோதனைகள் கிடைக்காமலில்லை. ஆனால் அதை அநுபவிப்பவர்கள் வெளியிட்டுக்கொள்வதில்லை.

---

அந்த மனுஷ்யனின் முகத்தைப் பார்க்கும்பொழுதே நம்மை ஏமாற்றி மோசம் செய்யக் கூடுமென்று தோன்றும்படியான முகங்களுடன் சிலர் சில கடைகளில் உட்கார்ந்துள்ளார். அவர்களின் செய்கையும் அப்படியே இருக்கிறது. ஆயினும் சில சமயங்களில் ஏமாறி அவர்களிடமே போகும்படியும் வருகிறது. அதுவும் வேளைப்பிசகுதான்.

---

தங்கம் சேர்ந்தது என்று வைத்தியர் தருகிற சிறு அளவுள்ள மருந்தில், ஒரு அணு தங்கம் சேர்ந்திருக்குமா என்பது கூட சந்தேகமே. வைத்தியப் புளுகு, ஜோஸ்யப்புளுகு, தாசியின் புளுகு இரத்தின வைர வியாபாரத்திலுள்ள புளுகு—இந்த புளுகுகளுக்கு அளவுகண்டு சொல்ல முடியாது.

# " அமிர்த குணபோதினி "

## பிரமோதூத வருஷத்திய கார்த்திகை மாத பஞ்சாங்கம்.

| யோகம் | தேதி | தமிழ் | வார | திதி, நக்ஷத்திரம், விரதாதிகள் முதலியவை. |
|---|---|---|---|---|
| அ | 16 | 1 | ஞா | ஏகா 40-44, உத் 28-23, ஏகாதசிதிதி, முடவன்முழுக்கு |
| சி-பி | 17 | 2 | தி | துவா 35-45, ஹஸ் 25-4, துவாதசிதிதி. |
| சி | 18 நவம்பர் (15—29) | 3 | செ | திர 31-8, சித் 22-5, அகஸ் 28-28. |
| சி | 19 | 4 | பு | சது 27-10, ஸ்வா 19-47, பத்மனுபர். |
| சி | 20 | 5 | வி | ● 24-8, விசா 18-14. |
| சி-ம | 21 | 6 | வெ | பிர 22-11, அநு 17-50, மார்க்கசிர சுத்தம். |
| சி | 22 | 7 | ச | துவி 21-38, கேட் 18-38, சாபாயனம் 59-38, [ரஜ்ஜப்மீ 1உ. |
| அ-சி | 23 | 8 | ஞா | திரி 22-32, மூல 20-55, அகஸ் 28-23, மூர்க்கர். |
| உ-ம | 24 | 9 | தி | சது 24-58, பூரா 24-44, சிறப்புலி. |
| பி-சி | 25 | 10 | செ | பஞ் 28-58, உரா 29-55, நாகபஞ்சமி. |
| சி-பி | 26 | 11 | பு | ஷஷ் 34-20, ஸ்ரவ 36-27. |
| சி-ம | 27 | 12 | வி | ஸப் 40-30, அவி 43-46. |
| சி | 28 | 13 | வெ | அஷ் 46-57, சத 51-15, அகஸ் 28-16. |
| சி | 29 | 14 | ச | நவ 53-1, பூட் 58-22. |
| அ | 30 | 15 | ஞா | தச 58-11, உட் 60-0, ஸத்தியகிரி. [நாதர். |
| சி | 1 | 16 | தி | ஏகா 60-0, உட் 4-35, திருவண்ணாமலை ரதம், ஸத்திய |
| சி | 2 டிசம்பர் | 17 | செ | ஏகா 1-53, ரே 9-24, கைசிக ஏகாதசி. |
| ம-சி | 3 | 18 | பு | துவா 3-51, அசு 12-31, பரணி தீபம், அகஸ் 28-11. |
| சி-ம | 4 | 19 | வி | திர 4-2, பர 13-55, கிருத்திகா தீபம். |
| சி-ம | 5 | 20 | வெ | சது 2-26, உப ○ 56-54, கிரு 13-35, விஷ்ணு—ஸர்வா [லய தீபம், கணம்புல்லர், திருமங்கையாழ்வார். |
| அ-சி | 6 | 21 | ச | பிர 55-0, ரோ 11-49, ரகுநாதர், திருப்பாணாழ்வார். |
| சி | 7 | 22 | ஞா | துவி 49-43, மிரு 8-55. [அபிஷேகம். |
| சி-அ | 8 | 23 | தி | திரி 43-53, ஆரு 5-9, அகஸ் 28-8, திருக்கழுக்குன்றம் |
| சி | 9 | 24 | செ | சது 37-47, புந 0-58, உப 55-39. |
| சி | 10 | 25 | பு | பஞ் 31-40, ஆயி 52-22, அக்ஷோபியர். [அபிஷேகம் |
| அ-சி | 11 | 26 | வி | ஷஷ் 25-53, மக 48-27, ஷஷ்டிதிதி, திருக்கடவூர் |
| சி | 12 | 27 | வெ | ஸப் 20-30, பூர 45-0, திதித்வயம். [பொருள். |
| உ-ம | 13 | 28 | ச | அஷ் 15-43, உத் 42-7, நவமிதிதி, அகஸ் 28-6, மெய்ப் |
| அ-சி | 14 | 29 | ஞா | நவ 11-29, ஹஸ் 39-52, விரிஞ்சிபுர கடைஞாயிறுத்ஸ [வம், ஆளுயர், தசமிதிதி. |

| | | | |
|---|---|---|---|
| பா | | | குரு |
| | 15உக்கு ராசி. | | செ |
| சனி | ரவி,பு,சுக | | கே |

"அமிர்த குணபோதினி" பிரஸ், 302, தங்கசாலைத் தெரு, சென்னை, 1930.